வாலி வழக்கு

வள்ளுவர் பண்ணை

BIBLIOGRAPHICAL DATA

Title of the book	—	VAALI VAZHAKKU
Author/ Date of Birth	—	Purisai Su. Murugesa Mudaliar 11-11-1900
Language	—	Tamil
Edition	—	First
Date of Publication	—	August 1977
Copy right holder	—	AUTHOR
Paper used	—	10·9 K.g. Printing
Size of the book	—	18·5 × 12·5 Cms.
Printing Points	—	10 Points
No. of Pages	—	XVI, 113
No. of copies Printed	—	1600 Copies
Printer	—	Jeevan Press, Madras-600005
Artist	—	Simga.
Binding	—	Card Board Binding
Price	—	Rs. 3-50
Publisher	—	VALLUVAR PANNAI 19-IInd Main Road, C. I., T. Nagar Madras-35.
Subject	—	Literature
Summary	—	Justification for murder of Vali by Rama in Kambaramayanam
Call number	—	0, 31, IF 50, R g.

வாலி வழக்கு

முத்தமிழ்ப் பெருஞ்சொற் கொண்டல்

புரிசை சு. முருகேச முதலியார்

வள்ளுவர் பண்ணை

19. 2வது மெயின் ரோடு சி.ஐ.டி.நகர். சென்னை-35

முதற் பதிப்பு : ஆகஸ்டு, 77.
உரிமை ஆசிரியருக்கு

விலை ரூபாய் 3-50

அச்சிட்டோர் :
ஜீவன் அச்சகம், சென்னை-5.

பதிப்புரை

இரத்தினகிரிச் சித்தர் பெருமானுன பால முருகன் அடிமையாகிய சுவாமிகள்பால் பற்றும் பணிவும் கொண்டொழுகும் யான், திருக்கோயில் செல்வதும், திருநெறி பரப்பும் சுவாமிகளை வணங்கு வதும் வழக்கமாகக் கொண்டுள்ளேன். முத்தமிழ்ப் பெருஞ்சொற் கொண்டலாகிய புரிசையார் அவர் களை, யான் இளம்போதிலேயே கேட்டறிந்தவன்.

சுவாமிகள் புரிசையாரை அறிமுகப்படுத்தி,அவர் வரைந்துள்ள "வாலி வழக்கு" என்னும் கம்பராமா யண நுண் பொருள் விளக்கக் கட்டுரையைக் காட்டினுர்கள். இலக்கிய ஆர்வம் நிரம்பிய எனக்கு அக்கட்டுரை கரும்பாய் இனித்தது. யான் பெற்ற இன்பத்தை அச்சிட்டு வழங்கி யாவரும் பெற்று மகிழவேண்டும் என்னும் விழைவாலும், சுவாமிகள் அருளாலும், திரு. புரிசையாரின் இசைவாலும் இவ் வடிவில் இந்நூல் வெளிவருகின்றது.

இவ்வழகிய நூலுக்கு அணிந்துரை வழங்கிய அற நிலையத்துறை ஆணையர் திரு எம். கே. பாலசுப்ர மணியம், ஐ. ஏ. எஸ். அவர்களுக்கும், அருந்தமிழ்ப் புலவரும் 'திருக்கோயில்' ஆசிரியருமாகிய திரு. ந. ரா. முருகவேள் அவர்களுக்கும், என் மனங்கலந்த நன்றி.

இரு பெருங்கடல்களாக இலங்கும் பாரதம், இராமாயணம் என்னும் பார காவியங்களின் விளக்கவுரைப் பெருந்தகையாக விளங்கும் புரிசை யாரின் கட்டுரைகளைத் தொடர்ந்து வெளியிடும் விருப்பமுடைய எங்களைத் தமிழ் உலகம் ஊக்கி வர வேற்கும் என்னும் துணிவோடு இதனை வழங்கி மகிழ்கின்றோம்.

சென்னை
2-8-77

ந. பழநியப்பன்,
வள்ளுவர் பண்ணை.

56 — 4

அணிந்துரை

திரு. எம். கே. பாலசுப்பிரமணியம், ஐ. ஏ. எஸ்.,
ஆணையாளர், அற நிலையத்துறை, சென்னை-34

நமது இந்திய நாட்டின் இரண்டு சிறந்த கண்கள் போல இலங்குவன, இராமாயணம் மகாபாரதம் என்னும் இருபெரும் இதிகாசங்களாகும். வடமொழியில் வான்மீகர் பாடிய இராமாயணமும், வேதவியாசர் எழுதுவித்த மகா பாரதமும்போல, நம் தமிழில் கம்பர் பாடிய இராமாயண மும், வில்லிபுத்தூரார் இயற்றிய மகாபாரதமும், மிகவும் புகழ்சிறந்து விளங்குபவை யாகும்.

கம்ப இராமாயணம், தமிழ் இலக்கியச் செல்வங்களுள், கவிதைச் சுவைக்கு மிகவும் சிறந்ததொன்ருக, அறிஞர்களால் பெரிதும் போற்றப்பட்டு வருகின்றது, "யாமறிந்த புலவ ரிலே கம்பனைப் போல் வள்ளுவர்போல் இளங்கோவைப் போல், பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை" என்று பாரதி யார் கம்பரைப் புகழ்ந்து பாடியிருக்கின்ருர். "கம்ப நாடன் கவிதையிற்போல் கற்ருேர்க்கு இதயம் களியாதே" என்பது கற்றுவல்ல புலவர்கள் கண்ட முடிபு.

அத்தகைய கம்பராமாயணத்தில், அறிஞர்களிடையே ஐயமும் மயக்கமும் வழக்கீடும் நிகழ்ந்து வருதற்குரியனவாக உள்ள செய்திகள் சிலவற்றில், "வாலி வதைப்படலம்" என் பதும் ஒன்ருகும். வாலியை இராமன் மறைந்து நின்று அம்பு எய்து கொன்றது முறைதானு? என்னும் வினு, அறிஞர் களிடையே என்றும் தீராத பெரும் சிக்கலாக இருந்து வருகின்றது. "How many ages hence shall this our lofty scene be acted over in states unborn and accents yet unknown" என்று ஷேக்ஸ்பியர் தமது யூலியஸ் சீசர் என்னும் நாடகத்தில் எழுதியிருப்பது போலவே, வாலி வதம் பற்றிய சர்ச்சையும்கூட, அறிஞர்களிடையில் என்றும் எங்கும் இடை

யருது நிகழ்ந்து வருதல்கூடும். "எங்கணும் பெரு வழக்காய் என்றைக்கும் உள்ளது எது?" என்று தாயுமான சுவாமிகள் பாடிய நிலையில், தொன்று தொட்டு நிகழ்ந்துவரும் இச் சர்ச்சை குறித்து, அறிஞர்கள் தாம் தாம் ஆராய்ந்த நெறி களில், வெவ்வேறு வகையான விளக்கங்கள் தருவது, இயல் பும் முறையும் தேவையும் ஆகும்.

ஆதலின், முதுபெரும்புலவர் திரு. புரிசை சு. முருகேச முதலியார் அவர்களும் "வாலி வழக்கு" என்னும் தலைப்பில், அப்பொருள் குறித்து அரியதொரு நல்ல ஆராய்ச்சியை நிகழ்த்தி, இந்நூலின்கண் அளித்துள்ளார்கள். "திருக் கோயில்" இதழில், தொடர் கட்டுரையாக, இவர் தம் ஆராய்ச்சியுரைகள் வெளிவந்தன. இதுபோது அவை தனியே ஒரு நூல்வடிவிலும் தொகுக்கப்பெற்று வெளிவரு தல், பயன் தரத்தக்க நற்செயலாகும்.

இந்நூலாசிரியர் அவர்கள் "இனி நாம், வாலி வழக்கை வடித்தெடுக்க, முதலில் வாலி சுக்கிரீவன் பண்புகளைப் பார்க்கவேண்டும்...இரண்டாவது, சீதாதேவியார், உருமை இருவரது ஒழுக்கங்களையும் உற்று நோக்கவேண்டும்...மூன்று வதாக, இப்பெருஞ் செயலில் பெரும் பங்கெடுத்துக் கொண்ட அனுமனைப்பற்றியும் ஆராயவேண்டும்... நான்காவ தாக, தான் பிறந்த நாள் முதல் இராமனைப் பிரியாமல் இருக் கும் பெருந்தகை இலக்குவனர் நிலையையும் நினைவு கூர வேண்டும்...ஐந்தாவது வாலி வதைக்கு முன்னும் பின்னும் வாலியும், வாலியின் குடும்பத்தினரும் இராமபிரானை எப்படி மதித்து வந்தார்கள்? வள்ளலின் மனம் அக்குடும்பத்தினரை எப்படி மதித்து வந்துள்ளது? என்பதனையும், காணவேண் டும். இவ் வைந்துவகை ஆய்வுகளும் வாலி வழக்கியலின் உண்மையைப் படம்பிடித்துக் காட்டிவிட வல்லவை எனக் கருதுகின்றேன்" என்னும் ஆழ்ந்த அடிப்படையை அமைத் துக் கொண்டு, தம் ஆராய்ச்சி நெறியில் தலைப்படுகின்றார் கள். இந்நூலின் இடையிடையே வரும் கவிதை விளக்கங் களும், சொற்பொருள் நுணுக்கங்களும், பண்போவிய நலங் களும் (Character Delineations), பிறவும், சிந்தனைக்கு விருந் தாகத் திகழ்கின்றன.

இந்நூலை இயற்றியளித்த முதுபெரும்புலவர் திரு. புரிசை சு. முருகேச முதலியார் அவர்களுக்கும், இதனைத் தமது அருட்கொடையாக வெளியிட்டுதவும் இரத்தினகிரி தவத்திரு பால முருகனடிமை சுவாமிகள் அவர்களுக்கும், தமிழுலகம் பெரிதும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளது. இத்தகைய சிறந்த நல்ல ஆராய்ச்சி நூல்கள் பலவற்றை இயற்றியுதவ, இவ்வாசிரியர் அவர்கள், எல்லா நலங்களும் பெற்று நீடு இனிது இன்புற்று வாழ்தல் வேண்டும் என, எல்லாம் வல்ல இறைவன் திருவருளை வாழ்த்தி வணங்குகின்றேன்.

போற்றுரை

திரு. புலவர் ந. ரா. முருகவேள், M.A., M.O.L.,
ஆசிரியர் : 'திருக்கோயில்'
அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-34.

முத்தமிழ் வள்ளல்—பெருஞ்சொற் கொண்டல்—முது பெரும் புலவர் திரு. புரிசை சு. முருகேச முதலியார் அவர்களை, யான் இளமை முதலே இனிது அறிவேன். யான் மிக இளம் பருவச் சிறுவனாக இருந்த பொழுதே, காஞ்சிபுரத்தில் அவர்கள் நிகழ்த்தி வந்த சமயச் சொற்பொழிவுகள் பலவற்றைக் கேட்டு மகிழ்ந்து, மிகவும் பயன் பெற்றுள்ளேன். அவர்கள் இயற்றிய "பார்த்தனை வளர்த்த பாட்டன்" என்னும் கவிதை நூலுக்கு,மதிப்புரை எழுதும் பேறு, பல ஆண்டுகளுக்கு முன்னர் எனக்கு வாய்த்தது. அப்பொழுதே "வாலி வழக்கு" என்னும் தலைப்பில், அவர்கள் நூல் ஒன்று எழுத நினைத்துக் கொண்டு இருப்பதனைத் தெரிவித்தார்கள். ஆனால் அதனை அவர்கள் எழுதத் தொடங்காமையினை, அவர்களை இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் ஒருமுறை சந்திக்க நேர்ந்தபோது அறிந்தேன். "திருக்கோயில்" இதழிலேயே அதனைத் தொடர்ந்து எழுதி வரலாமே என்று கூறி, தொடர்ந்து எழுதிவரச் செய்து வெளியிட்டு வந்தேன். அக் கட்டுரைகள் இன்று ஒரு நூலாக வெளியிடப் பெறுதல் குறித்து, மிகவும் மகிழ்கின்றேன்.

"முதன்முதலாக ஒரு நல்ல இன்பம் நிறைந்த கருத்துத் தோன்றுவதற்கும், பின்னர் அது படிப்படியே வளர்ந்து, பலப்பல தடைகளைக் கடந்து, செயற்படுத்தப்படுவதற்கும் இடையே நடைபெறும் நிகழ்ச்சிகள், இன்பமான ஒரு கனவுக் காட்சி போலவும், உருவெளித் தோற்றம் போலவும் அமைகின்றன". ("Between the acting of a delightful

thing, and the first motion, all the interim is like a phantasma, or a happy dream..."—Shakespeare) என்பர். அந் நிலையில், இற்றைக்குச் சரியாகப் பன்னிரண்டு (1965–1977) ஆண்டுகளுக்கு முன்னர், அஃதாவது 1965 செப்டெம்பர் "திருக்கோயில்" இதழில் எழுதிய மதிப்புரையில்,

(வெண்பா)

"புரிசை முருகேசர் என்றெவரும் போற்றும்
குரிசில்! உயர்செஞ்சொற் கொண்டால்!—வரிசையினில்
நும்மனையோர் சொற்பொழிவை நுண்ணிதிற்பல் காற்கேட்டே
மெய்ம்மைஅறி வுற்றேன் மிக. (1)

பேரன்பு மிக்க பெருந்தகைமை நற்சான்றீர்!
நீரன்பு கொண்டு நினைந்துய்த்த—தோரின்ப
நன்னூலைப் பெற்றேன்! நலம்நுகர்ந்தேன்! இன்புற்றேன்!
என்னோ? புகழ்ந்துரைப்பேன் யான்! (2)

'பார்த்தனைத் தான்வளர்த்த பாட்டன்' என்னும் செம்பொருள்நூல்,
ஓர்த்துணர்ந்து கற்றேன்! உளம்களித்தேன் ?—சீர்த்தபல
எத்தனையோ நுண்பொருள்கள் இன்பமையத் தேற்றியுள்ளீர்.
அத்தனையும் போற்றியுய்தற் காம்! (3)

எளிய இனிய எழில்நடையில், மக்கள்
தெளிதக்க உண்மைஎலாம் தேற்றும்!—அளிமிகுத்து
அன்புஅறி வாற்றல் அனுபவங்கள் தாம்முதிர
நன்கியற்றும் நும்நூல் நயந்து. (4)

செழிக்கும் உயர்புலமைச் செம்மால்!நீர் நன்கு
பழுத்துயர்ந்த செந்தமிழ்ப் பாவால்,—மொழிக்குமொழி
இன்சுவைத்தேன் ஊற்றாய் இனிதியற்றும் சீர்ப்பனுவல்,
மன்சுவைத்தேன் நன்றே மகிழ்ந்து. (5)

சீலமிகும் நற்பெரும! செந்தமிழ்ச்செஞ் சொற்கொண்டால்!
சாலநல்ல இன்கவிதைத் தன்மைதிகழ்—நூலாக
மற்றும்இது போல்நூல்கள், மாண்பின் வகுத்தளித்துப்
பொற்புறநீர் வாழ்க! பொலிந்து. (6)

சிறந்த தொருபொருளைத் தேர்ந்தெடுத்துப் பாடல்
சிறந்த கவிஞன் சிறப்பாம் !—திறம் தெரிந்து
வாலி வழக்கைப் பொருளா வரித்தசெயல்,
சாலமிகப் போற்றத் தகும். (7)

சேண்திசையும் போற்றும்உயர் செந்தமிழ்ச்சை வத்தோன்றல்!
மாண்புயர் வாலி வழக்குஎனும்நூல்,—காண்பதற்கு
எல்லையிலாப் பேராவல் யான்மிகவும் கொண்டுள்ளேன்!
ஒல்லை முடிப்பீர்! உவந்து". (8)

என்று குறிப்பிட்டிருந்தேன். அஃது இன்று சிறப்புற நிறை வேறியிருப்பதனை நினைந்து, பெரிதும் மகிழ்கின்றேன்.

செயல்ஒன்று முதன்முதலாச் சிந்தனையில் தோன்றுவதும்,
இயல்பினிலே மற்றதுதான் எங்ஙனமோ வளர்வதுவும்,
முயல்வளவில் அனையதுதான் முதிர்வதுவும்,
தடைகள்கடந்து
உயிர்பெறீஇ முடிவதுவும், உன்னின்எல்லாம் இறையருளே.

என்று உட்கொண்டு, இறையருளை வியந்து வழுத்துகின்றேன். இந் நூலின் கட்டுரைகள், "திருக்கோயில்" இதழில் வெளிவந்து கொண்டிருந்தபோது, அவற்றை ஊன்றிப் படித்து உவகையுற்றுப் பாராட்டி வந்த சிவநெறிச் செல்வர்—செந்தமிழ்ச் சான்றோர் திரு. எஸ். சென்னியப்ப முதலியார் போன்ற பெருமக்களின் கவிச்சுவை வேட்கையும், கலைநல ஆர்வமும்கூட, இந்நூல் வெளிவருவதற்கு ஒருவகையில் பெரிதும் தூண்டுகோலாக அமைந்து ஊக்கம் அளித்தன.

இந் நூல், இரத்தினகிரி தவத்திரு. பாலமுருகனடிமை சுவாமிகள் அவர்களின் சிறந்த அருளாசியுடனும், பொரு

ளுதவியுடனும் வெளிவருவது, பொன்மலர் நறுமணம் பெற்றாற்போல மேலும் மிக்க பெருஞ்சிறப்பை விளைவிக்கின்றது. கம்பராமாயணக் கவிதைப் பொருள்நல ஆராய்ச்சியாளர்களுக்கும், சுவைஞர்களுக்கும், இந்நூல் மேலும் மேலும் சிந்தனைத் திறனை வளர்க்கத் துணைபுரியும் என்பதில் ஐயமில்லை.

தமிழுலகிலும் சமய உலகிலும், முதுபெரும் புலவர்—முத்தமிழ் வள்ளல்—விரிவுரை வித்தகர் திரு. புரிசை. சு. முருகேச முதலியார் அவர்களை அறியாதவர்கள் எவரும் இரார். வில்லிபாரதம்—கம்பராமாயணம்—கந்தபுராணம்—பெரிய புராணம்—திருவிளையாடற் புராணம் முதலிய சமய இலக்கியங்களில், எல்லையற்ற புலமையும், இணையற்ற சொல் வன்மையும் வாய்ந்து, சமயச் சொற்பொழிவுத் துறையில் பெருமூப்பர் (ஜாம்பவான், Doyen) என விளங்கிவரும் அப் பெருந்தகையாரின் அருமை பெருமைகள், அளப்பரியன. தமிழ்த் தென்றல் திரு. வி. கலியாணசுந்தரனார், சைவப் பெரியார் திரு. ச. சச்சிதானந்தம்பிள்ளை போன்ற பல தமிழ்ப் பெருஞ்சான்றோர்களின் நட்பினையும், நன்மதிப்பினையும் பெரிதும் பெற்ற இப்பெருமகனாரின் செந்தமிழ்ச் சமயச் சொற்பொழிவுகள், தமிழ் நாட்டில் பல்வேறு பகுதிகளிலும், இலங்கை, யாழ்ப்பாணம், மலேசியா ஆகிய அயல் நாடுகளிலும், பல்லாயிரக்கணக்கான மக்களாற் கேட்டுப் போற்றப் பட்ட சிறப்புடையன. பழம்பெரும் புலவர்களின் வரிசையில், இஞ்ஞான்று முதிர்ந்து கனிந்த நிலையில் இருந்துவரும் பெரியவர்கள் (The Last of the Romans) சிலருள், ஒருவராகத் திகழும் இவர்தம் அரிய இனிய நூல், கம்பராமாயணக் கவிநயம் காணவிரும்பிக் கற்கும் அன்பர்கள் அனைவருக்கும், ஒரு நல்ல வழிகாட்டியாக அமையும் என்பது திண்ணம்.

சொன்னலம் புகழ்கோ? தூய
சுவைப்பொருள் புகழ்கோ? நுட்பம்
முன்னிநன் ருய்ந்து கூறும்
முறையினைப் புகழ்கோ? பாடல்

நன்னலம் புகழ்கோ ? ஆய்வின்
நலத்திறம் புகழ்கோ ? எல்லாப்
பன்னல மும்சால் இந்நூல்,
பயன்மிகு சிறந்த நூலாம் !

(வேறு)

வாழி புரிசைமுரு கேசர், வளம்ஆர்ந்து !
வாழிஅவர் வாலி வழக்குஎனும்நூல் !—வாழியரோ
அச்சிட் டுதவும்அருட் பாலமுரு கன்அடிமை !
மெச்சுறும்நம் ஆணைய ரும் தாம்.

ந. ரா. முருகவேள்
1—8—77

பிழைத் திருத்தம்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
2	33	கனது	தனது
7	29	ஏதுமில்லே	ஏதுவில்லே
12	15	உண்டு	உளர்
14	14	எப்பொழுதான்	எப்பொழுதுதான்
15	4	கரைபுரண்ட	கரைபுரண்டது
21	25	வல்லன்	வல்ல
26	14	வைத்தே	வைத்ததே
30	35	இட்டழைத்தனர்	இட்டழைத்தனன்
32	3	வீட்டுத்	வீட்டி
33	5	முன்னவர்க்	முன்னவர்
	8	விதியிலேனுயினன்	விதியிலேனுயினேன்
36		உசப்பிங்	உரப்பிப்
47	28	தோள்உறுத்	தோளிறுத்
48	15	உள்ளனிந்த	உள்ளளிந்த
53	16	தோன்றி	தோன்றிய
53	28	எண்ணின்	என்னின்
56	29	தாமுடன்	தருமமும்
59	16	பாடல்கள்	பாடல்
32	6	அழுதுறைபவனும்	அழுதுநைபவனும்
68	1	நினக்கொவ் வாதனே	நினக்கொவ் வாததே
69	19	எய்யதாது	எய்தாது
73	27	குலங்குறை	குலங்குறையுற
	29	குலமும் குடிகொள்டி	குலமும் நலமும் குடிகொண்
74	6	உயராகி	உயிருக்காகி
	28	மாணவன்	மானவன்
75	10	உணர்த்துவன்	உணர்ந்தனள்
	11	நீங்கு நிற்றிகன்	நீங்குகிற்றிலன்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
80	27	அதருல்தான்	அதனுல்தான்
81	9	அந்த	அது
82	19	அழைத்தனர்	அழைத்தனன்
	27	அறிகல்	அறிதல்
83	16	726	126
85	24	பெரிகிய	பெருகிய
89	26	கருகின்றது	வருகின்றது
92	13	காலத்தில்	கானகத்தில்
	18	ஒருத்தது	ஒறுத்தது
95	5	கண்டிக்கின்ருேம்	கண்டிருக்கிருேம்
98	17	வேறு ஏயாதே	வேறு ஏதுயாதோ
13		செய்கையாற் சாலு	செய்கையாற் சாலும்
103	15	நான்கு	நான்
	26	யிழந்து	யிழந்தும்
	27	துறந்து	துறந்தும்
	33	அப்படி	அம்படி
104	11	உட்கொண்டேன்	உட்கொண்டான்
107	5	மன்னவன்	மன்னவன் வாய்
	14+15	தனது குற்றங்களே ......தனது	தனது தம்பியால் தான் செய்ய நேர்ந்த, இராமனுல் வெறுக்கப்படுகின்ற
108	17	வேண்டுசின்றேன்	வேண்டுகின்றேன்
109	12	தான்	தான் ஒத்துக் கொண்டனனு இல்லையா என்பதனே வெளியிட
112	28	என்	என

56-4

வாலி வழக்கு

வாலி, வன்மைக்கொரு வேலி

உலகத்தை யெல்லாம் இராவணன் வென்முன். அவனைத் தனது வாலினுலேயே வாலி வென்முன். இந்த வாலியையும் வென்றவருளரே யெனலாம். அவர் இவனைப் படைகொண்டே வென்முர். இயற்கைப் பலம்கொண்டு வெல்லவில்லை. ஆதலால், வாலி உடல் வலிமைக்கொரு வரம்பாகின்முன். வரம்பு, எல்லை, வேலி, என்பன ஒரு பொருட் சொற்கள்.

இத்தகைய வாலியைச் செய்துவரும் கேலியும் வரம்பற்ற பாங்கில் வளர்ந்து வருகின்றது. "எங்கணும் பெருவழக்காய் என்றைக்கும் உள்ளதெது" என இறைவனைச் சுட்டினுர் ஒரு பெரியவர். அதுபோலவே "எங்கணும், என்றைக்கும் உள்ள வழக்காகத் திகழுகின்றது வாலி வழக்கு. வாலி, வாலால் இராவணனைப் பிணித்தவன். அவன் தனது வாக்கால் மன்னர்க்கு மன்னனையும் பிணித்த மாவீரனுயினன். வாலி வாக்கின் பிணிப்பிலிருந்து இராமபிரான் இன்னும் வெளிவர முடிந்ததோ இல்லையோ வென்பது ஐயமாகவே உள்ளது. வாலியின் வழக்குரைகள், வாதங்கள், இன்னும் உலகப் பெரு மன்றத்தில் ஒலித்துக் கொண்டே இருக்கின்றன. இராம பக்தர்கள் தலைமுறைத் தத்துவமாக விடையிறுத்து வருகின்முர்கள். ஆனுல், ஒரே ஒருநாள் எழுப்பிய வாலியின் வினுக்களுக்கு இன்னும் நிறைவான விடைகள் கிடைக்கவில்லை.

ஏன் எனனாம். வள்ளலின் பக்கமாக நின்று, வாலி வினுவிற்கு விடைதர முயலும் ஒருவரே, ஒரே மன்றத்திலேயே, மற்ருெரு காலத்தில் வினுவுகின்முர். தாமே கிளப்பித் தாமே விடையிறுக்கவும் வருகின்முர். காரண

மென்ன ? தாம் கூறிவரும் விடை தமக்கே நம்பத் தக்கதாக இல்லை என்பதுதானல்லவா ? இந்த வழக்கு ஏனிப்படி வளரு கிறது ? வாலிக்கு ஒரு கோயிலுமில்லை. அவனை வழிபடுவார் யாருமில்லை. அவனுக்குப் பக்த பரம்பரையென்று ஒன்றை யுமே காணோம். பின்னை இந்த வழக்கியலை வளர்க்கின்ற வர்கள் யார் ? இராம பக்தர்கள்தாம். இப் பெருமக்கள், இராம பக்தர்கள் பட்டியலில் வாலிக்குக் கடைக்கோடியில் கூட இடம் தருகின்றதில்லை. ஆனால், ஒவ்வொருவரும் தங்களுக்கே முதலிடம் வகுத்துக்கொள்ள முற்படுகின் றார்கள். இவர்கள் வாலியை வதைத்தது இராமனாகவும் சில சமயம் கருதுவதில்லை. வாலியைத் தாங்களே வதைத்து வாகை சூடியதாக மார் தட்டுவதும் உண்டு. ஆனால் வாலியை வதைத்தது நேர்மையான செயல்தான் எனக் காரணங்கள் கூற முற்படுவதில் கொள்ளும் ஒற்றுமை, கூறுங் காரணங்களில் இருப்பதில்லை. இவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு காரணங் காட்டுகின்றார்கள். அப்படி இதுவரை வந்தவற்றைக் காண்போம். அவை எவ்வளவு தூரம் பொருந்துகின்றன வென்பதையும் சற்று ஆய்வோம்.

விலங்கு வேட்டை வேந்தற்குரியதே

சிலர், வாலி வினாக்களுக்குத் தக்க விடை வான்மீகத்தில் வருகிறது; அது கம்பரில் காணோம் என்கின்றார்கள். அது என்ன என்றால், அரசர்களுக்கு விலங்கு வேட்டை புதிய தல்ல, அது முறைகேடானதும் அல்ல. இராமனோ அரசருக் கும் அரசன். அவன் ஒரு பொல்லாத மிருகத்தைக் கொன் றான். இதற்குக் கேள்வி என்ன ? விடையளிக்க வேண்டிய அவசியந்தான் என்ன ? என்று ஒரே சொல்லால் முடித்து விடுகின்றார் வான்மீகர் என்கின்றார்கள். எதற்கும், வளவள வென்று பேசிக்கொண்டு போகாமல், வெட்டெனப் பேசி முடிப்பது அழகாகத்தான் இருக்கின்றது.

ஆனால், 'வாலியான விலங்கு இம் மன்னனுக்கு என்ன தீங்கிழைத்தது,' என்ற கேள்வி வரும். அது, தனது நண்பன் மனைவியைக் கவர்ந்தது, என்னலாம். மனைவி கணவன் என்ற மரபு விலங்கிற்கு இல்லையே. அச் செயல் எப்படித்

தப்பிதமாகும் என்ற வினவிற்கு விடை வேண்டும். மேலும், இரு விலங்குகள், இரண்டும் உடன்பிறந்தவை. அவற்றில் ஒன்று, அரசர்க்கரசனுக்கும் நண்பாகும் நற்கதியில் உள்ளது. ஒன்று விலங்கு கதியில் உள்ளது. அதை வேட்டையில் வீழ்த்துவது. இது எப்படிப் பொருந்தும். வாலி, பாற் கடல் கடைந்தவன், வானவருக்கு அமுதளித்தவன். என்ருெரு பக்கமும், வாலி மிருகம், அவனை அரசப் பெருந்தகை அடித்து வீழ்த்தினர் என்ருெருபக்கமும் இசைத்தால், பெரு நூல்களுக்குப் பெருமை குறையுமே, என்ன செய்வது ?

பெருமாள் வாலியையும் வதைத்தார், சிவனையும் சிறப்பித்தார் :

வாலியைப் பெருமாள் மறைந்து நின்று கொன்றது ஏன் தெரியுமா ? அது சிவபெருமானுக்குச் சிறப்புச் செய்வதற் காகத்தான். வாலி சிவனிடத்தில் வரம் பெற்றவன்; அவன் தனக்கு எதிர் நிற்பவர் பலத்தில் பாதி தனக்கு வந்துவிடும் படி வரம் பெற்றிருந்தான். பெருமாள், அந்த வரத்தையும் வாலியையும் சேர்த்துத் தமது பாணத்தால் ஒரே அடியாக அழித்து விடுவார். ஆனல், அப்படிச் செய்துவிட்டால், சிவனுக்குப் பெருமை குறைந்துவிடுமே என்ற கிருபையினல் தான் மறைந்து நின்று வென்ருர் என்பவர் சிலர். இவர்களை ஒன்று கேட்கலாம். மும்மூர்த்திகளில் சிவனே சிறந்தவன் என்கின்ருர்கள் சைவர்கள். திருமாலே சிறந்தவன் என்கின் ருர்கள் வைணவப் பெருமக்கள். பிரமன் திருமாலுக்கும் கீழ் நிலையில் உள்ளவனே என்பதை வைணவப் பெருமக்களும் ஒத்துக் கொள்ளுகின்றனர். இங்கே இராவணன் வரம் பெற் றது பிரமனிடத்தில்தான்; இராவணன் மானிடர்களைத் தவிர மற்றெல்லோரையும் வெல்ல வரம் பெற்றிருந்தான். அவனை வெல்ல மானிட வடிவெடுத்து வந்தனர் திருமால் என்பதுதான் இராமாயணம். வாலிக்குச் சிவன் தந்த வரத்தை மாற்றவல்ல திருமால், இராவணனுக்குப் பிரமன் தந்த வரத்தையும் மானிட வடிவு கொள்ளாமலேயே மாற்றி அழித்திருக்கலாமே, பிரமன் வரத்தைச் சிறப்பிக்கத்தான் இப்படி வந்தனரா ? என்ற வினவிற்கும் விடை தரவேண்டும்.

எந்தத் தெய்வத்திஞல் யார் வரம்பெற்றிருந்தாலும், அவ் வரத்திற்கு இடையில் ஏதேனும் இடம் உண்டாவெனத் தேடி அவ் வழியால் வெல்வதுதான் தெய்வ மரபு. அதை விட்டுச் சிவனைக் கௌரவிக்கப் பெருமாள் மறைந்து நின்று, தமக்கொரு பழி தேடிக் கொண்டாரென்பது, சிறிதும் சிந்திக்காது செப்பும் சிரிக்கத்தக்க விடையாகும்.

இராமன் மறைந்திருந்து கொல்லவில்லை:

சிலர், வாலியின் விலாப்புறங்களிலோ முதுகிலோ இராம பாணம் பாயவில்லை. அது நடுமார்பில் பட்டு முதுகில் ஊடுருவிற்று. மறைந்து நிற்கும் ஒருவன் எய்வது மார்பில் எப்படிப் படும்? மார்பில் பட எய்பவன் எதிர் நின்றுதானே எய்ய முடியும்? இதனைச் சற்றும் சிந்திக்காமலே, மறைந்து நின்று கொன்ருர் என இத்தனை காலமும் பேசி வந்திருக்கின்ருர்களே, என்ன அறியாமை, என்ன அநியாயம் என்கின்ருர்கள். இது மிகப் பொருத்தமான விடை. இந்தச் சிந்தனை சக்தி மிக்க செல்வங்கள், கம்பரைப் படிக்காவிட்டாலும் அருணசலக் கவிராயர் இராம நாடகத்தையாவது படித்துப் பேசினல் நன்ருக இருக்கும். கவிராயர் வாலி வாக்காக "ஏனிந்த மதி குறித்தாய் மறைந்து வாளி எடுத்தென்மேல் ஏன் எறிந்தாய்?" என்கின்றனர். கம்பரோ, தாரை வாக்காக,

"ஓயா வாளி ஒளித்து நின்று எய்வான்
ஏயா அந்த இராமன் என்றுளான்"

என்கின்றனர்.

வாலியின் விஞவிற்கு விடையிறுக்க முன்வந்த இலக்குவனர். "முன்னர் உனது தம்பி வந்து அடைக்கலம் புகுந்து முறையிட்டான். அவனுக்குப் பெருந்தீங்கு செய்த உன்னை அழித்தொழிப்பேன் என வள்ளல் வாக்களித்தாயிற்று. அப்படி அவனை ஆதரித்துவிட்ட அண்ணல், உனக்கும் எதிர் வந்தால் நீயும் அடைக்கலம் என்ருல் முன்கொடுத்த அபயம் என்ன ஆவது? அதற்காகத்தான் வள்ளல் மறைந்து நின்று எய்தது" என உரைத்தனன் என்று கம்பர் கூறுகின்ருர். அன்றியும் இராமன் சிறப்பியல்புகளை நன்குணர்ந்தவன்

வாலி. சுக்கிரீவனோடு போர் செய்ய உறுத்தெழுந்த வாலியை அவன் மனைவியான தாரை தடுத்தனள். அவள், 'உன் தம்பிக்கு யாரோ இராமனும், அரசனும், அவன் துணை வந்துளனும்' என்றனள். வாலி, அப்படியா? தருமமே உருவமாக வந்த இராமனையா நீ யாரோ இராமனென்கின்றாய். பாவீ! இனி இப்படிச் சொல்லாதே. இங்கு அவன் வாரான். வருந்தரமுமல்ல' என்று கூறிப் போருக்கு வந்தவன் வாலி. அவன் கண்ணெதிரே இராமன் தோன்றியிருந்தால் என்னவாகி யிருக்கும்? இராமாயணம் கிட்கிந்தையிலேயே முடிந்திருக்கும். ஏன்? இராமனை வாலி வணங்கிப் போற்றியிருப்பான். இராமன் சுக்ரீவனுக்கு அவன் மனைவியைத் தரச் சொல்ல வாலியும் தந்திருப்பான். வாலி இராமனோடு பேசிக் கொண்டிருக்கும்போதே, வாலியின் வால் இலங்கைக்குச் சென்றிருக்கும். அவ் வாலுக்கு அஞ்சும் இராவணன் "சீதையைத் தலைமேல் தூக்கிக் கொண்டு ஓடோடி வந்திருப்பான். அன்னையைத் தந்து அண்ணல் அடியில் விழுந்து இராவணன் மன்னிப்புக் கேட்டிருப்பான்; இராவணன் மடியமாட்டான். இராமாயணம் முடிந்திருக்கும். எதிர் நின்றே எய்தனனென்னும் மென்மொழியார், இவ்வளவு அசைப்பரும் வன்மொழிகளும் வருமென எதிர்பார்த்து இசைக்கவேண்டும்.

நல்லது. மறைந்து மார்பில் எய்வது எப்படி? என்ற அவர்களது வினவிற்கு விடை எங்கே யெனலாம். வாலி போர்க்களம் புகுந்தனன். வாலியின் போர்க்களம் முக்கோண வடிவானது. ஒரு கோணத்தில் வாலியின் கோட்டை வாயில்; மற்றொரு கோணத்தில், அநுமனுதிய வானரப் படைஞர்கள் கூட்டம். மற்றொரு கோணம் இராம இலக்குவர் இருக்கும் சோலை. இவரிருவரிருக்குமிடத்திலிருந்தே சுக்கிரீவன் வந்து வாலியை அறை கூவினன். வாலியும் வெளிப்பட்டனன். போரும் தொடங்கினர். சிறிது நேரம் நடந்தது. அதற்குள் அடி தாங்காமல் வாலிக்குப் பயந்து சுக்கிரீவன் ஓடினன். ஓடிச் சோலையிற் புகுந்து சிறிது நேரத்திற்கு எல்லாம், அச்சம் நீங்கி ஆற்றல்கொண்டு திரும்பினன் சுக்கிரீவன். 'ஈதென்ன வியப்பு! ஆருங் காணாத மூலைக்கு ஓடினன். தளர்ந்து சென்றவன் கிளர்ந்து வருகின்றனன்,

அவனது படைஞர் அங்கில்லை. அதோ காண்கின்றார்கள். பின்னை ஏன் அங்குச் சென்றான். யாரால் தளர்ச்சி நீங்கினான்'. என ஐயமுற்றனன் வாலி.

"அயிர்த்த சிந்தையன் அந்தகன் குலைகுலைந் தனுங்கச்
செயிர்த்து நோக்கினன்"

இது. வாலி வதை 54-ல் வருகிறது. அந்தகனும் அஞ்ச, அப்படி வாலி விழித்த நோக்கிற்கு யாவரும் எதிர்ப்படவில்லை. ஆனால், வாலியின் கருத்திற்கு ஒன்று புலப்பட்டது. அது யாது எனில், அங்கே தாரை யாரோ சுக்கிரீவனுக்குத் துணை வந்திருப்பதாகச் சொல்லினள். இடிபட்ட இவனும் யாரையும் காணாத மூலையில் ஓடினான். முரண் கொண்டு திரும்புகின்றான். ஆகவே, அங்கு யாரோ மறைந்திருக்க வேண்டும் என்பதுதான். அதனால்தான் அயிர்த்த சிந்தையன் ஆனான் வாலி. அயிர்ப்பு—சந்தேகம்.

வாலி, இனி இப் போரை நீளவிடக்கூடாது.என எண்ணினான். அவன் சுக்கிரீவனுடைய கழுத்திலும் இடுப்பிலுமாகக் கைகொடுத்து உயரத் தூக்கினான். ஏன்? ஒரே அடியாக நிலத்தில் அடித்து ஒழித்துவிடுவது என எண்ணினான். அப்படி வாலி சுக்கிரீவன் உடம்பினை உயர்த்தும்பொழுது அவ் வுடலம் வாலியின் கண்களை மறைத்தது. அந்த நேரத்தையும் செயலையும் தனக்குத் தக்கனவாகக் கொண்டனன் இராமன். வாலியின் பார்வையிலும் படாமல், தனது பலத்தில் பாதியையும் இழக்காமல், வாலியின் மார்பகமும் வடிவாகத் தோன்றத் தடையேதுமின்றித் தனது வாளியும் வாலி மார்பின் ஊன்ற எல்லாம் ஒத்து வந்தது. மறைவினின்றும் வெளிப்பட்டு, கணைவிட்டு, மறுபடி மறைவுற்றும் நின்றனன் இராமன்.

"எடுத்தும் பாரிடை எற்றுதும் என்றுதன் இளவல் கடித்
தடத்திலும் கழுத்திலும் தன் இரு கரங்கள் மடுத்து
மீக்கொண்ட வாலிமேல்கோல் ஒன்று வாங்கித் தொடுத்து
நாணெடும் தோளிறுத் திராகவன் துரந்தான்"

மீக்கொளல்—மேலே தூக்குதல். இதுதான் மறைந்து நிற்கவும் மார்பில் எய்யவும் கிடைத்த வழி.

வாலி வதை, ஒரு தேவ நாடகம் :

சிலர், வாலி வதையல்ல. அது, வாலியின் மோட்சமே. அதன் தத்துவம் சாமானியர்களுக்குத் தெரியாது. தேவர்கள் பலர் கூடி இராவண வதம் என்னும் நாடகத்தை நடத்தப் பூலோகத்திற்கு வந்தார்கள். அவர்களில் வாலியும் ஒருவன். இராவணனை வதைக்க வந்த அவன். தான் வந்த செயலையே மறந்து தன் தம்பியையே வதைக்க முற்பட்டனன். அதை யறிந்த அக் குழுவுக்குத் தலைவனுன இராமன். இப்படித் தப்பிதமாக ஆடிப் பெயரைக் கெடுக்காதேயென ஓர் அறை அறைந்து திரைக்குள்ளே தள்ளிவிட்டனன். தன்னை அடித்தது யாரெனத் தெரியாமல் வாலி திகைத்தனன். இராமன் அவனுக்குத் தனது திருமால் வடிவத்தைக் காட்டியருளினுன். உண்மையை உணர்ந்து வாலி தனது குற்றத்திற்கு மன்னிப்புக் கேட்டு வணங்கினுன். திருமால் அவனுக்கு மோட்சம் கொடுத்தார். வாலி பெறல் அரும் வீடுபேறு பெற்றனன். இதற்குக் கம்பர் கழறும் சான்றும் உண்டு. வாலி வதைப் படலம் 75-ல்,

> "கண்ணுற்றுன் வாலி நீலக் கார்முகில் கமலம பூத்து
> மண்ணுற்று வரிவில் ஏந்தி வருவதே போலும் மாலைப்
> புண்ணுற்ற தனைய சோரிப் பொறியொடும் பொடிப்ப நோக்கி
> எண்ணுற்றுய் என்செய்தாய் என்று ஏசுவான் இயம்ப லுற்றுன்"

எனவரும் பாடலைப் பாருங்கள் என இங்கிதமாக இசைக்கின்றுர்கள். இத்தனை பேரிலும், கம்பரைத் தொட்டு வாலி வழக்கிற்கு வழிகாண வந்த இவர் பெருந்தன்மை பாராட்டற் குரியதே. ஆனுல், இவர் கடைப்பிடித்த பாடலால், இவர்களது திருமால் காட்சி நிலையாவதற்கு ஏதுமில்லை. இவர்கள் கருத்தினைச் சிறிதே ஆராய்வோம்.

இங்கே, 'கண்ணுற்றுன் வாலி நீலக் கார்முகில் கமலம் பூத்து மண்ணுற்று வரிவில் ஏந்தி வருவதே போலும் மாலை' என்ற இந்தத் தொடரைக் கொண்டே திருமாலாகத் தரிசனம் தந்தார் வாலிக்கு இராமன் என்பார்களானுல், நாமும்

இராமன் இராவணனுக்கும் திருமாலாகக் காட்சி தந்தான் எனக் கூறலாம். அது எங்கே என்கின்றீர்களா ?

இராமன் இலங்கையை ஒரு குன்றின்மேல் ஏறிப் பார்க்கின்றான். அச் செயலைத் தனது தூதுவரால் இராவணன் தெரிந்து கொண்டான். அவனும் தனது அரண்மனைச் சிகரியின்மேல் ஏறி இராமனது சேனைகளையும் தலைவர்களையும் காண்கின்றான். (இராவணன் தானை காண் படலம் 17)

"தோரணத்த மணி வாயின்மிசைசூல்
நீரணைத்த முகிலாம் என நின்றான்
ஆரணத்தை அரியை மறை தேடும்
காரணத்தை நிமிர்கண் கொடுகண்டான்''

அங்கே வாலி கண்ணுற்றான் என்று எளிதாகச் சொல்லிய கம்பர், இங்கே, இராவணன் நிமிர் கண்கொடு கண்டான் என்றார். நிமிர்தல்—உயர்தல், இங்கே, அது அளவால் உயர்ந்த கண் எனப் பொருள் தரும். அதாவது யாவருக்கும் உள்ள இரண்டே கண்ணினன் அல்லன் இராவணன். இருபது கண்களுடையவன் அவன். அந்த இருபது கண்களினாலும் இராமனை நன்றாகக் கண்டனன் என்பதுதான் பொருள். இதைவிட்டு 'அரியை, அம் மறைதேடும் காரணத்தை, நிமிர் கண்கொடு கண்டான்' என வருகிறது. ஆதலால், இராவணனுக்கும் இராமன் திருமாலாகக் காட்சி கொடுத்துவிட்டார் என்று கூறிவிடலாமா? 'அரி, திருமால் என்றெல்லாம் இராமாயணத்தில் இராமனைச் சுட்டுகின்ற இடங்கள் பற்பல. இவையெல்லாம் இராமனுக்குப் பரியாயப் பெயர்கள் எனத்தான் கொண்டு வருகின்றார்கள். முறையும் அதுதான். அதை விட்டு, ஏதோ கண்டுகொண்டதைப்போல வாலிக்கு இராமன் இரகசியமாகத் திருமால் காட்சி தந்தார் என்றால், ஏன் தந்தார் ? அப்படித் தந்ததற்குக் காரணம் என்ன ? கேள்விகள் எழத்தான் செய்யும்.

ஒருவனைத் தம்பியின் மனைவியைக் கவர்ந்த கொடியவன் என்று கொன்று வீழ்த்தினான் இராமன். விழுந்தவன் எழுந்திருப்பதற்குள் அவனுக்குத் திருமாலாகக் காட்சி தந்தனன் என்றால், அவ்வளவு கொடியவன் அதற்குள் எப்படி மோட்

சம் பெறக்கூடிய நல்லவனுகி விட்டனன்? அவன் எழுந்து தன் குற்றத்தை உணர்ந்து வருந்தினுனு? மன்னிப்புத்தான் கேட்டனனு? அல்லது மோட்சமும் காட்சியும் அவ்வளவு மலிவாகிவிட்டன என்று பொருளா?

சான்று காணும் 75-வது பாடலுக்கு முன் பின் உள்ள பாடல்கள் இக் கருத்திற்கு ஒத்து வரவும் காணேமே. இதற்கு முதற் பாடலான 74-வது பாடல்:

"இறை திறம்பினனுல் என்னே இழிந்துளோர் செய்கை யென்னின்
முறை திறம் பினனுல் என்று மொழிகின்ற முகத்தான் முன்னர்
மறை திறம்பாத வாய்மை மன்னர்க்கு மனுவிற் சொல்லும்
துறை திறம்பாமல் காக்கத் தோன்றினுன் வந்து தோன்ற".

இதில் தோன்றினுன் என்ற சொல் ஒன்றே எங்ஙனம் திருமாலாகத் தோன்றினுன் என்ற பொருளைத் தரும். பின்னே மாலைக் கண்ணுற்ருன் என்பதற்கேற்ப எங்கும் காட்சி தருவது போல சங்கோ சக்கரமோ வயின தேவனுகிய வாகனமோ கொண்டு தோன்றியதாக எதுவும் இல்லை. அன்றி 76-வதாக வரும் பாடலிலோ திருமால் காட்சி தெவிட்டாத தெள்ளமுதம் உண்ட ஒரு பரம பக்தன் வாக்காக ஒன்றும் காணேம். அது குல தருமத்திற்காகவும் சத்தியத் திற்காகவும் உயிரைக் கொடுத்தனன் தயரதன். அவனுக்கு மகனு நீ? உத்தமன் பரதன். அவனுக்கு அண்ணனு நீ? என மிகக் கடுஞ் சொற்கள் அமைந்தனவாக வருகின்றது (76)

"வாய்மையும் மரபும் காத்து மன்னுயிர் துறந்த வள்ளல்
தூயவன் மைந்தனே நீ? பரதன்முன் தோன்றினுயே?
தீமைதான் பிறரைக்காத்துத் தான்செய்தால் தீங்கு அன்ருமோ
தாய்மையும் நட்பும் அன்றித் தருமமும் தழுவி நின்ருேய்" என

வருகிறது. பின்னரும் தொடர்ந்து வரும் ஒரு 50 பாடல்கள் வரை கடுமையான விவகாரமாகவே வருகின்றனவே. இவையெல்லாம் திருமால் காட்சி கண்டவன் தேனெழுகத் தந்த தோத்திரங்கள் தாமா? எனவும் எண்ண வருகின்றது.

இராமாயணம், பாரதம் இரண்டினும் வரும் அவதார மூர்த்திகளான இராம, கிருட்டினர்கள்பால் மாறுபட்ட இரு

விதச் செயல்களைக் காணுகின்றோம். கண்ணன், தோன்றிய பொழுதே நாற்புயமுள்ள தெய்வத் திருமேனியைக் காட்டிப் பெற்றோர் பயந்தீர்த்த பெம்மான். மற்றும் பற்பல இடங்களில், அவர் தமது பாங்கான தெய்வ வடிவம் காட்டி மகிழ் வித்த சரிதங்களைக் காணுகின்றோம். இராமாவதாரம் அப்படியல்ல.

கம்பர், ஒவ்வொரு கதாபாத்திரங்களின் வாயிலாகவும் இராமன் அவதார மூர்த்தியே என்பதனை வெவ்வேறு காலங்களில் வைத்துக் காட்டுகின்றார். ஆனால், தான் ஓர் அவதார மூர்த்திதான் என்பதனை இராமபிரான் ஒப்புக்கொண்டதாக வரும் இடம் ஒன்றுகூட இல்லை. இராமாவதாரம் மக்களோடு மக்களாக நின்று வாழ்வையும் தாழ்வையும் ஊரொக்க அநுபவித்துக் காட்டிய அவதாரம் என்பார்கள். நாகபாசத் துன்பம் தீர்க்கவந்த தோன்றல் கருடதேவனை, "நீர் யாரையா?" வெனக் கேட்கின்றான் வள்ளலென்பார் :

"ஐயநீ யாரை எங்கள் அருந்தவப் பயனால் வந்து
எய்தினை உயிரும் வாழ்வும் ஈந்தனை யெம்மனோரால்
கையுறை கோடற்கு ஒத்த காட்சியை அல்லை மீட்சி
செய்திறம் இலையால் என்றான் தேவர்க்கும் தெரிக்க
ஒணாதான்"

என நாகபாசப் படலத்தில் வருகிறது. இப்படித் துயர் களைய வந்த கருடனுக்கே தனது காட்சியை அளிக்காது மறைந்து நின்று, நீ யாரையா எனக் கேட்கும் இராமன் வாலிக்கு முன்னின்றான் திருமாலாக என்றால் எப்படிப் பொருந்தும்? மேலும் வலிய அவனுக்கு மால் வடிவம் காட்டியது வாலியின் பொருட்டா அல்லது தம் பொருட்டா என்ற கேள்வியும் எழுகின்றது. வாலிக்காக என்றால் கெட்டவன் அவ்வளவு விரைவில் நல்லவனாகி விட்டனன் எனத் தக்க செயலொன்றும் இடையில் வரவில்லை. அல்லது தம் பொருட்டே என்றால், இராமனது பெருமை குறையும். ஏன் எனில், ஒரு சிறுவன் அயலிடத்தில் சென்று ஒரு தீங்கான செயலைச் செய்து அவர்களால் வருத்தமுற நேருங்கால், அவன் தனது குடிப் பெருமையைக் காட்டியே மீண்டுவர

வழி தேடுவான். அதுபோல, இராமன் செயலுக்கு இராமனுகவே நின்று திர்வு காண முடியாமல் தமது பரமபத நிலையைக் காட்டித்தான் மீள வேண்டி வருகிறது என்ருல், வாலி கூறும் குறைபாடுகள் மேலும் வலியுற்றனவாகிவிடும். அன்றியும் தமது திருவடி பட்டு வீடு சேர்ந்த விராதன்.

"நீயாதி பரம்பொருளும் நின்னவே உலகங்கள்
ஆயாத சமயமும் உன் அடியவே அயலில்லைத்
தீயாரின் ஒளித்தியால் வெளிநின்ருல் தீங்குண்டோ
வீயாத பெருமாயை விளையாட்டும் வேண்டுமோ?"

எனத் திருமாலாகவே அறிந்து போற்றுகின்ருன். அவனுக்குக் காட்சியளிக்கவில்லை. அடுத்துக் கண்ட பெருமாதவர் சரபங்கரும் இராமனுகவே கண்டார். கரை சேர்ந்தார். அவருக்கும் இந்தக் காட்சியில்லை. கவந்தன் காந்தருவனுகி நின்று, உண்மைத் தத்துவமான பாமாலைகளைப் பாடித் துதித்தனன். அவன்,

"காண்பார்க்குங் காணப்படு பொருட்கும் கண்ணுகி
மாண்பால் உலகனைத்தும் வயிற்றெளித்து வாங்குதியால்
பூண்பார்போல் நிற்றியால் யாதொன்றும் பூணுதாய் நீ
ஆண்பாலோ பெண்பாலோ அப்பாலோ எப்பாலோ"

என்றெல்லாம் பாடிப் பரவினுன். அவனுக்கும் இந்தப் பெருங் காட்சியில்லை. இராமாவதாரம் வரப்போகிறது என்ற தொன்னுள் முதலே தீங்கனிகளைச் சேர்த்து வைத்திருந்து விருந்திட்டு அருந்தச் செய்த பெருந்தவச் சபரிக்கும் இப் பெருங்காட்சி எய்தியதாகவில்லை. என்னே பெண்ணைக் கவர்ந்து பேரபசாரம் செய்த வாலிக்குக் கண்ணைக் கவருமாறு கலிவரதன் தந்த காட்சி! மேற்கண்ட காரணங்களால் தேவ நாடகம் தெளிவானதாகத் தெரியவில்லை. இராவணன், திருமாலின் வாயிற் காவலனுக நின்ற நிலைமாறி இரண்டு பிறவியெடுத்து நிற்பவன். வாலியோ பாற்கடல் கடைந்த திருமாலோடு ஒன்றுபட்டுப் பணி செய்த வடிவத்துடனே உள்ளவன். அவன் இராமனைத் திருமாலேயென முன்னமே தெளிந்து தாரைக்குச் சொல்லியவன். அதனுல், திருமால் வடிவம் அவனுக்குப் புதியது ஒன்றன்று.

இராமன் நிலையையே அவன் மேலாகக் கருதியிருப்பவன். திருமால் காட்சிக்காக வாலி தொடுத்த வழக்கு விடை பெற்று வீறடங்கி விட ஏதுவுமில்லையென விடுமோமாக.

கம்பர் கவிதையைப் போற்றுவோம், கதையை விரும்போம் :

இப்படி ஒரு வாதம். இதற்கு விடை கூற உண்மையில் அச்சமுறுகின்றேன். ஏனெனில் நன்கு கற்றவர்களே சில சமயம் இப்படிப் பேசுகின்றூர்கள். இது கம்பரைப் பெருமைப் படுத்தியதாகாது. இராமன் வேறு கம்பர் வேருகக் காணவே இராம காதையின் பாக்கள் இடத்தருவதில்லை. கூலிக்கு இராமனைக் கொண்டாடியவரல்லர் கம்பர். பரமபதம் பாலிக்க இராமனை யேத்திய பக்தரவர். •இந்தக் காலத்திலும் மேடைப் பேச்சாளர்களில் ஒருவர்க்கு ஒருவரைப் பிடிக்காத வர்கள் உண்டு. அவர்கள், தமக்குப் பிடிக்காதவர்களை நேரில் தாக்குவதில்லை. பிடிக்காதவர்கள் எடுத்துக் கொண்ட பொருளையே தாக்கிப் பேசுவார்கள். கம்பர் தேடியெடுத்த கதையைத் தகர்த்துவிட்டுக் கம்பரைப் போற்றுவது என்பது எப்படி நாகரிகமாகும்?

மக்கள் உணவை உண்ணுகிறூர்கள். தண்ணீரைப் பருகுகின்றூர்கள். மூச்சு விடுகின்றூர்கள். வாங்குகிறூர்கள். இம் மூன்று செயலாலுமே நிலத்தில் நீடு வாழ்கின்றூர்கள் இவற்றுள் தாமறிந்து செய்யும் செயல்கள் உண்பதும் பருகுவதும் அறியாமலே செய்யும் செயல். சுவாசித்தல், இவற்றைப் போலவே, உலகத்தில் மக்கள் கருத்தறிந்து கற்ற நூல்கள் மற்றவைகளெல்லாம். பாரதமும், இராமாயணமும் அப்படிப் பட்டவையல்ல. அவை தாய்ப்பாலோடு சேர்ந்து மக்கள் உள்ளத்தில் புகுந்து உறைந்து நிற்கும் பெருங் கதைகளாகும். பேச்சாளர் எனப் பெயரெடுக்கும் போதே பாரத இராமாயணத்தைப் புகழ வேண்டும். அல்லது இகழவேண்டும். கலியாணங்களில் அழைக்காமல் வருபவர் யாருமிலர். தெருச் சண்டைகளுக்கு அழைத்து வருபவர் யாவருமிலர். ஆனல், அழைத்ததைவிட அழையாமைக்குத்தான் அதிகக் கூட்டம். காவியங்களைப் புகழ

கின்றவர்கள் கடின உழைப்பினர்களாக இருக்க வேண்டும். இகழுகின்றவர்கள் இங்கொன்று அங்கொன்று படித்தால் போதும். புகழ்வாருக்கு ஊதியம் குறைவு, இகழ்வாருக்கு ஊதியம் நிறைவு. இப்படிக் காய்தல் உவத்தலின்றிப் பேச்சாளரைக் காக்கும் நூல்கள் பாரத, இராமாயணங்கள்.

இக் கதாபாத்திரங்கள், சில சமயங்களில் சிறு சிக்கல்களில் அகப்பட்டு அழுங்குவதும் உண்டு. அக் காலங்களிலெல்லாம் உலக மக்களில் தக்கவர்கள் தகும் என்று நம்பும் வண்ணம், சிக்கல்களிலிருந்து தப்பித் தலையெடுப்பதே கதாபாத்திரங்களின் கண்ணியமாகக் கருதப்படுகின்றது. இந் நெருக்கடியான செயல்களில் கவிகள் தாம் அறமுடையாரென மெச்சும் கதாபாத்திரங்கள் பக்கம் சாய்ந்து சிலவற்றை மூடிமறைக்க முற்படுவதும் உண்மைதான். சமயப் பற்றுள்ள நூல்களில் இது சற்றுத் தலைகாட்டுவதும் உண்டு. ஆனால், பொது நூல்களாகிய இராமாயண பாரதங்களில் அப்படியில்லை. உள்ளதை ஒளிவு மறைவின்றி உரைத்து, அக் கடுஞ் சூழ்நிலையில் தமது கதாநாயகன் எப்படிக் கரை கண்டானென்பதனை வடித்து எடுத்துக் கொடுத்துவிடும் மதுகை சார்ந்தவர் நமது கவிச்சக்கரவர்த்தியாகிய கம்பர்.

கம்பரில், மிக நுண்ணிய இடங்களில் ஒன்றிரண்டு சொற்களில் இவ்வகை அச்சாணிகள் இருக்கின்றன. அவற்றைத் தேடிப்பிடிக்க வேண்டும். அதைவிட்டு, கதாபாத்திரங்களைக் குறை களைந்துப் பெருமைப் படுத்துவதில் நாம் கம்பரைவிட அக்கறை உள்ளவர்கள் என நம்மை நாமே மதித்துக் கொண்டு நமக்குக் கைவரும் யுக்தி வாதங்களில் இறங்கினால் அறிஞர்கள் ஒப்பும் வண்ணம் அமைத்துக் காட்ட முடியாது. அது முறையுமல்ல. கம்பர் ஓர் இடத்தில் இராமனைச் சிறந்த மனிதர் என்பார். ஓர் இடத்தில் இராமனைச் சிறந்த மனிதர் என்பார். ஓர் இடத்தில் அவன் தேவதேவன் என்பார். இந்த இடங்களை நாம் மாற்றிப் பார்த்தால் உலகத்திற்கு அந் நூலால் பயன் ஒன்றும் கிடைக்காது; அதற்காகத் தான் அவர் அப்படிக் கூறியுள்ளார் என்பதனை நன்கு உணரலாம். இராமன், இலக்குவன் கொண்ட கோபத்தைத் தணிக்க முற்படுகின்றான். அவன் "தம்பீ! உப்பு நெய்தல்

நிலத்தில் விளையும். அது மருத நிலத்தில் விளையாது. கரும்பு, மருத நிலத்தில் விளையும். அது நெய்தல் நிலத்தில் விளையாது. அவற்றைப் போலவே, தீய உள்ளத்தில் அமைதி பிறக்காது. நல்ல உள்ளத்தில் வெகுளி பிறக்காது. உனது உள்ளம் நல்ல உள்ளம். இதில் கரும்பு போன்ற சாந்தம் பிறப்பது வழக்கம். இன்று வேண்டாத அளவு உப்பையொத்த கோபம் பிறந்துளதே, ஏன்?'' என்று கேட்டனன்

''விளையாத நிலத்தில் இது எங்ஙன் விளைந்தது?'

என்றான். இலக்குவன், ''நான் ஆண்மையுள்ள அரசிளஞ் செல்வன். எனக்கு வீர உணர்வு உண்டு. வீர எழுச்சிக்குக் கோபம் அடிப்படை, ஆதலால் யான் கோபத்தை வேண்டுமென்றே கொண்டுளேன். இக் கடுங் காலத்தில் அன்றி எப்பொழுதான் வீரத்தையும் கோபத்தையும் மேற்கொள்ளுவது. நீங்களே சொல்லுங்கள்'' என்றனன் இலக்குவன்.

''யாண்டோ அடியேன் சினம் ஏற்பது''

என்றான். அண்ணல், யார் மேல் கோபம் என்றான். இலக்குவன். நினது பட்டத்தைக் கலைத்தார் மேல் கோபம் என்றனன். இராமன் அது வினையின் செயல் என்றனன். இலக்குவன் இதோ,

''வினைக்கும் வினையாகும் என் விற்செயல் காண்டி
யென்றான்''

இடுக்கணுக்கு இடுக்கண் படாத இந்த வீரசிங்கம் அடங்க வேண்டும். அச் செயலில்தான் மேற்கொண்டு வெற்றி பெற வேண்டும். இங்கு இராமன் என்ன செய்தனன்? தம்பீ என்னை நாளும் நல்லுரைகளை ஊட்டி வளர்த்தவர் தந்தை தசரதனார். அவருரையைக் கடப்பதைத் தவிர உனக்கு இழி செயல் வேறு கிடையாது. இது போலவே என் சொல்லைத் தட்டுவதைத் தவிர உனக்கு இழி செயல் ஏதேனும் உளதோ, இசை என்றனன். இதற்கு வேறு விடையின்றி நின்றான் இலக்குவன். அவனது வெகுளி துக்கமாக மாறிற்று. கண்ணெரி தண்ணீராக மாறிற்று. இந்த இடத்தில் இராமனுக்கு இந்தக் காலத்திற்கேற்ற

உணர்வு எப்படி வந்தது என்பார். இராமன் வடமொழிக் கடலும் தமிழ்மொழிக் கடலும் கரை கண்டவன். அதனுல் அவன் அறிவு கற்றனைத்து ஊறிக் கரைபுரண்ட அறிவு என்றனர்.

''நன்சொற்கள்தந்து என்னை நாளும் வளர்த்த தந்தை
தன்சொற் கடந்துஅரசாள்வது எனக்குத் தக்கது அன்ருல்
என்சொற் கடந்தால் உனக்கு யாதுளது ஈனம் என்ருன்
தென்சொற்கடந்தான் வட சொற்கடற்கு எல்லை
தேர்ந்தான்''

இங்கே இராமனைத் தேவன், அவன் இலக்குவன் கோபத்தை மாற்றி விட்டான் என்று கூறவில்லை. அவன் அனைத்தும் கற்றவன்; அதற்கேற்ற அறிவு நுட்பமும் உள்ளவன்; தீராக் கோபத்தைச் சிறுவரையில் தீர்த்துவிட்டான் என்றனர் கம்பர். பார்த்தீர்களா? நீங்களும் படியுங்கள். எதையும் அடக்கி ஆளும் அறிவைப் பெறுவீர்கள் என மக்களுக்குக் கதையைச் சொல்லிப் பராக்குக் காட்டி ஊட்டுகின்ருர் அவர். அவன் தேவன் என்ருல், பயன் இல்லை இங்கு.

அண்ணல் மரவுரி தரித்துக் காட்டிற்குப் புறப்பட்டு விட்டான். தடுப்பார் யாருமில்லை. தாய்ச்சொல், வீரன் நய மொழிகளின் முன்னே எடுபடவில்லை. வந்தார் வதிட்டர். இவன் எப்படிச் சொன்னுல் தட்டாமல் நிற்பான் என நீடு நினைத்தார், பேராசிரியர் வதிட்டர். அவர், 'ஆண்டகையே நீ காட்டில் அடி வைக்கும் நேரம் மன்னவன் தேவலோக மேட்டில் அடி வைப்பான் போலிருக்கிறதே, என்ன செய்வதப்பா' என்றனர். இராமன், அரசன் இறந்தால் இறக்கட்டும், எனக் கூற வேண்டும். அல்லது, தந்தையை விட்டு எப்படிப் பிரிவேன்? மரணச் சூழலா? இதோ நின்று விட்டேன் என முடிவு கொள்ள வேண்டும். கரை கண்ட கல்விமானுகிய வதிட்டர் இவ்வளவு பெரிய முட்டுக்கட்டையைக் குறுக்கே இட்டு விட்டார். இராமனுகிய பெரிய தேர் இதை விட்டு எப்படி அப் புறம் அசையும் என எண்ணினுர் அவர். ஆனுல், அண்ணலுக்கு அப் பெரிய முட்டுக்கட்டை ஒரு சிறிய துரும்பாகத் தெரிந்தது. அதனை மெல்லென

எடுத்து அப்புறமிட்டுப் புறப்படலானான் ஐயன். இராமன் என்ன சொல்லினான். ஐயனே எனது தந்தையின் கட்டளையைத் தலைமேற் கொண்டு நடப்பது எனது கடன், அவரது இடரை நீக்குதல் உங்களுக்குள்ள கடன். இத் தருமம் தாங்களே எனக்குக் கற்பித்த அற நூற்களிலுள்ளதுதான். யான் ஏகுகின்றேன். நீங்கள் காத்தருளுங்கள் எனச் சொல்லிப் புறப்படலாயினன். இவன் யார்? பாம்பணைப் பள்ளியை விட்டு அயோத்திக்கு வந்த அமலன் என்கின்றார் கம்பர்.

"அன்னவன் பணிதனை யேந்தி ஆற்றுதல்
என்னது கடன் அவன் இடரை நீக்குதல்
நின்னது கடன் இது நெறியும் என்றனன்
பன்னகப் பாயலுள் பள்ளி நீங்கினான்."

அங்கே இராமனைத் தென்சொற்கடந்தான் வடசொற் கடற்கு எல்லை தேர்ந்தான் என்றனரே, அதை இங்கே வைத்திருந்தால், இராமன் கற்றவன், இவனைத் தடுக்க முயன்ற வதிட்டர் கல்லாதவன் என்று ஆகிவிடும். அப்படிக் கூறுவதால் பயனும் இல்லை; அது, மரபுமல்ல. வதிட்டன் எதிர் நிற்கும் இராமன் தோற்றத்திலேயே ஈடுபட்டு இவன் நமது மாணவன் இவனைக் கல்வியாற்றலால் கட்டுப்படுத்தி விடலாமென எண்ணினன். முனிவன், இராமன் பூர்வீகத்தைத் தெரிந்திருந்தும் அதை எண்ணிப் பார்க்காமல் ஏமாந்தனன் என்கின்றார். வதிட்டன், பிரம்மபுத்திரன், பிரமன், திருமாலின் திருமகன். எனவே எதிர்நிற்பவன் தனக்குப் பாட்டன், நாம் அவனுக்குப் பேரன். அவன் அநுபவத்தை நாமெப்படி வெல்லுவது எனக் கருதாது கவன்றனன் என்றனர் கம்பர். இங்கே மற்றவர்கள் கற்றவர்கட்கு அடங்க வேண்டும். கற்றவரும் தெய்வத்திற்கு அடங்கித்தான் ஆக வேண்டும் என்றதேற்றப் பொருள் கிடைக்கின்றதல்லவா? இது கம்பர் வழி.

இனி நாம், வாலி வழக்கை வடித்தெடுக்க, முதலில் வாலி சுக்ரீவன் பண்புகளைப் பார்க்க வேண்டும். இரண்டாவது, சீதாதேவியார், உருமை இருவரது ஒழுக்கங்களையும் உற்று நோக்க வேண்டும். ஏனெனில், களவின் கடுமை களவாடிய

பொருள்களின் தரத்திற்கேற்ப மாறுகின்றது. வழியிற் கிடந்த பொருளைக் கண்டெடுத்துப் போனவனையும், கன்னமிட்டுக் களவு செய்தவனையும் ஒன்றாக மதிப்பதில்லை. இராவணனையும், வாலியையும் பெண் திருடிகளாகப் பேசுகின்றார்கள். அதிலும் இராவணனைத் தூதனுப்பிக் கேட்டுப் பார்த்துத் தண்டிக்கின்றார்கள். வாலியைக் கேள்வி முறைக்கும் அப்பாற்பட்ட தண்டனைக்கு உள்ளாக்குகின்றார்கள். ஆதலால், இவர்கள் இருவரும் களவு செய்ய ஏதுவாக இருந்த இரு நங்கை நல்லார் தரங்களையும் சற்றே ஆய வேண்டும்.

மூன்றாவதாக, இப் பெருஞ் செயலில் பெரும் பங்கெடுத்துக்கொண்ட அநுமனைப் பற்றியும் ஆராய வேண்டும். அநுமன் வாலி வதைக் காலத்தில் இருந்த நிலை என்ன? இராமனுக்குத் தொண்டனாகவா? சுக்ரீவனுக்கு அமைச்சனாகவா? அன்றி அநுமன் ஆர்வம் எதில் இருந்தது? அநுமன் நிலை முன்பின் மாற்றங்களுக்கு உள்ளாயினவா? இளமை முதல் என்றுமே ஒரே நிலைதானா என்பனவும் தெரிய வேண்டும்.

நான்காவதாக, பிறந்த நாள் முதல் வள்ளலைப் பிரியாதிருக்கும் பெருந்தகை, இலக்குவனார் நிலையையும் நினைவுகூர வேண்டும். வாலி திறத்தில் அவர் எவ்வண்ணம் ஈடுபட்டிருந்தார்; எடையிடும் தூக்கின் முனை தப்பிச் சாய்ந்தாலும் இலக்குவன் நோக்கின் முனை மாறாதே; அவருளப் பாங்கு எப் பக்கம் சாய்ந்திருந்தது என்பதே தேற்றத்திற்குரிய செய்தியாகும்.

ஐந்தாவது, வாலி வதைக்கு முன்னும் பின்னும் வாலியும் வாலியின் குடும்பத்தினரும் இராமபிரானை எப்படி மதித்து வந்தார்கள்? வள்ளலின் மனம் அக் குடும்பத்தினரை எப்படி மதித்து வந்துளது என்பதனையும் காண வேண்டும். இவ் வைந்து வகை ஆய்வுகளும் வாலி வழக்கியலுண்மையைப் படம் பிடித்துக் காட்டிவிட வல்லவை எனக் கருதுகின்றேன்.

வாலியும்—சுக்ரீவனும் :

வாலி ஒரு சிறந்த சிவ பக்தன். அவன் இராம பக்தனும் கூட. வாலி சோழ வள நாட்டில், காவிரிக்கு வட கரையி லுள்ள, வடகுரங்காடுதுறை யென்னும் திருத்தலத்தில், சிவ பெருமானை வழிபட்டவன் சைவ சமயப் பெருந்தலைவரா கிய திருஞானசம்பந்தர், வாலியை 'வாலியார்' என்று சிறப் புறக் கூறுவார்.

"நீலமா மாணிநிறத் தரக்கனை யிருபது கரத்தொடொல்க
வாலினல் கட்டிய வாலியார் வழிபட மன்னு கோயில்
ஆலுமா காவிரி வடகரை யடைகுரங் காடுதுறை
நீலமா மணிமிடற் றடிகளை நினையவல் வினைகள் வீடே"

இத் திருப்பாடல் வாலிக்கு எவ்வளவு சிறப்பு அளிக்கின்றது. வாலி இராமபிரானை புருஷோத்தமனுகப் போற்றுகின்றனன். சுக்ரீவனல் அறைகூவப்பட்டுப் போருக்குப் புறப்படலாயினன் வாலி. வாலியின் மனைவியாகிய தாரை, 'உனது தம்பிக்கு யாரோ புதுத் துணைவர்கள் வந்துளரா'மெனக் கூறினள். வாலி, 'அமரர் அசுரர் அரக்கர் யாவரினும் என்னை முன் னின்று வெல்லுவாரிலர்' பின்னை யார் என் பின்னவனுக்குத் துணை வர உள்ளனர்; என்றனன். தாரை யாரோ இராம இலக்குவராம், அண்ணன் தம்பிகளாம், அரச குமாரர்களாம் என்றனள். வாலி திடுக்கிட்டனன். அவன் எடுத்த எடுப்பில், 'பாவீ! நீ இப்படி அடாத மொழிகளைப் பகரலாமா' என அதட்டினன். தாரை அச்சமுற்றனள். வாலி இராமபிரான் சிறப்பியல்புகளை உணர்ச்சி ததும்ப உரைக்கலாயினன். "உலக மக்கள் தாம் அறியாமல் செய்துவிட்ட தீவினைகளைத் தீர்த்துக்கொள்ள வழி தேடுகிறார்கள். அது, தெரியாமல் திகைக்கிறார்கள். இவ்வகை மக்களுக்கு, அறச் செயலின் ஆற்றலை விளக்கித் தேற்ற வந்த செம்மல் இராமன். அப் பெருந்தகையின் கொள்கைக்கு நேர்மாறான செய்கைக்கு அண்ணல் வந்திருப்பதாக உனக்கு யார் சொன்னவர்? சொல் லுவார் சொல்லினும் நீ எப்படி நம்பி அதை என்னிடமும் சொல்லலுற்றனை. உனது பேதைமைப் புத்தியால் நீ பாபத் திற்கு உள்ளாயினை" என்றனன். (வாலி வதை 22வது பாடல்).

"உழைத்தவல் விருவினைக் கூறு காண்கலாது
அழைத்து அயர் உலகினுக்கு அறத்தின் ஆறுஎலாம்
இழைத்தவற்கு இயல்புஅல இயம்பி என்செய்தாய்
பிழைத்தனை பாவியுன் பெண்மைபால்" என்ருன்.

மேலும் வாலி கூறினுன்; இராமன் தனது தம்பி மார்களையே தனது உயிராகக் கொண்டவன். அவன், எனக்கும் என் தம்பிக்கும் உள்ள வேற்றுமையை ஒருக்கால் நீக்க முற்படலாம். ஆனுல், அவன் இருவரில் ஒருவனுக்குத் துணையாக வந்து அயலவனுக ஒருவனை யெண்ணும் அழி கரம்பிற்குச் செல்லக்கூடாத செம்மல். இராமன் ஒரு தர்ம சமுத்திரம். அவனையா இப்படித் தப்பிதமாக எண்ணுவதும் இசைப்பதும் என்றனன்.

"தம்பியர் அல்லது தனக்கு வேறு உயிர்
இம்பரின் இலதுஎன எண்ணி யேய்ந்தவன்
எம்பியும் யானும் உற்று எதிர்ந்த போரினில்
அம்பு இடை தொடுக்குமோ அருளின் ஆழியான்"

இராமன் தனது தந்தையும் மந்திரிகளும் கூடி, நாளை நீ அரசன் என்று வற்புறுத்த அதனை ஒப்புக்கொண்டு உலகத் திற்கு முதல்வனுனன். இனிப் பட்டங்கட்டும் சடங்கொன் றுமே பாக்கியாக நின்றது. அந்த நேரத்தில் தன்னைப் பெற்ற தாய்க்கு மாற்றவளான கைகேயி தடுத்துக் கானகஞ் செல்லப் பணித்தனள். இக் கொடுமை செய்தவள் மகனுக்குத் தான் ஏற்றுக்கொண்ட அரசெலாம் மனமகிழ்வோடு அளித்து வனம் புக்க பெருந்தகை. இந்த ஐயனைப் போற்றவேண்டும்; நீ தூற்றுகின்ருய்; இது அடுக்குமா?" என்றனன். (வாலி. வதை 24-ல்).

"ஏற்றபே ருலகெலாம் எய்தி ஈன்றவள்
மாற்றவள் ஏவமற் றவள்தன் மைந்தனுக்கு
ஆற்றரு முவகையால் அளித்த ஐயனைப்
போற்றலை நீயிது புகறற் பாலையோ?"

இம்மை மறுமைப் பயன்களை ஒருங்கே நோக்கி நடக்கும் பேரறிவுடையவர்களுக்கு ஒருவனைச் சார்ந்து ஒருவனைப் பகைப்பதில் விருப்பமும் வருமோ? அதுவொரு பெருமை

யாகுமோ ? அவர்களுக்கொவ்வாதது எல்லாம் நீ பேசிவிட்டனையே. உலகத்து உயிரெலாம் காக்க முன்னிற்கும் தருமத்தின் உருவமல்லவோ இராமன். அந்தத் தருமம் தன்னைத் தானே கெடுத்துக்கொள்ளுமோ ?

"இருமையும் நோக்குறும் இயல்பி னார்க்கிது
பெருமையோ இங்கு இதில்பெறுவது என்கொலோ ?
அருமையினின்று உயிர்ப்பளிக்கும் ஆறு உடைத்
தருமமே செகுக்குமோ தன்னைத் தானரோ"

—வா. வ. ப. 32

என்றெல்லாம், உள்ளம் உருகத் தாரைக்கு உரைத்தனன் வாலி. எனவே, இராமனையும், இராமன் பெருங்குடி வரலாற்று வரிசையையும் நன்கறிந்திருந்தவன் வாலி. அப்பெருங்குடியின்பால் பற்றும் பக்திமையும் கொண்டிருந்தவன் வாலி.

வாலியான தனது கதாபாத்திரத்தின் காதுகளுக்கும் நல்ல காதணியைப் பூட்டுகின்றார் கம்பர். அவன் தோட்கப் பட்ட செவியனும். அவன் காதில் போட்டுக்கொள்வது கேள்வியாம். "செவியுறு கேள்விச் செல்வன்" என அறிமுகம் செய்விப்பார் வாலியை. இது திருக்குறளிலிருந்து தேடி எடுத்த செவியணி. "செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம் செல்வத்துள் எல்லாம் தலை." இந்தத் திருக்குறளை வாலிக்குப் பட்டாவாக்கி விடுகிறார் கவிச் சக்கரவர்த்தி. அவர் "கேள்விச் செல்வன்" என்பதோடு விடாமல், "செவியுறு"வும் சேர்த்திருப்பதால், செவிச் செல்வத்தையும் வாலியையும் ஒருங்கே வகைப்படுத்திக் காட்டுகின்றனர் என்பதனை உணரவேண்டும்.

தான் பாராட்டிய பொருளைப் பழித்து உரைக்க நாணுகின்றவன் வாலி. அவன் அடிபட்டு விழுந்த பிறகும் இந்தத் தகுதிக்குப் பொருந்தாத செயல் செய்ததற்குக் காரணம்; அண்ணல் தனது தேவியைப் பிரிந்து துன்பத்தால் திகைப்புற்ற செயல் போலும் என இரங்குகின்றவன் வாலி. அவன் உயிர் துடிக்கும் நேரத்திலும் யான் உனக்கு உதவியொன்றும் செய்யமுடியவில்லையேயென இரங்கும் பண்பு உடையவன்.

மற்றப்படி வாலியின் சிறப்பு இயல்புகளை வருமிடங்களில் பார்ப்போம்.

இனி, சுக்ரீவனைப் பற்றி ஆராய்வோம். சுக்ரீவன் இவ்வளவு பரந்து சிறந்த இராமன் வரலாறு ஒன்றையும் ஒரு சிறு பகுதியையும் முன்னதாகத் தெரிந்திருந்ததாகத் தெரியவில்லை அவன் அனுமன் அறிந்து வந்து கூறிய பிறகுதான், இராமன் இயல்புகளைத் தெரிந்துகொண்டவன். அனுமன், இராம இலக்குவரைக் கண்டவுடன் அவர்கள் ஆற்றலையும் அல்லலையும் ஒருவாறு அறிந்துகொண்டனன். அவை யாருஞ் சொல்லி அறிந்தனவல்லன். தனது நுண்ணறிவினால் தானே அறிந்தவை. அவர்கள் நீ யாரெனக் கேட்டதற்கு மிகு மரியாதையோடு,

"மஞ்செனத் திரண்ட கோல மேனிய மகளிர்க் கெல்லாம்
நஞ்செனத் தகையவாகி நளிர்இரும் பனிக்குத் தேம்பாக்
கஞ்சம் ஒத்து அலர்ந்த செய்ய கண்ண! யான்
காற்றின் வேந்தற்கு
அஞ்சனை யிடத்து வந்தேன் நாமமும் அனுமன் என்பேன்"

என மிகு சிறப்போடு விடையிறுத்தனன். ஆனால், இராம இலக்குவர்களை அவன் அவ்வளவு தெரிந்த அளவிலும் பணியவில்லை. பிறகு அநுமன் இலக்குவனால் அவர்கள் வரலாற்றையும் பண்புகளையும் கேட்டுணர்ந்தனன். உடனே "நின்ற அக்காலின் மைந்தன் நெடிது வந்து அடியில் தாழ்ந்தான்." ஏன்? வணக்கமும் பிணக்கமும் சிந்தியாமல் செய்துகொள்ளுவனவல்லன். இக் காலத்தில் கண்டதற்கெல்லாம், கண்டவர்க்கெல்லாம் வணக்கஞ் சொல்லுவது ஒரு நாகரிகமாக மதிக்கப் பெறுகிறது. அப்படி அற்பத்திற்கெல்லாம் வணங்குகிறோம். அப்படியே அற்பக் குறை யொன்று நேர்ந்தால் உடனே பிணங்கிக் கொள்ளவும் செய்கின்றோம் நன்கு ஆய்ந்தான்; வணங்கத் தக்கவரென்று அறிந்தான். வணங்கினான் வாயுவின் செல்வன். பிணக்கம் உண்டா? உலகம் ஒடுங்கும் நாளும் இல்லை.

இது அனுமன் செயல். நமது சுக்ரீவன் செயலென்ன? இராம இலக்குவரைக் கண்டவுடன் இவர்கள் வாலியின்

ஆட்களென அஞ்சி ஒளித்தனன். அனுமன் சென்று அறிந்து வந்து விளக்கியவுடன் எதிர் சென்றான்; வரவேற்றான். தோற்றத்தால் அவர்கள் தெய்வ நலத்தையும் தெரிந்து மகிழ்ந்தான். ஆனால், வணங்கினான் என்பதேயில்லை. அவர்கள் இவன் வணக்கத்தை எதிர் பார்க்கவில்லை; பார்வையாளர் களாகிய நாம், பார்த்தே ஆகவேண்டும். நிகழ்ச்சிகள் வள ரட்டும்; பொறுத்துப் பார்ப்போம்.

அனுமனால் அறிமுகஞ் செய்விக்கப் பெற்று இருவரும் உரையாடினார்கள். இராமன் தனக்குக் கவந்தனாலும் சபரி யாலும் சுக்ரீவனைப் பற்றித் தெரிந்ததையும் கூறி, எங்களுக்கு ஒரு துன்பம் வந்துளது, அது தீர உனது துணையை நாடித் தான் இங்கு வந்துளோம் எனவும் இயம்பினன். அன்றியும் உன்னால் எங்கள் குறை தீருமென நம்புகின்றோம் எனவும் நவின்றனன்.

''மையறு தவத்தின் வந்த சபரியிம் மலையில் நீவந்து
எய்தினை யிருந்ததன்மை யியம்பினள் யாங்கள் உற்ற
கையறு துயரம் நின்னால் கடப்பது கருதி வந்தோம்
ஐய! நிற்றீரும்'' என்ன அரிகுலத்து அரசன் சொலவான்.

—ந. கோ. ப. 24

(அரிகுலம்—வானர குலம்). இப்படி ''கையறு துயரம்', அதாவது ஓர் ஒப்பற்ற பொருளையிழந்து தவிக்கும் துயரம் என விளக்கமாக உரைத்தும் உள்ளம் துடிக்கவில்லை சுக்ரீவ னுக்கு. 'அப்படியா! என்னால் இயன்றதைச் செய்கின்றேன்' என ஆதரவும் கூறவில்லை 'அவன். அடுத்து உடனடியாக 'எனக்கும் ஓர் குறையுண்டு. அதனைத் தீர்க்கவேண்டி உங்க ளுக்கு யான் அடைக்கலம் புகுகின்றேன்; காக்கவேண்டும்' என்று வேண்டினன் சுக்ரீவன். 'அவன், எனக்கு அண்ணன், மிக்கவல்லமையுள்ளவன், என்னைக் கொல்ல வழி தேடித்துரத் தினான்; நான் இந்த மலையில் ஒளிந்ததால் உயிர் பிழைத்தேன் உங்களுக்கு அடைக்கலம் புகுகின்றேன். என்னைக் காப்பது உங்கள் கடமை' என்றனன்.

''முரணுடைத் தடக்கைஓச்சி முன்னவன் பின்வந்தேனை
இருள்நிலைப் புறத்தின்காறும் உலகெங்கும் தொடர இக்குன்று

அரண் உடைத்தாகி உய்ந்தேன் ஆருயிர் துறக்கல் ஆற்றேன்
சரண் உனைப் புகுந்தேன் என்னைத் தாங்குதல் தருமம்'' என்றான்.
—நட்புகோட் படலம், 25

இப்பொழுதாவது வணங்கினானா சுக்ரீவன். இல்லை; இன்னும் பார்ப்போம். இங்கு அவன் குறையைக் கேட்டவுடன் இராமபிரான் உள்ளம் துடித்தது. 'அப்படியா' ஓர் அண்ணனா தம்பியைக் கொல்ல வருகின்றான், எனப் பெரிதும் இரங்கி 'இதுவரை நீ யடைந்த இன்ப துன்பங்கள் போக, இனி உனக்கு வருவது எனக்கும் பாதியாகும். உனக்குப் பகை எனக்கும் பகை; உனக்கு உறவு எனக்கும் உறவே. உனக்கு இனி அண்ணன் யானே நீயும் எனக்கு ஒரு தம்பிதான்' என்றருளினன் இராமன்.

''என்றவக் குரங்கின் வேந்தை இராமனும் இரங்கி நோக்கி
உன்றனக்குரிய இன்ப துன்பங்கள் உள்ள முன்னாள்
சென்றன போக மேல்வந்து உறுவன தீர்ப்பல் அன்ன
நின்றன எனக்கும் நிற்கும் நேர் என மொழியும் நேரா''

''மற்றினி உரைப்பது என்னே வானிடை மண்ணில் நின்னைச்
செற்றவர் என்னைச் செற்றார் தீயரே எனினும் உன்னோடு
உற்றவர் எனக்கும் உற்றார் உன்கிளை எனதுஎன்காதல்
சுற்றம் நின் சுற்றம் நீஎன் இன்னுயிர்த் துணைவன் என்றான்''
—நட்புகோட் படலம், 26, 27

இதுகேட்டு வானரப் படைஞர்கள் பெரிதும் மகிழ்ந்து ஆரவாரித்தனர். அனுமன் புளகாங்கிதம் கொண்டனன். ஏன்? இதற்காக நெடுங்காலம் எதிர் பார்த்த நிகரில் அமைச்சன் அவன். ஆதலால்தான் அனுமனுக்கு இவ்வளவு மகிழ்ச்சி

''ஆர்த்தது குரக்குச் சேனை அஞ்சனைச் சிறுவன் மேனி
போர்த்தன பொடித்த ரோமப் புளகங்கள்''

மகிழ்ச்சி மிக்க அனுமன், இராமனை அப்பொழுதும் எழுந்து அடியில் விழுந்து வணங்கினான். அனுமன் வணங்கிய அப்பொழுதும் சுக்கிரீவன் வணங்கவில்லை. பின்னர் எப்பொழுது

தான் இந்த அண்ணலை அந்தச் சுக்ரீவன் வணங்குகின்றனன்? அவன் தனது மாளிகைக்குச் சென்று விருந்திட்டு, வாலியின் வரலாறு உரைத்து, தன் மனைவியை வாலி கவர்ந்ததைக் கூறி, அவர் வெகுண்டு போருக்கெழ, இவ் வண்ணலால் அவனை வெல்லலாகுமோவெனச் சுக்ரீவனுக்கு ஐயம் வர, அனுமனைத் தனியழைத்து அதனை உரைக்க, அனுமன் 'சந்தேகம் வேண்டாம் மராமரத்தை யெய்யச் செய்து அண்ணல் வலியை அளந்து காட்டுகின்றேன், என உறுதி உரைத்து, இராமபிரானை அழைத்துச் சென்று மராமரத்தைக் காட்ட, அவர் வில் வளைத்து நாண் தொனி செய்து கணை தொடுக்க, உலகம் கிடுகிடுக்க, மரங்கள் துளைபட, அப்பொழுதுதான் இராமன் அடிகளில் வீழ்ந்து வணங்கினுன் இந்தச் சுக்ரீவன்.

எனவே, இராமபிரான் பண்பிற்கு வணங்கினவனல்லன் சுக்ரீவன்; பலத்திற்கு வணங்கினவன். விருந்தினனுக வந்த அண்ணலின், துன்பத்தில் பங்கு கொள்ள முற்படவில்லை சுக்ரீவன்; தான் தருவதற்கு முன்னே அவரால் ஒன்று கிடைக்குமா என்ற கைம்மாற்றுக் கருத்திலேயே நின்றவன் சுக்ரீவன். இங்கே இராமன் தன் தகுதிக்கு ஏற்ப அவனுக்கு வாக்குறுதியை வாரி வாரி வழங்கிவிட்டனன். இது வரையில் முழுத்தகுதியுள்ள பாத்திரம் சுக்ரீவன் அல்லன் என்பது விளங்குகின்றது அல்லவா?

சீதையும் உருமையும்

"உருமை யென்றிவற்குரிய தாரமாம் அருமருந்தையும் அவன் விரும்பினுன்" என அனுமன் வாக்காக வரும் ஓர் இடத்தைத் தவிர சுக்ரீவன் மனைவியாகிய உருமையைப் பற்றி வேறு செய்திகள் ஒன்றும் தெரியவில்லை. மதங்கர் சாபத்தால்தான் சாரமுடியாத மலையில் தன்னுல் துரத்தப் பட்ட சுக்ரீவன் ஒளிந்து கொண்டனன் என்பதை வாலி அறிந்தனன். அவனை வெளிவரக் காண்பதற்காக அவன் மனைவியை வாலி தகைத்து வைத்திருந்தனனு? அல்லது உருமையைத் தன் மனைவிபோலவே பாவித்தனனு என்பதற்கு விளக்கம் எங்குமில்லை. ஆனுல், வாலியின் மனைவி தாரையின் வாக்காக,

''ஓயா வாளி ஒளித்துநின்று எய்வான்
ஏயா அந்த இராமன் என்று உளான்
வாயால் ஏயினன் என்னில் வாழ்வு எலாம்
ஈயாயோ அமுதேயும் ஈகுவாய்.''

இப்படித் தாரை சொல்லுவது, வாலியின் உயிர் நீங்கிய உடலைக் கட்டிக் கொண்டு வருந்துகின்ற பொழுதுதான். இதில், இராமன் உன்னைக் கண்டு உனது தம்பிக்கு விட்டுக் கொடு எனக் கூறியிருந்தால் நீ உனது வாழ்வு அனைத்தையும் தந்திருப்பையே, அப்படியன்றி மறைந்து கொன்று என்னை வருந்த வைத்தனனேயென மாழ்குகின்றாள். அம் மாழ்கலில் "வாழ்வு எலாம் ஈயாயோ'' வாலி உருமையோடு வாழ்ந் திருந்தான். அந்த வாழ்க்கைக்கு உரியாளையும் விட்டுக் கொடுத்திருப்பான் எனக் கொள்ளலாம். ஆனால், இது உறுதியான உரையாகாது. ஓர் ஐய உரைதான். அன்றி அரச போகம் அனைத்தையும் விட்டுக் கொடுத்திருப்பாயே யென்ற கருத்தமைய அவள் சொல்லியும் இருக்கலாம். ஒரு பெரிய அரச போகத்தைவிடப் பெண் போகம் பெரியதன்று. கடவுள் தரும் இன்பத்தைப் பற்றி ஒரு பெரியவர் பேசுகிறார்:

''கனியினும் கட்டிபட்ட கரும்பினும்
பனி மலர்க்குழல் பாவை நல்லாரினும்
தனிமுடி கவித்து ஆளும் அரசினும்
இனியன் தன்னடைந்தார்க்கு இன்னம்பர் ஈசனே''

என, இதில் கனிச் சுவையை முதலிற் கூறிப் பிறகு அதைக் கீழ்ப்படுத்திச் செங்கரும்பின் சுவையைச் சொல்லிப் பிறகு அவ் விரண்டினையும் தாழ்த்தி, அதற்கு மேலே பனிமலர்க் குழல் பாவை நல்லார் இன்பத்தை மேம்படுத்திக் காட்டி, அவற்றிற்கு மேன்மேலாகத் தனிமுடி கவித்துக் காட்டி அரசபோகத்தை விதந்தெடுத்துக் காட்டிடப் பேரின் பத்தைக் காட்ட அதற்கப்பாலே செல்லுகின்றார் அவர். அது, அப்பாலுள்ளது. இப்பாலுள்ளவாழ்வில் தலைசிறந்த வாழ்வு அரச வாழ்வுதானதலால் தாரை "உன் தம்பி ஒரு சிறு வட்டத்திற்குள் அரசு செய்கின்றான். உனது வசமிருக் கும் பகுதியே பெரியது, இராமன் கட்டளையிட்டிருந்தால்

இரண்டு பகுதியையும் சேர்ந்து அவனே ஆளத் தந்திருப் பாயே, பரிவுரை யாரும் கூறுமலே பாற்கடல் முயற்சியில் வந்த அமுதமெல்லாம் பரிந்தளித்த வள்ளலாயிற்றே. இன்று உன்னுல் மெச்சப்படும் இராமன் பரிந்துரையும் உனக்கு வந்தால் அனைத்தரசையும் தருவாயென்பதில் ஐயமில்லையே யெனவும் பொருள் தரும், 'வாழ்வெலாம்' என்ற சொல். ஆகவே, இந்த ஒரு சொல்லைக் கொண்டும் உருமை வாலியின் காதலியெனக் கூறிவிட முடியாது. அன்றி, அனுமன் வாயால் இவற்கு உரிய தாரமாம் உருமையென்னும் அரு மருந்தையும் விரும்பினுன் என்று வருகிறதே எனலாம். வருகிறது. அனுமனே கன்னியர் முகமே காணுதவன். அவன் ஐம்புலனடக்கம் பெற்ற அருந்தவன். வாலி ஒரு மாதைக் கவர்ந்து, மடக்கி வைத்தே, அனுமன் உள்ளத்திற்கு ஒவ்வாத செயல் ஆதலால் தனக்குப் பிடிக்காததைப் பெரிது என்று அனுமன் அலங்கரித்திருக்கலாம். ஒரு மரண தண்டனையை விடுதலை செய்வதிலேயே உயர்ந்த நீதிபதி களின் நோக்கமிருக்கும் வழக்கில் தங்களுக்கு வரும் ஐயங் களையெல்லாம் அவர்கள் மரணவாயிலில் துடிக்கும் ஒருவனுக் காகத்தான் வழங்க முற்படுவார்கள். அதுபோல உருமை கற்பிற்குரியவளா, அது நீங்கினவளா என்ற ஐயம் வருகிறது. இதற்கு நீங்கினவள்தான் என்பதை உறுதியாக்க உள்ளம் தடைபடுகின்றது. உருமை வாலிபாலிருந்து சுக்ரீவன் பால் வந்து அவனோடு அளவளாவிக் கொண்டுதான் இருக்கின்றுள். சுக்ரீவனும் உருமை வாழ்வை அருவருக்காமல் அரச வாழ்வையும் மறந்து அவளோடு காலங் கழிக்கின்றனன் என் பதும் இந்தத் தாரை வாக்காகவே நமக்குக் கிடைக்கின்றது.

கார்காலம் கழிந்தும் இராமன்பால் வராதிருந்த சுக்ரீவனை வெறுத்து இலக்குவனை அண்ணல் ஏவ, அவன் வரவிற்கு அஞ்சி அனுமனும் அங்கதனும் தாரையினிடம் சென்று முறையிட அவள் உதவியை மறந்து கிடந்த தனது மைத்துனனை வெறுத்து அனும அங்கதரிடம் பேசுகின்ற பொழுது,

''தேவி நீங்கஅத் தேவரில் சீரியோன்
ஆவி நீங்கினன் போல் அயர்வான் இது

பாவியாது பருகுதிர் போலும்நும்
காவி நாண்மலர்க் கண்ணியர் காதல்நீர்''

என்று கேட்கின்ருள் தாரை. இந்த இடிப்புரை, யாரை நோக்கியது? பிறவிச் சாமியாரான அனுமனை நோக்கி இப்படிப் பேசுவாளா? அல்லது தனது மகனைப் பார்த்துக் கேட்கின்ற கேள்விதான் இதுவா? அவள் தனது மைத்து னனது காம மயக்கத்தால் வந்த அல்லலை நோக்கி அறைவ தல்லவா இது? தாரை "நும் என்றது சுக்ரீவன்தான். அவளால் சுட்டப்படுகின்றவள் உருமைதான். "நீர் நும் காவி நாள்மலர்க் காதல் நீர்பருகுதிர்போலும்'' என்ற சொற் ருெடருக்கு வடநூல் துறை போன ஒருவரை உரையெழுதச் சொன்னுல், அவர் ஒரு நூலே எழுதி முடித்துவிடுவார். "கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்று அறியும் ஐம்புலனும் ஒண்தொடி கண்ணே உள'' என்ற திருக்குறள் விளக்கத்தில் பரிமேலழகர் "வட நூலார் இடக்கராகக் கூறும் யாவும் இதனுள் அடங்கும்'' என்கின்றனர். அதனுல்தான், வட நூலார் இன்பத் துறைக்கும் இடக்கருக்கும் கைதேர்ந்த வர்கள் என யான் துணிந்து கூறுகின்றேன்.

இவ்வளவு பெருவாழ்வு, ஊருக்குப் போய் இருந்து வந்த உருமையினிடத்தில் சுக்ரீவனுக்கு உறும்வாழ்வு. இதெல்லாம் நோக்க உருமை திறமானவளாகவே அங்கு இருந்திருக்கலாம் என எண்ணவும் இடமிருக்கின்றது.

சீதையின் தவவாழ்க்கை, உடையவன் இடத்தில் தனது உடலையும் உயிரையும் ஒப்புவிக்க வேண்டும் என்ற ஒரே நிலை யில் இருந்தது. தேடிச் சென்றது தூதுவன். நாடிப் பார்த்த காலம் உயிரூசலாடும் கொந்தளிப்பான காலம். இராவணன் காதல் ஏக்கத்தையும், சீதையின் கற்பின் ஆக்கத்தையும் ஆற்றலையும் அநுமன் கண்ணுரக் கண்டு வந்து சொல்லினுன். தன்னைத் திரிசடை தாங்கத் தான் ஒரு சடையுற்றுக் கரிசடைந்த காட்சியளாக மீண்டவள் சனகன் பாவை. அவள் அல்லலுற்ற கோலத்தை மல்லலுற்றதாகத் திருத்திக் கொள்ள விபீடணன் வேண்டினுன். மானவள் மறுத்தனள். அண்ணலின் குறிப்புரை இதுவென்றனன் அவன். அழகு

படுத்த வான மாதர் காத்திருந்தனர்; செய்து முடித்தனர். சீதை செம்மல் முன் உற்றனள். கொற்றவன் வெற்றித் திருவை வேறு நில் என்றனன். தேம்பினள்; தயங்கினள்; மிகவும் சாம்பினள்; வெந்தழற்புகுந்து பூங்குளம்புக் கெழுந்த வாறு மீண்டனள். உலகம் ஐயுருத வொன்றிற்கு, உடைய வன் ஐயுற்றவன்போல் தேர்வு வைத்துத் தெளிவாக்கிக் கைக் கொள்ள வந்த, கற்பின் பொற்பினள் கௌசலை மருமகள். இவ்வகையளல்லள் உருமை. இப்படியா அப்படியா வென ஐயுற நோக்கும் நிலையள் அவள். அத்தகைய பொற்பினளை வஞ்சித்தானை ஏன்? எனக் கேளாமலும், முன்னதாகவும் (இராவணனுக்கும்) வதைத்தது சதியா, மதியா, அல்லது விதியா? என்பதனைப் பின்னர் பார்ப்போம்.

அனுமன் :

அன்பால், அருளால், அறிவால், ஆற்றலால், பண்பால். பணிவால், துணிவால், தூய்மையால், ஒப்புயர்வற்ற ஒண்மையன் அனுமன். அனுமனில்லையேல் ஈழத்திற்கும் பாரதத்திற்கும் இணைப்புமில்லை; ஏந்திழை சானகியின் மீட்பும் இல்லை, எனத் தக்க எல்லையில் முயற்சியன் அனுமன். அனுமன், கொண்டதை நிறைவேற்றுங் கொற்றவன். அனுமன் எந்நாளும் அரசனல்லன்; அமைச்சனே. ஆனுல். அரசரை ஆக்கிக் காக்கும் அமைச்சன். இத்தகைய ஆற்றலன் தன் உள்ளத்திற்கொத்த ஒரு கொற்றவனை ஆக்கி வைக்க அடிப்படையிட்டனன். அதுதான் வாலி வதையும் சுக்ரீவன் வாழ்வும். தான் இட்ட அடிப்படையைத் தலைசேர முடித்து வைப்பதில் சிறிதும் உறக்கமற்று உழைத்த ஒள்ளியனுயினன் அனுமன்.

அனுமன்தான் "சொல்லின் செல்வனுயிற்றே". அவன் "அளவறிந்து உண்" என்றபடி, வாலியின் வாழ்க்கையை இராமபிரானுக்குக் கொஞ்சங் கொஞ்சமாகக் கூறித் தமது கருத்திற்கொண்டதைச் சாதித்துக் கொண்ட சமர்த்தனுயி னன். அனுமன் "பொய்யிலா மெய்யன்". ஆதலால் ஒருபோதும் பொய்யொன்றும் சொல்லவில்லை. அனைத்தும் மெய் தான். ஆனுல் அனுமன் மெய் இராமபிரானுக்கு அப்புறம்

இப்புறம் திரும்பிப் பார்க்கவும் இடமின்றி வாலியை முடிக்க வழி வகுத்துவிட்டது.

அனுமன், முதல் முதல் இராமபிரானுக்கு வாலியைப் பற்றி உரைத்தது, 'சுக்ரீவன் கூட்டுறவிற்கும் முன்னமே சூரிய குமாரனுன எங்கள் சுக்ரீவனை இந்திரன் குமாரன் என்னும் அன்பற்றவன் சிறினன். எங்கள் அரசன் மருண்டு வந்து இந்த மலையில் ஒளித்துளான்' என்று மட்டுப் கூறினன். வாலியென்ற பெயரைக்கூடச் சொல்லவில்லை என்றால் வாலியின் வல்லமைகள் எங்கே வரப்போகின்றன. அதன் பிறகு தான் அண்ணலை அவ்வரசன் அணுகியது. சுக்ரீவன் முறையீடுகளையும் வள்ளல் வாரி வாரி வழங்கிய அடைக்கல உறுதியுரைகளையும் முன்னமே குறித்தோம். உறுதிமொழியோ கொஞ்சநஞ்சமல்ல.

பிறகு அரண்மனைக்குச் சென்றார்கள். அங்குப் பெண்மணிகள் இருந்த இடமாகவும் தெரிகிறது எவரும் வரவேற்கவும் வரவில்லை. அரச மாட்சிமையுள்ள ஒருவரையும் காணவும் இல்லை. அந்நிலைமை அண்ணலை மிகவும் நைவித்துவிட்டது. "பொருந்து நன் மனைக்கு உரிய பூவையைப் பிரிந்துளாய் கொலோ நீயும் பின்" என்றனன் இராமன். 'நீயும்பின்' என்ற சொல் ஐயன் உள்ளத்தெழுந்த துன்பக் கடலைக் கண்ணுறக் காட்டுவதாக இருந்தது. அனுமனுக்கு வாய்ப்பான காலம், சொல்ல வந்த சுந்தரன் தொடங்கினன். வாலியின் வல்லபத்தை, வரலாற்றை முதலிலே வகுக்கிறான்.

வாலி என்றொருவன் உளன். அவனது வல்லமைக்கு எல்லையே கிடையாது. அவன் சூலபாணியாகிய சிவபெருமானைப் பூசித்து வரம் பெற்றவன், யாராவது அவனை எதிர்த்தனரெனின் அவர்களது வரத்திலும் வல்லமையிலும் சரிபாதி அந்த வாலிக்கு வந்துவிடும். ஆற்றலுள்ள காற்று அவனெதிர் செல்ல முடியாது. முருகன் வேலும் அவன் மொய்ம்பில் பாயாது. அந்த வாலியின் வால் எங்கும் உலா வரும். அவன் வால் இலங்கைக்குச் செல்லும்பொழுதெல்லாம் இராவணன் கொலுவிற்கு வரமாட்டான். அவன் இந்திரனது ஒப்பற்ற புதல்வன். சந்திர மண்டலத்தைக்

கண்டதுபோல் இருக்கும் அவனது வடிவமும் நிறமும். நமன் கட்டளையைக் கடந்தாலும் வாலி கட்டளையின் வரம்பை யாரும் கடக்க முடியாது என்று வாலியின் உயர்வையெல்லாம் மிகப் பெரியதாக எடுத்து வகுத்துரைத்தனன் அனுமன். எப்படி இராமபிரான் நிலை? ஓர் அநாமதேய பேர்வழியைச் சொல்லுவதைப் போலே, வாலியென்று பெயரும் கூறுது, இவ்வளவில் ஒரு துளி சிறப்பையும் செப்பாது "இந்திரன் மகன் என்பவன்", "பரிவே இல்லாதவன்" என்று முதன்முதலில் கூறப்பெற்ற, நாம் எதிர்க்க ஒத்துக்கொண்ட, ஒருவன்தான் இவ்வளவு சிறப்பிற்கும், பாதி பலம் கவரும் பாங்கிற்கும் உள்ளவனே? கதைத் தொடர் இன்னும் முடிவு அடையக் காணேமே, என்றெல்லாம் உள்ளம் சுழற்சியுறத்தான் செய்யுமல்லவா? இது நிற்க, அனுமன் வாலியைப் பலபடி ஏற்றியாயிற்று. இனி, பாதாளத்தில் வீழச் செய்யும் வரலாற்று முடிவு வருகிறது. "ஐயா! அவன் மாயாவியென்னும் ஒரு பேரசுரனுல் அறை கூவப்பெற்றுப் போருக்குப் புறப்பட்டவன். மாயாவி ஒரு பிலத்தில் புகுந்தனன். வாலி தனது தம்பியாகிய இந்தச் சுக்ரீவனை 'இளவரசே நீ அரசைப் பார்த்துக்கொள். நான் தொடர்ந்து சென்று அவனைத் தொலைத்து வருகின்றேன்" எனக் கூறிப் பிலத்துக்குள் ஏகினன்.

மாதங்கள் இருபத்தியெட்டு ஓடிவிட்டன; வந்திலன் வாலி. அண்ணனை உன்னி அழுத கண்ணும் சிந்தையுமானுன் இளவல். குடிப் பெருமக்கள் அரசியல் முதல்வர்கள் அனைவரும் ஆற்றித் தேற்றி வாலி இருந்திருந்தால் இன்னும் வாராதிரான். அவன் கொல்லுண்டிருப்பான். என்ன செய்வது என ஒருவாறு தேற்றி, இளவலை அரசனுக்கி ஆளச் செய்வித்தார்கள். நடந்தது இதுதான், அவன் சென்ற வழியால் அவ் வசுரன் திரும்பவும் வரவுங் கூடுமென அவ் வழியை அடைத்தும் கல்மலைகளை இட்டுத் தூர்த்தும் வைத்தார்கள். அங்குப் பயங்கரப் போரில் ஈடுபட்டு, மாயாவியைக் கொன்றொழித்து, வாலி மீண்டனன். தான் சென்ற பிலத்தின் வழி மூடப்பட்டிருப்பதைக் கண்டனன். மாயாவியின் வெற்றி மயக்கத்தில் வந்த வாலி ஓசை இட்டழைத்தனர். எதிர்

மொழியில்லை. இது, நமது வரவைத் தடைப்படுத்தச் செய்த வேலை எனக் கருதித் தம்பியின் செயலில் மனமாறு பட்டு விட்டனன். (நட்புக்கோட்படலம்–59.)

"ஒளித்த வன்னுயிர்க் கள்ளை யுண்டுளம்
களித்த வாலியுங் கடிதின் எய்தினன்
விளித்து நின்று வேறு உரை பெருன் இருந்து
அளித்தவாறு நன்று இளவலாரெனு".

பின்னர், வாலியையா அந்த அடுக்கல் தடுக்கும்? உடைத்து வெளியேறினன். பிறகு அவனைச் சுக்ரீவன் எதிர்சென்று வணங்கினன். நடந்ததைச் சொல்லி இரந்து வேண்டினன். வாலி சிறிதும் இணங்கவில்லை; அவன் தம்பியை அடித்துத் துரத்தினன். எங்கெங்கும் ஓடிக் கடைசியாக இந்த மலையில் வந்து ஒளிந்து உயிர் வாழலாயினன். உடனே, வாலி எங்கள் அரசனுன இந்தச் சுக்ரீவனின் மனைவியாகிய உருமையையும் கைக்கொள்ளலாயினன். வல்லமையுள்ள அந்த வாலியால் அல்லலும் பட்டு அரசையும் இழந்து, மனைவியையும் பறி கொடுத்து மயங்கிக் கிடக்கின்றுன் மன்னவன். இதுவே இந்த இல்லத்தில் பெண்களில்லாத குறைவினுக்குக் காரணம்-

"உருமை யென்றிவற் குரிய தாரமாம்
அருமருந் தையும் அவன் விரும்பினன்
இருமை யுந்துரந் திவனி ருந்தனன்
கருமம் இங்கிதே கடவுள் என்றனன்!"

அனுமன், இப்படிக் காலமும் இடமும் கண்டு, உணவுங் கையுமாயுள்ள நேரம், பாலும் அன்னமும் பருகும் நேரம் பார்த்து, வாலி செயலை அனுமன் வகுத்துக் காட்டி முடித்தனன். கேட்டிருந்த செம்மல் எப்படிப்பட்டவன். பெற்ற அரசைச் சிற்றன்னை சொற்கேட்டுத் தம்பிக்கே விட்டு கொடுத்து வெளியேறிய விமலன். அவனுக்குத் தம்பியின் தாரத்தையும் வெளவினன் ஒருவன் உளன் என்றுல் எப்படியிருக்கும்? எங்கே அவன்? என எழுந்தனன் ஏந்தல்.

"உலகம் ஏழினெடு ஏழும் வந்து அவன் உயிர்க்கு உதவி
விலகும் என்னிலும் வில்லுடை வாளியின் வீட்டுத்
தலைமை யோடு நின் தார மும் உனக்கு இன்று தருவேன்
புலமையோய் அவன் உறைவிடம் காட்டுஎனப் புகன்ருன்"

வள்ளலுக்கு வந்த ஆத்திரத்தைப் பயன்படுத்திக் கொள்ளச் சுக்ரீவன் சிறிது தயங்கி, அனுமனை அழைத்துக் கொண்டு, அவ்விடத்தகன்ருன். 'ஒரு திட்டமும் இன்றி நமது இட்டம்போலப் புறப்பட மட்டுப்பட்டவனே வாலியென மயங்குகின்றேனே' என்றனன் அனுமன். வந்துள்ள வாள் வீரன் பாற்கடலில் பள்ளிகொண்ட பரமனே என்பதில் ஐயமில்லை. ஆயினும், உங்கள் ஐயமும் அகல மராமரத்தின் பால் விடுவோமெனக் கொண்டு சென்றனன். சென்ருர்கள், மரங்கள் துளைபட்டன. மன்னனுக்கும் மதிப்பு உண்டாகி விட்டது. பின்னர் துந்துபி எலும்பைக் காட்டினுர்கள். இவர்கள் நமது வல்லமையைப் பார்க்கின்ருர்கள் என்பது தெரிந்த இராமனும் நமது தம்பி ஆற்றலையும் கொஞ்சம் இவர்களுக்குக் காட்டி வைப்பது நல்லதெனச் கருதினன். ஏன்? புது சம்பந்தம்; ஆனதால், ஒருவர் பெருமையை ஒருவருக்குக் காட்ட வேண்டித்தானிருக்கிறது. துந்துபி எலும்பைப் பாதத்தால் தூக்கியெறிந்தனன் இளவல். கவியினங்கள் கண்டன; கருத்துள் அச்சங் கொண்டன.

அடுத்துச் செய்யும் செயலுக்கு வருவோம். பிறகுச் சீதாதேவியார் வானத்திருந்து வீசிய நகை முடிப்பொன்று அவர்களிடத்தில் இருந்தது. அதைக்கொண்டு வந்து வள்ளலின் முன் வைக்கச் செய்தனன் அனுமன். அண்ணல் அவிழ்த்துப் பார்த்தனன். மாதவியைப் பொல்லாதவளென மன மறிய இகழ்ந்து வந்தனன் கோவலன். அவனே கோசிகமாணி கொடுத்த மாதவி கைப்பட்ட ஓலையைத் தொட்டவுடன் மனம் வேருகி 'அவளிடம் தப்பில்லை, நானே பிழைபட்டேன்' என நைந்து நைந்து உருகினுன். மாதவி வாங்கிப் பிழைக்க வந்தவள். சீதை சீதனத்தால், கற்பால், கனிவால் மணுளனைத் தாங்கிப் பெருமைப்படுத்த வந்த தையல். அவள் கைப்பட்ட ஓலை கனிவிக்கின்றது தன் கண்ணுளனை. இவள் வடிவெலாம்

பற்றிக் கொண்டிருந்த பணிகளைத் தொட்டுப் பார்த்த பரமன் என்ன பாடுபட்டிருப்பன்? மயர்ந்தனன், மகிழ்ந் தனன், அயர்ந்தனன் அழுதனன், துயர்ந்தனன், துடித்தனன் தோன்றல். "கருங்கடலைத் தோண்டினர் எங்கள் முன்னவர்; கங்கையைக் கொண்டு வந்தனர் எங்கள் முன்னவர், மானும் புலியும் ஒரு துறையில் புனலுண்ணக் கண்டனர் எங்கள் முன்னவர், யான் கட்டிவந்தவளைக் காக்க விதியிலேனாயினன். யான் உயிரோடிருக்கும்போதே அவள் தனது கலன்களைக் கழிக்க நேர்ந்ததே"யென்றனன். அவனது அகத்தின் அழு கையை யாரறிவார்.

"கருங்கடல் தொட்டனர் கங்கை தந்தனர்
பொரும்புலி மாவொடு புனலுமூட்டினர்
பெருந்தகை யென்குலத் தரசர் பின்னொரு
திருந்திழை துயரம்நான் தீர்க்க நோற்றிலேன்"

(கலன் காண் படலம் 23)

இத் தொலைவில் துயரம் கண்ட சுக்ரீவனும் மனங்கலங் கினன். "ஐயனே! வாலியைப் பின்னே பார்த்துக் கொள்ள லாம். அந்த இராவணனைத் தொலைத்து அன்னையை மீட்பதை முன்னே வைத்துக் கொள்ளலாம் என்றனன்.

"என்னுடைச் சிறுகுறை முடித்தல் ஈண்டு ஒரீஇப்
பின்னுடைத் தாயினு மாகப் போதுறும்
மின்னிடைச் சனகியை மீட்டு மீள்துமால்
பொன்னுடைச் சிலையினாய் மீண்டு போயென்றான்"

ஆனால், அச்செயலைச் செய்ய ஐயன் ஒப்பவில்லை. அதற் குள், அமைச்சனாகிய அனுமனும், காரணங்கள் சில காட்டி, வாலி வதையே முதலிடம் பெற வேண்டும் என்றனன். அநுமன்" அரக்கர் வாழிடங்கள் பல. அவன் எங்குக் கொண்டு வைத்துளனோ. அவற்றையெல்லாந் தேடப் படைபலம் வேண்டும். அந்தப் படைகளைக் கூட்ட நமக்கு அதிகாரம் வேண்டும். அதிகாரம் வர அரசு மாற வேண்டும். அரசு மாற வாலி தொலைய வேண்டும். ஆதலால், இதுதான் முன் செய லாக வேண்டும்."

"கொடும்படை வாலியைக் கொன்று கோமகன்
கடுங்கதிரோன் மகனாக்கிக், கைவளர்

நெடும்படைக் கூட்டினுலன்றி, நேடரிது;
அடும்படை அரக்கர்தம் இருக்கை ஆணையாய்''
(நேடுதல்—தேடுதல்)

என்று முடித்தனன் அனுமன். பின்னர்த் தோன்றலின் துயர மெங்கே? துணைவனின் சுறுசுறுப்பு எங்கே? எதுவும் அமைச் சர்களுக்கு அடக்கந்தான் அல்லவா? பிந்தி வைக்கப்பட்டது இராவணன் கதை; முந்தி வந்து நின்றது வாலியின் வதை.

மாபாரதத்தில், தம்பியின் கணைகளால் அண்ணனை அழித்துவிட்டுக் கலங்கியழுதான் தருமராசன். அவன் கண்ண னைப் பார்த்துக் கதறுகின்ருன்: ''ஏ மணிவண்ணு' நீ மாமன் மகனுக வந்தாய். எங்கள் மாதா வாயைப் பூட்டிவிட்டாய். தம்பி அருச்சுனனை ஏவினுய், தமையன் கன்னனைக் கைகழுவச் செய்தாய். எங்களுக்கா பாரதப் போர்? எல்லாம் உங்கள் உள்ளம்போல்தான் அல்லவா?'' என்றனன். பின்னர் நடந்த இதுதான் முன்னர் நடந்தது அங்கே. அமைச்சன் அனுமனே எல்லாவற்றையும் திசைதிருப்பும் மாலுமியாய்ச் செயல்பட் டான் வாலியின் வதையில்.

இலக்குவப் பெருந்தகை

''வீழ்நாள் படாமை நன்காற்றின் அஃதொருவன் வாழ் நாள் வழியடைக்குங் கல்'' என்ற வள்ளுவர் வாக்கிற்குத் தெள்ளியெடுத்த இலக்கியமாகிய ஏந்தல், இலக்குவன். தாங் கள் ஓர் அரைநாள் உழைத்து அரைநாள் தூங்கி ஒரு நாளெல்லாம் உழைத்தோமென ஓலமிடுகின்றனர் உலகவர். இரவென்பது ஒன்று உண்டா? அது எங்கே இருக்கிறது? எப்படி இருக்கும்? என்று கேட்கும் ஏந்தல், இலக்குவன். இந்த இலக்குவனும் தப்பிதம் செய்துவிட்டுத் தலைகுனிந்த நாள் ஒன்று உண்டு. சற்றே உன்னிப் பார்க்கும்பொழுது அதுவும் பிழையல்ல, பெருமிதமே.

பெரு விலை கொடுத்துப் பசுவொன்றை வாங்கினன் ஒருவன். அதை நாள்தோறும் மேய்ப்பான், தேய்ப்பான். புல்லும் நீரும் புகட்டிக் குழந்தைபோல் வளமுற வளர்த் தான். அது கருவுற்றது; கன்றையீன்றெடுத்தது. இத்தனை

நாளும் இப்படி வளர்த்த அவனை அது துரத்துகின்றது; முட்ட வருகின்றது. இது உலக நிகழ்வு. ஏன் அது? அக்கன்றின்மேல் வைத்த அளவுகடந்த காதல்தான் அதுபோல, சித்திரகூடத்தில், மலைச் சிகரத்தில் அண்ணனுக்கு அருங்கனி தேடிநின்ற இலக்குவன், வடக்கே வந்த பரதன் படைகளைக் கண்டனன். இச்சிறியவன் பெரியவர்மேல் படையெடுத்து வந்தனனென எண்ணி வெகுண்டனன். வில்லை வளைத்தனன். பரதனை அறைகூவப் பதைத்தனன். அண்ணல் தடுத்து, அப்பா நீ பரதனை அப்படியெண்ணுதே; அவன் வருவது என்னை அழைக்கவே; சற்றே நின்று பார் என, இலக்குவன், பொறுத்துப் பார்த்து உள்ளம் உருகினுன்.

"தொழுதுயர் கையினன் துவண்ட மேனியன்
அழுதழி கண்ணினன் அவலம் ஈதென
எழுதிய வடிவம் ஒத்து எய்து வான்தனை
முழுதுணர் கேள்வியான் முடிய நோக்கினுன்.

"எல்லொடுங் கியமுகத் திளவல் நின்றனன்
மல்லொடுங் கியபுயத் தவனை வைதெழும்
சொல்லொடுஞ் சினத்தொடும் உணர்வு சோர்தர
வில்லொடும் கண்ணினீர் நிலத்தில் வீழவே.

இப்படி மனமாறுபட்டு வெகுண்டு வெட்க முற்றயர்ந்த நிலை, இந்த ஒரு காலத்தில்தான் ஐயன் இலக்குவனை அணுகிற்று. இதுவும் பசு கன்றின்மேல் உண்டான பற்றினுல் வளர்த்தவனைப் பாயவந்தது போன்ற ஒன்று. இராமபிரான் மேல்கொண்ட அளவற்ற அன்பினுல், இலக்குவன், பரதனைப் பகைவனுய் நினைக்க நேர்ந்தது. ஈதன்றி எந்தக் காலத்திலும் ஏந்தல் அறங்சோண அமைதியிழந்ததே கிடையாது இராமபிரானின் வாழ்நாள் முழுவதுமே, வருவதை முன்னறிந்து சொல்லும் வன்மையனுகத் திகழ்ந்தவன் இலக்குவன்.

இப்படி வருவதை வகுக்கவல்ல தம்பிக்கு வாலிவதையில் அண்ணனுேடு பேச வாய்ப்பே இல்லாமல் போய்விட்டது ஏன் அது? அவ் வானரவீரர்கள், இவர்கள் இருவரையும் இடைவிடாமல் மொய்த்துக் கொண்டே யிருந்தார்கள். அதே நேரத்தில், அவர்கள் மாத்திரம் இரகசியம் பேசப்

பிரிகின்ருர்கள். அவர்கள் பலர். இவர்கள் இருவரே. அவர்களில் சிலர் சென்ருலும், பலர் இவர்களே விட்டு நீங்குவதேயில்லே. அது அவர்கள் நாகரிகமாக இருந்தது. இந்த முற்றுகையிலிருந்து முன்னவனும் பின்னவனும் கலந்து பேசவே காலங்கிடைக்காமல் போயிற்று. அனுமன் செயற்பாடுகளனேத்தையும் உள்ளுணர்வோடு நோக்கி வருகின்ற இளவலுக்கும் ஒருகாலம் நேர்ந்தது. அது வாலி வாழ்விற்கே வம்பு வந்துவிட்ட நேரம்.

மராமரம் எய்தாயிற்று, வணங்காமுடி சேகரன் வணங்கியாயிற்று; அன்னே கலன்களேக் காட்டியாயிற்று. அண்ணல் கருத்தில் வாலி வதைக்கு முதன்மை கொடுத்து இருத்தியாயிற்று. உடனடியாகப் போருக்குப் புறப்பட்டு விட்டார்கள். வாலியின் கோட்டை மைதானத்தைக் குறுகியுமாயிற்று. அனுமனே, அரசன் படைகளில் உள்ளவர்களேயெல்லாம் ஒரு மூலேயில் சென்று நிற்கப் பணித்துவிட்டார்கள். அவர்களும் ஆணேயின்படிச் சென்ருர்கள். முக்கோண வடிவமானது அந்தப் போரிடம். அதில் இந்த அனுமனுதியர் நின்ற நிலே ஒரு கோணம்; அதற்கு நேரே மற்ருெரு மூலே வாலியின் கோட்டை வாயிற்படி. இந்த இருகோணங்களுக்கும் நேர் நேராகப் பொருந்தும் மற்ருெரு கோணத்தில் உள்ள ஒரு சோலேயில் சுக்கிரீவனேடு இராமன் சென்று நின்றனன். ஏந்தலோடு என்றும்போல இளவலுந்தான். இது போர்க்கள அமைப்பு. மிகவும் நுணுக்கமான இடம் இது. அதாவது, அனுமனுதியரோடு, இராம இலக்குவ சுக்கிரீவர்கள் இல்லே. இவர்களும் அனுமனுதிய படைஞர்களும் வேறு வேருக வெவ்வேறு கோணங்களில் நின்றனர். இவ் விரு பாலாருக்கும் நேருக்கு நேராக நிற்கின்றது வாலியின் கோட்டை வாயிற்படி.

இப்படி நின்ற அந்த நேரத்தில் இராமன் சுக்கிரீவனே அழைத்து, "நீ சென்று வாலியை ஓசையிட்டு உசுப்பிப் போருக்கு அழைக்கவேண்டும். அவன் வந்து எதிர்ப்பான் அல்லவா ? அவனேடு நீயே நேர் நின்று போர் செய்யவேண்டும். அப்படிப் போர் புரிகையில் தக்கநேரமும் அமைதியும் நேரும்பொழுது, நான் வாளியைவிட்டு வாலியை முடிப்பேன்.

இது என்னுடைய கருத்து'' என்றனன். அதனைக் கேட்ட சுக்கிரீவன், 'இது மிக நல்ல முடிவு. அப்படியே செல்கின்றேன். நீங்கள் குறித்தபடி செய்யுங்கள் எனக்கூறிப் புறப்பட்டனன்.

இங்கே சுக்கிரீவனுக்குக் கம்பர் தரும்பேர் "தெவ் அடக்கும் வென்றியான்.'' பொருள் என்ன? அறமோ மறமோ, நாம் செய்வது எந்தவிதப்போரோ, தெவ் என்றால் பகைவன், அவனை அழித்துத் தொலைக்கவேண்டும். இதுதான் இப்பொழுது வேண்டியது. அதற்குத் தகுந்த திட்டந்தான், நமது தலைவன் குறிப்பிடும் முறை என ஒத்துக்கொண்டனன் சுக்கிரீவன். ஆதலால், அவன் வீர வெற்றியனாக விரும்பவில்லை; எப்படியோ எதிரியைத் தொலைப்பதில் மட்டில் கண்ணுங் கருத்துமாக இருந்தனன் என்பது பொருள்.

"அவ்விடத்து இராமன், நீ அழைத்து வாலியானதோர்
வெவ்விடத்தில் வந்து போர் விளைத்தகாலை வேறு நின்று
எவ்விடத் துணிந்து அமைந்தது என்கருத்து இது என்றனன்.
தெவ் அடக்கும் வென்றியானும் நன்று இது என்று சிந்தியா'
(வாலி வதை 1)

இவன் சென்றான், இடியிடித்தது போல உரப்பினான். அவன் என்ன குறைந்தவனா? அவனும் இடியிடிப்பதுபோல் சிரித்து எழுந்தான். தாரை தடுத்தாள். அவன் இராமனைப் பற்றி எண்ணியிருந்த எண்ணங்களையெல்லாம் சொல்லி, அமைதிப்படுத்திவிட்டுப் போர்க்களத்திற்கு வந்துவிட்டான். போர் தொடர்ந்து நடந்தது. இராமனுக்குச் சுக்ரீவனைத் தெரியும். வாலியைத் தெரியாது. அண்ணல் இப்பொழுது தான் வாலியை நோக்குகின்றான். வாலி சுக்ரீவன் இருவரும் சரியான அண்ணன் தம்பிகள். ஒரே தோற்றம், ஒரே நிறம். அவ்வொத்த நிலைகண்டு வியப்புற்று, அவர்கள் இடும் போரையுங்கண்டு இராமன் தனது தம்பியை "ஐய! இந்தப் பெரும் போரையும், இவர்கள் தோற்றத்தையும் பார். உலகில் அமரர் அசுரர் போர் நிற்க. எந்த இரண்டு பெரும் மேகங்கள், இரண்டு சூராவளிகள், இரு உகாந்த கால நெருப்

புக் கோளங்கள், எதிரெதிரில் போரிடினும் இவர்களுக்கு ஒப்புரைக்க முடியுமா?'' என்று வியந்தனன்.

இப்படிக் கூறிப் போரை வியக்கின்ற அண்ணனை, அல்ல அல்ல, வள்ளலை நோக்கி, இளைய இலக்குவன் பேசலுற்றனன். அண்ணல் என்று கூறி, அல்ல என்பதேன் என்கின்றீர்களா? கம்பர் இங்கு வள்ளல் என்று கூறுகின்றார். அதை விடுத்தால் உண்மை விளங்காது என்பதற்காகத்தான். சிவபெருமான் வள்ளன்மையையும், திருமால் வள்ளன்மையையும் பக்தர்கள் விவரிப்பார்கள். சிவபெருமான் கொடைக்குணம் மேம்பட்டு, வருந்திக் கேட்பவர்களுக்கு வாரி வாரிக் கொடுத்து, பிறகு தமக்கே அல்லல் வந்தாலும் படுகின்றவர். அது போலத் திருமால் தருவதுமில்லை, துன்பப் படுவதுமில்லை என்பார்கள். இங்கே இராமபிரான் வாழ்க்கை முழுவதுமே வருந்திக் கேட்டவர்களுக்குக் கேட்டபடி கொடுத்துவிட்டுப் பிறகு வரும் துன்பங்களிலெல்லாந் தோய்ந்து தோய்ந்து அழுகிறதும் அவர் வழக்கமாகிவிட்டது. எதிரியின் வரத்தை, வாழ்க்கைத் தரத்தைக் கேளாமலே அழுது புலம்பிய சுக்ரீவனுக்கு வாக்கைக் கொடுத்துவிட்டு வருந்துகின்றனர் என்ற குறிப்பையுடையது வள்ளல் என்ற சொல். இங்கே இலக்குவன் ''எனக்கு ஒன்றுமே தோன்றவில்லை. எனது உள்ளம் மிக ஆழ்ந்த துன்பத்தில் மூழ்கிக் கிடக்கின்றது. இந்த சுக்ரீவன் உங்களைச் சக்கரவர்த்தித் திருமகனாக ஒன்றும் கருதவில்லை. அவன் தன் தமையனைக் கொல்லத்தகுந்த எமன் எனவே எண்ணுகின்றனன். இந்தக் குரங்கின் குறும் போர் எனக்கொன்றும் பிடிக்கவில்லை. யான் எங்கே போரின் காட்சியைக் கண்டு களிக்கப் போகின்றேன்'' என்றனன்.

இலக்குவன் இவ்வளவு வெறுத்துச் சுக்ரீவனைக் கூறுவானேன் எனக் கருதல் வேண்டும். முன்னமே வரத்தைக் கொடுத்தாயிற்று. பிறகு தெரிந்தது சிவபிரானால் வரம் பெற்ற நிகழ்ச்சி. அதற்குமேல் அண்ணலை ஓயவிடாமல் தொடர்ந்து வாலியின்மேல் சீற்றம் வளருவதற்கான வகைகளையெல்லாம் செய்து வருகிறார்கள். எப்படி வரம் பெற்றிருக்கின்றனரோ, அவ்வரத்திற்கு உள்ளாகத்தான் போரிட முடியும். அதற்காகவே அண்ணல் இங்கு படைஞரை விட்டு

பார்வையற்ற இடத்தில் நிற்கவேண்டி வந்தது. அதற்குமேல், இந்தப் போர் எதிரிக்குத் தன் எதிரிகள் யாவர் என்று உணர வழியில்லாமல் நடக்கின்றது. போருக்கு அழைக்கின்றவன் சுக்ரீவன். அவனோடு போரிடுகின்ற பொழுது கொல்ல நிற்கின்றவர் தனது அருமை அண்ணலார். இதன் முடிவில் கிடைப்பதென்ன? சுக்ரீவனுக்கு அரசு. ஒரு மலையனைய தமது பேரரசை விட்டுவிட்டு வந்த வள்ளல், இந்த கடுகத்தனை அரசை ஒருவனுக்கு வாங்கித்தர இந்தப் பாடெல்லாம் படுகின்றாரென்றால், இளைய பெருமானுக்கு எப்படியிருக்கும்? 'இப்போர் பழிக்குப் பாத்திரமான குரங்கின் குரங்குத்தனங் குன்றாத போர். இது என் உள்ளத்தில் ஊன்றித துன்பத்தை விளைத்து விட்டது. இவன் உங்கள் பெருமையைக் காப்பாற்றச் சிறிதும் விரும்பவில்லை. தனது பகைவனைத் தொலைக்கும் ஒன்றிலேயே கண்ணுங்கருத்துமாக நிற்கின்றவன்'' என்றனன் இலக்குவன்.

உலகத்தில் நடக்கும் உண்மைகள் உத்தமருள்ளத்தில் எப்படியோ வந்து படிந்துவிடும். முதலிலேயே, இராமன் வருகையைத் தங்கள் கூட்டத்திற்கு உணர்த்த வந்த அனுமன், அகமகிழ்ந்து ஆடினான். அவன் வாலியை வதைக்க ஒரு புதிய எமன் வந்திருக்கின்றனன் என்று சொல்லி ஆடினானும். அவ்வாடல் ஆலகாலமுண்ட சிவபெருமான் ஆடுவதைப் போல இருந்ததாம்

"மேலவன் திருமகற்கு உரை செய்வான் விரை செய்தார்
வாலி என்று அளவு இலா வலியினான் உயிர் தெறக்
காலன் வந்தனன் இடர்க்கடல் கடந்தனம்என
ஆலம் உண்டவனின் நின்று அருநடம் புரிகுவான்''

(மராமரப் படலம் 40)

என வருகிறது. அதுமுதல் இதுவரை அனும, சுக்ரீவர்களின் உள்ளக்கிடக்கை இதுவாகவே இருக்கின்றது. இக்குறிப்புகளை ஆங்காங்குச் சிந்தித்து வருகின்றனன் இளவல். ஆனால் அண்ணலோடு கலந்து உரையாட இடமில்லை. அந்த உள்ளத் துணர்ச்சிகளெல்லாம் இடங்கிடைத்த இப்பொழுது வெளி வருகின்றன. மேலும் சிறிதும் மனம் ஆறாத செம்மல் "அறமே உருவான உங்கள் உள்ளம் சற்றும் அறத்தோடு பொருந்

தாத இந்தக் கொடும்போரைச் செய்து ஆவதென்ன? பண்பாடு இத்தகையதென்று அறிய முடியாத ஒருவனைத் துணையாகத் தேடுவானேன்? உடன் பிறந்த அண்ணனைக் கொல்ல இத்தனை விரைவு காட்டுகின்றவன் அயலார்களோடு பகை வந்தால், எவ்வளவு பொறுமையைக் கையாளுவான் என்றெல்லாம் எண்ண வேண்டாமா? இந்த அறநெறி வழுவாத அழகுமிக்க துணைவர்களைத் தேடித்தான் இராவணனை வெல்ல வேண்டுமா? கரனைத் திரிசிரனைத் தூடணனை முடித்தபொழுதெல்லாம் யாராவது உங்களுக்குத் துணை வந்தவருண்டா?' என்பது குறிப்பில் வர, 'வீர!' என முன்னவனைக் கூறி முடிக்கின்றான் இளையவன்

"வள்ளற்கு இளையன் பகர்வான் இவன் தம்முன் வாழ்நாள்
கொள்ளக் கொடுங் கூற்றவனைக் கொணர்ந்தான்
எள்ளற்கு உரித்தாம் குரங்கின் செயல் என்னும் இன்னல்
உள்ளத்தில் ஊன்ற உணர்வு உற்றிலன் ஒன்றும் என்றான்"

"ஆற்றுது பின்னும் பகர்வான் அறத்தாறு அழுங்கத்
தேற்றுதவர் தங்களைத் தேறுதல் செவ்விது அன்றால்
மாற்றான் எனத் தம்முன் உயிர் வவ்விய வந்துநின்றான்
வேற்றோர்கள் திறத்து இவன் தஞ்சம் என் வீர என்றான்"
(வாலி வதை 33–34)

உள்ளம் பதைக்கும் இந்த ஒள்ளிய தம்பியை எப்படியோ சரிசெய்ய வேண்டிய இன்னலில் நிற்கின்றனன் இராமன். ஏன்? இலக்குவன் கருத்தோ இதற்குமுன் தெரியவில்லை. இலக்குவன் கருத்திற்கு மாறான எந்த வேலையும் செவ்வனே முடிவதும் வழக்காற்றில் இல்லை. சற்று முன்னர் கருத்தறிந்திருந்தாலும் நின்று நிதானித்து ஏதாவது ஒரு வழியைத் தேடியிருக்கலாம். நாமே ஏவிவிட்டோம். அவனோ அல்லலில் நிற்கின்றான். அவனுக்கு ஆதரவுங்கூறி அவதியிலும் விட்டவராகின்றோம். என்ன செய்வது? இனி அவர்களோடு பேச வழியில்லை. இளவலை ஒருமைப்படுத்துவது ஒன்றேதான் வழி என்று உன்ன வேண்டி வந்தது இராமனுக்கு.

பிடிவாதத்தில் ஒரே நெறியில் நிற்கும் சிறுவர்களை மாற்ற எண்ணும்பொழுது பெரியவர்கள் 'தம்பி தம்பி' யென்று கெஞ்சுவார்கள். இல்லையானால் வெல்ல முடியாது.

இவ் வழக்கம் இராமனுக்கு மாத்திரம் மாறுபட இருக்க முடியாது. அவரும் உலக வாழ்வில்தான் இப்பொழுது இருக்கின்றனர். ஆதலால், இங்கிதமாக 'ஐயா' என அழைத்தனன் இராமன் இளவலை. "அத்தா—ஐயா! இதைக் கொஞ்சம் நீ கேட்க வேண்டும். இதுகளெல்லாம் காட்டுக் குரங்குகள் தான். பரதன் என்னையெப்படி மதிக்கின்றனன். அப்படியே உலகத் தம்பிகளெல்லாம் தங்கள் அண்ணன்மார்களை மதித்து நடப்பார்கள் என்றால் பரதனுக்கு அவ்வளவு பெருஞ்சிறப்பு எப்படி வரப்போகின்றது. சிறிது சிந்திக்க வேண்டுமப்பா" என்றனன் இராமன். பின்னும் இளவலை நோக்கி "ஒரு வில்லை ஏந்திக்கொண்டு நிற்கும் மலையனைய தோளுடைய இளவலே! இந்த உலகத்தில் உண்மை ஒழுங்கு இவற்றிற்காகப் பாடு படுகின்றனவர்கள் ஒரு சிலரே; அதற்கு மாறானவர்களே பெரும்பாலோரும். நமக்கு இன்றியமையாத வேலை, நமது வேலைக்கு உகந்த ஒருவனைத் தேடிக்கொள்ளுகின்றதா? அல்லது நேர்மையானவனா? ஒழுக்கமுடையவனா? நல்ல மரபில் வந்தவனா? என்றெல்லாம் தேடிக்கொண்டு செல்லுவதா?" எனவும கூறினன் இராமன்.

ஆனால் இளவல் கருத்து மாறவில்லை. வயதில் மூத்தவர் இராமபிரான். ஆனாலும், அனுபவத்தில் இளவலுக்கு ஒரு சிறப்பிருந்தது. அது என்னவெனில், நற்குணமுள்ள ஒரு அண்ணன், தனது தம்பிமாரிடம் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பது மாத்திரம்தான் இராமபிரானுக்குத் தெரியும். அவர் குடியில் அவரே பெரியவர். மற்றவரெல்லாம் இளையவர்கள். இலக்குவப் பெருந்தகைக்கு, இரு அண்ணன்மாரும் உளர், ஒரு தம்பியும் உண்டு. இதனால் இருவித அநுபவமும் இருந்தது. ஒரு தம்பியின் மனைவியைக் கைக்கொள்ளும் அண்ணனும் ஓர் அண்ணனா? அவனை உடனே தொலைக்க வேண்டாமா? என்று எண்ணுகின்றனன் இராமன். உடன் பிறந்த, தனக்கும் எல்லா வகையாலும் சிறந்த, அண்ணனுக்கு ஓர் ஆபத்து வந்துவிட்டதென்றால், மனைவியாவது மற்றவராவது? இந்த அண்ணனுக்கு முந்தியா நமக்கு அவள் மனைவியாக வந்துவிட்டனள்? என எண்ணினன் இலக்குவன். தனது மனைவியாகிய ஊர்மிளாதேவிக்கு

ஒரு சொல்கூடச் சொல்லாமல் மரவுரி தரித்துப் புறப்பட்டு இன்னும் தனக்கொரு மனைவியிருப்பதாகவும் எண்ணாமல், அண்ணனார் அரும்பணியிலேயே நிற்பவர் இலக்குவனார். இவ்வளவு பரந்த நிறைந்த உளப்பாங்குள்ள இலக்குவனுக்கு, ஒரு தம்பி உடன்பிறந்த ஒப்பற்ற ஓர் அண்ணனை ஒழிக்க இவ்வளவு திட்டமிட்டிருக்கின்றனன் என்றால், இக்கொடுஞ் செயலுக்கு உலகம் ஏழும் மதிக்கும் ஒரு பெருமகன் கூட்டாக நிற்கவும் சம்பவித்தது என்றால், எப்படியிருந்திருக்கும் இளவலின் உள்ளம்? அதனால்தான், இராமபிரான் கெஞ்சிப் பேசும் பேச்சு ஒன்றும் இளவல் மனத்தை மாற்ற முடியவில்லை.

மேலும்; வாலி வதைக்குப் பின்னும் இளவல் மனம், அனுமன் வகுத்த வாலி வதைத் திட்டத்தில் மனங்கொளாமலே இருந்துள தென்பதற்கும் போதிய சான்றுகள் உள. வாலி செயலெல்லாம் முடிந்து சுக்ரீவன் அரசு செய்கின்றான். அண்ணன் சொற்படி சுக்ரீவனுக்குப் பட்டங் கட்டப் போகின்றவர் இந்த இளவல்தான். கட்டி முடிந்தது. அரசு அவனுடையதாகிவிட்டது. அங்குச் செல்வோம். அவன் சரத்காலம் கழித்துப் படைகளொடு வந்து சேருகிறேனென்று சொல்லினவன், அப்படிச் செய்யவில்லை. அண்ணல் பெரிதும் வருத்தமுற்று இளவலை ஏவ, விரைந்து கிட்கிந்தையை அடைந்தனன். இலக்குவன் வெகுளிக்கு அஞ்சிய குரங்கினத்தவர் கோட்டை வாயிலை அடைத்துக் கற்களையும் குவித்து, மரங்களில் ஏறிப் பார்த்து நின்றனர். இது வாலிக்கு வழியடைத்த அனுபவம் போலும். வீரன் அவற்றை இடறித் தள்ளி உட்புகுந்தனன். அங்கதன் தெரிந்து இளைய தந்தைக்கு அறிவிக்க ஓடினான். அது முடியவில்லை. ஏன்? சுக்ரீவன் குடி மயக்கத்திலிருந்த நேரம் அது. அனுமனை அழைத்துக் கொண்டு தனது அன்னைபால் சென்றனன் அங்கதன். தாரை வருத்தமுற்று, மைத்துனன் செயலை வெறுத்துக் கொண்டு, சுமங்கலிக் கூட்டத்தின் இடையே வீதியில் இளவல் எதிர் சென்றனன். வீரன் வெகுளி குறைந்தது. வாலி மனைவி தாரை வந்து வரவேற்றனள். தாரை மங்கலநாண் இல்லாததனால் கழுத்து முழுக்க மறைத்துப் போர்த்துக் கொண்டு நின்றனள். அத் தாரையைப் பார்த்தவுடனே தமது இரு

தாய்மார்களேயும் நினைந்து அவர்களும் இப்படித்தானே இருப்பரென வருந்தினன் இளேய வள்ளல். இங்கே வாலியின் குடும்பத்தை எந்த நிலேயில் மதித்துளன் ஏந்தலென்பது விளங்குகின்றதல்லவா?

இந்த நேரத்தில்தான் வீராதி வீரன் அனுமன் அங்கு வந்து, இளவலே வரவேற்க முடிந்தது. இளவல், அனுமனே நோக்கி "உங்கள் அரசனுல் நீயும் சொல் மறந்தனேயே" யென்றனன். மறக்கவுமில்லே, காலந்தாழ்த்தவுமில்லே. சேனே சேர்வதையே எதிர் நோக்க நேர்ந்தது என்றனன் அனுமன். காலத்தைத் அனுமனே நோக்கி இளவல், இல்லேயில்லே. நீங்கள் எங்கே தாழ்வித்திர்கள்? முன்னமே தருக்கிக் கொண்டிருந்த அரக்கர் வாழ்வை நீள்வித்திர்கள். அமரர் துன்பத்தையும் அதிகப்படுத்தினீர்கள். முனிவர்கள் துன்பத்திற்குத் தூப மிட்டு வளர்த்தீர்கள். அமைதி நிறைந்த அண்ணலேச் சீற்றத்திற்கு ஆளாக்கினீர்கள். நீங்கள் எங்கே காலத்தைத் தாழ்த்தினீர்கள்? எப்படியோ தொலேயுங்கள்" என்றனன் இளவல்.

"தாழ்வித்தீர் அல்லீர், முன்னங் தருக்கிய அரக்கர் தம்மை
வாழ்வித்தீர், இமையோர்க்கு ஏதம் வருவித்தீர், மரபின் தீராக்
கேள்வித் தீயாளர் துன்பம் கிளர்வித்தீர்; பாவம்தன்னே
மூள்வித்தீர்; முனியாதானே முனிவித்தீர் முடிதிர்" என்ருன்
(கிட்கிந்தை 74)

என வருகின்றது. முடிதிர்—தொலேந்து போங்கள் என்பது பொருள். இவ்வாறு உரைத்த இளவலின் சீற்ற உரைக்குப் பயந்த அனுமன், "ஐயனே கோபிக்க வேண்டாம்; போனதை யெல்லாம் பொருட்படுத்த வேண்டாம்; தாங்கள் சொன்ன வண்ணம் இனித் தவருமல் நடப்போம். இல்லேயாளுல் உயிர் வாழமாட்டோம்; தருமம் சாட்சியாகச் சொல்லுகிறேன்; நீங்கள் ஐயனிடத்திற்குத் திரும்பிச் செல்லலாம்; தொடர்ந்து தாற்போல் சேனேயோடு வருவோம்" என்றனன்.

"தோன்றல் அஃதுரைத்த லோடும்
மாருதி தொழுது தொல்லே
ஆன்றநூல் அறிஞ! போன
பொருள்மனத்து அடைப்பா யல்லே;

ஏன்றது முடியே மென்னில்
இறத்தும் இத் திறத்துக் கெல்லாம்
சான்றுஇனி அறனே, போந்து உன்
தம்முனேச் சார்தி யென்ருன்." (கிட்கிந்தை 75).

அதுகேட்ட இளவல், "அப்படியே செய்கின்ருேமப்பா, நாங்கள் எப்பொழுதுதான் நீ சொல்லுவதைக் கேட்காமல் விட்டு விட்டோம்; முன்னே நாங்கள் செய்த முயற்சியெல்லாம் உன்னுடைய சொல்லின் வண்ணந்தானே; பின்னும் அப்படியே செய்கின்ருேம்.அதிலென்ன தடை"யென்று கூறி அவனழைப்பின்படிச் சுக்ரீவன் இடத்திற்கு வீதிவாய் நின்றும் புறப்பட்டனன்.

"முன்னும் நீ சொல்லிற்று அன்ருே
முயன்றது முயற்சி தானும்
இன்னும் நீ இசைத்த செய்வான்
இசைந்தனம் என்று கூறி
அன்னதோர் அமைதி யான்றன்
அருள்சிறிது அறிவான் நோக்கிப்
பொன்னின்வார் சிலேயினுனும்
மாருதி யோடும் போனுன்" (கிட்கிந்தை 76).

பின்னர் மயக்கமகன்று, தனது செயலுக்கு வருந்தி, வெட்கமுற்ற சுக்ரீவன் வந்து, மேள தாளத்தோடு வரவேற்றனன். கொலுமண்டபம் புகுந்தார்கள். மலரணேயைக் காட்டி அதில் இருக்க வேண்டினர்கள் அரசனும் அமைச்சனும். அதைக் கண்டு அவர்கள் அறியாமைக்கும், வேண்டாத காலத்தாழ்விற்கும் வெகுண்ட ஐயன், "கல்லத்தனேக் கடுமையள் கைகேயி. அவள் கொடுமையால் எனதண்ணல் காட்டில் கரடுமுரடான புல்லணேயில் இருக்கின்றனன். நான், மலர் வேய்ந்த மெல்லணேயில் இருக்கவா? உங்கள் உபசாரம் மிக நன்று" என்றனன். அடுத்தபடி அவர்கள் கனிகளேக் கொண்டுவந்து வைத்து, இதை உண்ணவேண்டும் என வேண்டினர். அதற்கு அண்ணல், "யான் தினந்தோறும் எங்கள் அண்ணலுக்குத் தரும் உணவின் மிச்சத்தையே உண்ணும் விரதமுடையேன். அவரங்கு உணவு கொணர்

வாருந் தருவாருமின்றித் துன்புற்றிருக்க, யான் அவனமுது கொள்ளாத ஒன்றை உண்ணுவேனுயின், அது நாய் தின்று வைத்த மிச்சத்திற்கே நிகராதும்'' என்றனன்.

''கல்லணை மனத்தினை உடைக்கை கேசியால்
எல்லணை மணிமுடி துறந்த எம்பிரான்
புல்லணை வைகயான் பொன்செய் பூத்தொடர்
மெல்லணை வைகவும் வேண்டுமோ என்றுன்''
(கிட்கிந்தை 108)

''பச்சிலை கிழங்கு காய் பரமன் நுங்கிய
மிச்சிலே நுகர்வது வேறுநான் ஒன்றும்
நச்சிலேன் நச்சினேன் ஆயின் நாய் உண்ட
எச்சிலே அது இதற்கு ஐயம் இல்லையால்''
என்றனன் இளவல். (114 கி. கா.)

இந்த வள்ளலின் உறுதிமிக்க இடிப்புரையே அனுமனையும் சுக்ரீவனையும் குப்புற மாற்றி ஆட்கொண்டுவிட்டது. இளவல் அவ்விருவருக்கும் பெரியதொரு தீட்சா குருபரனுக மாறிவிட்டனன். இதற்கு மேற்பட்ட அனுமன் வேறு, இதற்கு முன்பிருந்த அனுமன் வேறுதான் என்ற ஆழ்ந்தகன்ற அடிப்படைக் கருத்து, நமக்கு வாலி வழக்கின் திட்ப நுட்பங்களைத் தெளிவிக்கப் பெரிய சான்றுகும். அடுத்து ஆயவேண்டுவது, இராமபிரான் வாலியைப்பற்றிப் பின்னே கொண்ட எண்ணங்கள். அவற்றை வாலி வதையின் முடிவிற்குச் சற்று முன்னதாக ஆய்வோம்.

முன்னர் நாம் விட்டு வைத்த இடம், வாலி சுக்ரீவன் போரின் இடையில், இராம இலக்குவர் தனித்து நின்று சந்திக்க வாய்ப்புற்ற நேரமும், அவர்களின் கருத்துரைகளுமாகும்.

இவ்வளவோடு சரி, இராம இலக்குவர்கள் கலந்து பேச நின்ற நேரம். ஏன்? இவர்கள் உரையாடலுக்குள் அங்கே சுக்ரீவன் பட்டபாடு கொஞ்சமல்ல. இன்னும் அவர்கள் பேச்சு முடியவில்லை. ஆனுல், சுக்ரீவன் வாழ்வு முடியும் நேரம் வந்துவிட்டது. அவன் ஒரு சிங்கத்தின் பாற்பட்ட யானை

படும் பாடெல்லாம் பட்டனன். உடல் நைந்த சுக்ரீவன் ஓடோடி வந்து ஐயனிடத்தில் அபயமிட்டனன். இங்கே அண்ணலின் நிலையென்ன? பதினன்கு ஆண்டுகளாக இராப் பகலின்றிப் பணி புரிந்துவரும் பழைய தம்பிக்குப் பதி லிறுப்பதா? தனது அழுகையையே விலையாகத் தந்து பழைய அண்ணனைக் கொல்ல ஒரு புதிய அண்ணனை வாங்கிக் கொண்ட இந்தப் புதிய தம்பியின் புதிய அழுகைக்குத்தான் விடையிறுப்பதா? களத்திலும் ஒரு அண்ணன் தம்பியர் போர். இங்கே சோலையிலும் ஒரு அண்ணன் தம்பிகளின் போர். அது மற்போர்; இது சொற் போர். அங்கு தோற்ருேடி வந்தவன் தம்பி; இங்கு தோல்வியின் பக்கமாக உள்ளம் சோர்ந்து நிற்கின்றவன் அண்ணன். களத்தில் வாலி எதிர்பார்க்கின்ருன் தம்பியின் வருகையை. இங்கே இலக்கு வன் எதிர்பார்க்கவில்லை அண்ணலின் முடிவை. இளவலுக்கு இந்த நேரத்தில் அண்ணனுக்கு உள்ள இடுக்கண் தெரியும். இளவல் எப்பொழுதுமே வரப்போவதைச் சொல்லுவதுண்டு. அதை அண்ணியே கேட்கவில்லை; அண்ணன் எங்கே கேட்கப் போகிருர் என்பது இளவல் முடிவு. அந்நிலையில் இராமன் அடிபட்டு வந்தவனுக்கு "நீ அஞ்சாதே; காட்டிக் கொடுத்து விட்டு வாளா இருக்கின்ருர்களேயென வருத்தப்படாதே. உனக்கும் வாலிக்கும் வேற்றுமையே தெரியவில்லை அவன் என நினைத்து உன் மேல் கணை தொடுத்து விட்டால் அரும் பழியாகுமே என்ன செய்வது என ஏங்கி நின்ற நேரம் நல்ல காலமாக நீயே வந்து விட்டனை. நீ அடையாளத்திற்காகக் கொடிப் பூவை அணிந்து கொண்டு செல்க" என விடுத்தனன்.

"மலைந்த போதின் நைந்து இரவிசேய் ஐயன்மாட்டணுகி
உலைந்த சிந்தையோடு உணங்கினன் வணங்கிட உள்ளம்
குலைந்திடல் உமை வேற்றுமை தெரித்திலம் கொடிப்பூ
மிலைந்து செல்க என விடுத்தனன் எதிர்த்தனன் மீட்டும்"

(வாலி வதை 61).

கொடிகளில் பூக்கும் பூக்கள் பெரியனவாக இருக்குமாத லால் தூரத்தில் நின்ருலுந் தோற்றமளிக்குமென அப்படிச் செய்தனர். சொற்படியே தனது தலையில் கொடிப் பூக்களைத் தொடுத்து மிகுதியாக அணிந்து கொண்டு, அவன் சென்று

முன்னையினும் தடிப்பாகப் போரிடத் தலைப்பட்டனன். வாலி பார்த்தனன், அவன் கடுமையை. அவன் கண்களால் மட்டும் காணவில்லை; கருத்தினுலும் கண்டனன். அங்கே அவள், தாரை, புறப்படுகிறபோதேயாரோ துணை வந்துள்ளாரெனக் கூறினுள். ஆனுல், அவள் சொல்லிய இராமன் வருவது ஒருக்காலும் பொருந்தாது. எனினும், இவன் போக்காலும் வந்தினுலும் யாரோ அங்கு ஒளிந்துள்ளார்கள் என்பது உன்னுதற்குரியதே என ஐயம் உற்றனன் வாலி. நமனும் அஞ்சும்படி அந்த நெடுந்திசையைக் கடுமையாக நோக்கினன். இனிக் காலம் கடவாது இவனை முடித்து விடவேண்டுமெனும் ஊக்கமுடையவனுயினன் வாலி. (வாலி வதை 54).

பொறுக்கெனப் போரை முடிக்கப் புக்க வாலி சுக்ரீவன் கழுத்திலும் இடுப்பிலும் கைகொடுத்து உயரத் தூக்கினுன். ஏன்? அவனை ஒரே அடியாக நிலத்தில் அடித்து ஒழித்து விடுவது எனக் கருதினுன்.

"அயிர்த்த சிந்தையன் அந்தகன்
குலைகுலைந்து அஞ்சச்
செயிர்த்து நோக்கினன், சினத்தொடு
சிறுநகை செய்யா
வயிர்த்த கையினும் காலினும்
கதிர்மகன் மயங்க
உயிர்த் தலந்தொறும் புடைத்தனன்
அடித்தனன் உதைத்தான்'. (வா. வ. ப 63)

"எடுத்துப் பாரிடை எற்றுவன் பற்றியென்றிளவல்
கடித் தலத்தினுங் கழுத்தினுந் தன்னிரு கரங்கள்
மடுத்து மீக்கொண்ட வாலிமேல் கோல் ஒன்று வாங்கித்
தொடுத்து நாணொடு தோள்உறுத் திராகவன்துரத்தான்"

(மீக்கொளல்—மேலே தூக்குதல்). (வா. வ. ப. 65)

இங்கே வாலியின் மார்பின் திண்மை, "நீரும், நீர்தரு நெருப்பும் வான் காற்றும் கீழ்நிமிர்ந்த பாரும் சார்வலி" படைத்ததாம். ஆகாசம் எல்லாவற்றிற்கும் இருப்பிட

மானது. ஆனால் தனது வலியைக் காட்டாதது. மற்றைய நான்கு பெரும் பூதங்களின் வன்மையெல்லாங் கூடினல் எத்தனை வலுவோ அத்தனை வலுவுள்ளதாம் வாலியின் மார்பகம். அத்தகைய பெரும் பாறையின் மேல் பாய்ந்தது இராமபாணம். அவ்வளவு வலி படைத்த வாலியின் மார்பகம் இந்த வாளிக்கு எப்படியிருந்தது? ஒரு கூர்மையான ஊசிக்கு வாழைப்பழம் எப்படி யிருக்கும்? மஞ்சள் நிறம் உடையதாய் மாதக்கணக்கிலே கொஞ்சங் கொஞ்சமாகப் பழுத்துக்கொண்டே வருகின்ற பூவன் வாழையல்ல; பழுக்காமலே நைந்து விடுகின்றதொரு பச்சை வாழையுமல்ல; பழுத்துங் கொம்பு போலிருக்கும் செவ்வாழையுமல்ல; சிறுமலை வாழை அது. சிறுமலை வாழைப்பழம் தோல் கருக்கக் கருக்க பழம் சால அளிந்துவரும்; கெட்டுவிடாது. அப்படி தோல் கருத்து உள்ளனிந்த கதலிக் கனியாக இருந்ததாம், அந்தப் பாறைக்கு நெக்கு விடாப் பாறை, இராகவன் வாளியின் வல்லமைக் கெதிரிலே.

" காரும் வார்சுவைக் கதலியின் கனியினில் கழியச்
சேரும் ஊசியில் சென்றது நின்றதென் செப்ப
நீரும் நீர்தரு நெருப்பும் வன்காற்றும் கீழ்நிமிர்ந்த
பாரும் சார்வலி படைத்தவன் உரத்தையப் பகழி''

(வாலி வதை 57).

பாதலமுடியக் கடைக்காலாகக் கொண்டு மீதலம் முடிய வளர்ந்தெழுந்த மலை, மேரு மலையென்பார். அந்த மேரு சாய்ந்தாலும் சாயாத வன்மை படைத்தவன் வாலி. இவன் தம்பியைத் தூக்கிய கை சோர, மெய் சோரச் சாய்ந்து விட்டனன். சரியா மலையைச் சரிவிக்க இடியென வொன்றும் உளதல்லவா? அப்படிப் பட்டதாக இருந்தது இராகவன் வாளி.

பேரிடியும் யுகமுடிவிற்கான பெருங்காற்றும் சாய்க்க மேருமலை சாய்ந்ததுபோல வாலி சாய்ந்தனன். தம்பியைப் பற்றி நின்ற வாலியின் கரங்கள் நழுவின. அவன் தப்பிப் பிழைத்தனன். ஆனால், வாலியின் கரங்கள் மார்பில் தைத்த வாளியைப் பற்றிப் பறிப்பதில் தளரவில்லை.

வாளியின் முனை பாயும்போது ஒருமுனை குத்தும்; பின்புறம் இழுத்தால், இருமுனை அறுக்க அது வெளிவரும். வாலிக்கு அக் கடுங்கணை அவன் காலிலோ கையிலோ குத்தவில்லை. அஃது உயிருக்குறைவிடமாகிய நடுமார்பகத்தில் பாய்ந்தது. அக் கணையைத் தானே வலிந்திழுக்கும்போது, அதனால் அவனுக்குண்டாகுந் துன்பம் எவ்வளவு? அவ்வளவையும் அவன் பொருட்படுத்தவில்லை. தனது மரணத்தையும் பொருட்படுத்தாத மனோ நிலையினனாக நின்றனன் வாலி. "வீரனுக்குச் சேர்ந்த மரணம் சிறு துரும்பு" என்ற பழமொழிக்கு இலக்கியமாக இலங்கிய அவன், அக்கடுந்தொழிலில் வெற்றி கண்டான். அதைக் கண்ட மண்ணவரும் விண்ணவரும் புகழ்ந்தார்கள் "வீரரை யார் வியவாதார்." பறித்த வாளியில் பொறித்த நாமத்தை நோக்கினன் "அப் புகழோன்". பேரடிபட்ட ஒருவனுடைய கண்கள் பஞ்சடையும். கையும் மெய்யும் கருத்தும் ஒருங்கே சோரும். அப்படியின்றி அவன் தனது வீழ்ச்சியைப் பொருட்படுத்தாது, எய்த வீரனைப் பொருட்படுத்துகின்றனனென்றால், வாலியின் திண்ணிய எண்ணத்தில் விரைந்தோடும் வாளியும், பறந்தோடும் உயிரும் தமது ஓட்டங்கள் தடைப்பட அடைபட்டு நிற்கின்ற வென்றால், அவ்வெங்கண் வீரன் மங்காப் புகழினனன்றோ?

வாலி கண்ணுரக் கண்டனன், ஒரு சிறந்த பெயரை. இது 'இராம' என்ற நாமம். அவ் விராமவென்ற சொல் ஒரு மகா மந்திரம். பாரத நாட்டில் வைணவப் பெருமக்கள் எட்டெழுத்தையும், சைவப் பெருமக்கள் ஐந்தெழுத்தையும் மூலமந்திரமாகக் கொண்டு போற்றி வருகின்றார்கள். இம் மந்திரங்களுக்குள்ள இரு தெய்வங்களுக்கும், பல்வேறு வடிவங்களும் வரலாறுகளும் உள. அவற்றிற்கெல்லாம் முடிந்த முடிபாகவும் சிறந்தவொன்றாகவும் விளங்குவன, அரி அரன் என்ற பெருநிலை. அந்த உச்சநிலையில் உருவமொன்றுமின்றியொரு'பேரொளிப்பிழம்பாக நிற்கும் அது. அதுவே உலகிற்கெல்லாம் செம்மையைச் செய்யும் செம்மை. செம்மையென்ற சொற்குரிய பொருள் நுனித்து நோக்கற்குரியது. அம் முடிவிற்காணும் ஒளி சிவப்பும் கருப்புமானது. அதையே செம்மை யென்கின்றனர். "செம்மையே யாய சிவபதம்"

எனச் சைவப் பெருமக்களும், "மூவுருவும் கண்டபோதொன் றும் சோதி முகிலுருவம் எம்மடிகள் உருவம்" என வைணவப் பெருமக்களும் கூறிக் குதூகலிக்கின்றார்கள். நமது பாரத நாட்டில், இவ்விரு சமயங்களையும் வேற்றுமையின்றி நிறைந்த பற்றுதலோடு பரவிப் பயின்று பயன்பெற்று வாழையடி வாழையாக வளர்ந்து சிறந்துவரும் பக்தர்களும் உளர். அவர் கள் கொண்டிருக்கும் மூலமந்திரம் எட்டெழுத்தல்ல, ஐந் தெழுத்தல்ல, இரண்டெழுத்தே. அதுதான் ராமா ராமா வென்ற திருநாமம். இம் மூல மந்திரத்தால் உள்ளம் ஒருப் பாடுற்ற பெரியோர்கள் பலர். "துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்து இறந்தாரை யெண்ணிக் கொண் டற்று" என்றபடி, யெண்ணற்கரிய பெரியோர் அம் மூல மந்திரத்தால் காமவெகுளி மயக்கங்களைக் கட்டறுத்தவர்கள். அவர்களில், அரசியல் விளக்கத்தால் அனைத்துலகும் அறிய வெளிநின்ற வித்தகரே, நமது காந்தியடிகளார்.

கம்பரை, ஒரு வெறுங் கவிவலவராக மட்டில் கருதிவிட முடியாது. அவர், ஆழ்வார்களால் அருளப் பெற்ற திருவாய் மொழியோ வென்று திகைக்கத்தக்க அரும்பெருங் கவிபாடிப் பரவசத்தில் ஆழ்ந்து விடுபவர்.

"நீயாதி பரம்பொருளும் நின்னவே உலகங்கள்
ஆயாத சமயமும்நின் அடியவே அயலில்லை
தீயாரின் ஒளித்தியால் வெளிநின்றால் தீங்குண்டோ
வீயாத பெருமாயை விளையாட்டும் வேண்டுமோ"

"காண்பார்க்கும் காணப் படும்பொருட்கும் கண்ணுகி
பூண்பார்போல் நிற்றியால் யாதொன்றும் பூணுதாய்
மாண்பால் உலகனைத்தும் வயிற்றொளித்து வாங்குதியால்
ஆண்பாலோ பெண்பாலோ அப்பாலோ எப்பாலோ"

என்பனபோன்ற, சாத்திரமும் தோத்திரமுமாகிய தெள்ளத் தெளிந்த பாடல்கள், படிக்கும் நம்மையும் பரவசப்படுத்து கின்றன. அவ்வகை அரும்பாக்களின் பயனுள் கம்பநாடர் கருத்து எவ்வளவு ஆழங்காற்பட்டிருக்கும் என்பதனை, உள்ளி யறிந்த உத்தம வைணவப் பெருமக்கள், அவரை ஆழ்வாரே யென அழைத்து மகிழ்ந்ததில் அதிசயமென்ன ?

இக் கம்பரின் கோட்பாடு ராமநாமத்தை மூலமந்திர மாகக் கொண்டு சைவ வைணவ வேற்றுமையில் சிக்காத வொரு பெருநிலையுடையது. இதனை "அரனதிகன் உல களந்த அரியதிகன் என்றுரைக்கும் அறிவிலோர்கள் பரகதி சென்றடைவரிய பரிசேபோல்" என விளக்கமாகக் கூறியிருத் தலாலும், சிவ விஷ்ணுக்களின் சிறப்புரைக்கவரும் பொழு தெல்லாம் தங்கு தடையின்றி அவ்வம்மூர்த்தங்களின் முன் னின்று உருகுவாராகி மொழிந்து வருவதனாலும், நன்கறிய லாம். இக் கம்பர் தமது கதாபாத்திரங்களுள் பேரிடம் பெற்ற பெருவீரனான வாலியும், தம்மைப்போல, அரியர ரிடத்து வேற்றுமையின்றிப் பரவும் பக்தனென்பதனைக் காட்டியுள்ளார்.

வாலி, திசைகள் தோறுஞ் சென்று நாள்தோறும் சிவபெரு மான் தளிகளில் வழிபாடு செய்கின்றவன் எனவும், அவனே இராமனை மும்மூர்த்திகளுமொன்றாகிய ஒள்ளியன், பிறவி நோய்க்கு மருந்தானவன் எனத் தனது மனைவிக்கும் மகனுக் கும் உரைத்து ஒருப்படுத்தினனெனவும் இசைக்கின்றார். அவ்வரியரருடைய திருநாமம், உயிரோயும் நேரத்தில் நினைவு கூற வந்தது, அவ்வாளியின் பயன் என விரிவு செய்து காட்டு வார், வரும் பாடலில், இராமநாமத்தைக் கண்டானென்றது, "இராமன் என்னும் நாமத்தைக் கண்ணிற் கண்டான்" என விதந்து கூறுகின்றனர். இப் பெயர் இத் தசரதகுமாரன் தோற்றத்து அளவில் உள்ளதல்ல. அதற்கு முன்னரே பரவிப் போற்றவிருந்தது. அதனாலேயே, முனிவர் சமதக்கினியார் தமது திருக்குமரனை இராமன் என அழைத்து வந்தனர். அவ் விராமனே தவத்துயர்வால் பரமனிடத்தில் பரசு என்னும் படையைப் பெற்றபின், பரசுராமனென விளங்கினான். அப் பரசுராமனுக்குப் பிறகு தமது சற்சீடனாகிய தசரதப் பெருந்தகை பெற்ற பெருமகனுக்கு இத்திருப்பெயராகிய ராமன் என்னும் பெயரை இட்டழைத்தார் வதிட்ட மாமுனி வர். இத் தொன்மைச் சிறப்பெல்லாம் தோன்றுகின்றது அடுத்துவரும் கம்பர் கவியில். ஆனால், வரும் கவி, ராமமந்தி ரப் பெருமையையும், அது மரணகாலத்து முன்னிற்கப்பெற்ற பக்தன் வாலியின் இலட்சிய வெற்றியையும் விளக்கித்

தனித்து நிற்கும் பாடலாகின்றது. இப் பாடல் வாலி வழக்கிற்கு உடன்பாடாகவோ எதிர்மறையாகவோ யாதொன்றும் இயம்பும் வகையில் தொடர்புறவில்லை யென்பதனை அறிஞர்கள் ஆழ்ந்துணரவேண்டும்.

"மும்மைசால் உலகுக் கெல்லாம்
மூலமந்திரத்தை முற்றும்
தம்மையே தமக்கு நல்கும்
தனிப்பெரும் பதத்தைத் தானே
இம்மையே மறுமை நோய்க்கு
மருந்தினை இராமன் என்னும்
செம்மைசேர் நாமந்தன்னைக்
கண்களில் தெரியக் கண்டான்."

வாளியில் எழுத்தைக் கண்ட வாலி, தான் பெரிதாக மதித்திருந்த பெருந்தகை, உலகம் பழிக்கத்தக்க கொடுமைக்குக் கூட்டுறவானது நோக்கித்தான் வெட்கப்படுகின்றனன். தன்பழிக்கும் தான் நாணமுற்று, அதனோடன்றி, தனக்கு எதிர்ப்பட்டார் சுமக்கும் பழிக்காகவும் தான் நாணமடையும் ஒரு பெருமகனும் உளன். அவனே உலக நாணங்களுக்கெல்லாம். இருப்பிடமாகிய ஏந்தல், "தன்பழியும் பிறர் பழியும் நாணுவான் நாணிற்கு உறைபதி யென்னும் உலகு" என்ற திருக்குறளை வாலிக்குச் சூட்டுகின்றார் கம்பர்.

"இல்லறம் துறந்த நம்பி
யெம்மனோர் பொருட்டால் தங்கள்
வில்லறம் துறந்த வீரன்
தோன்றலால் வேத நூலில்
சொல்அறந் துறந்திலாத
சூரியன் மரபும் தொல்லை
நல்அறம் துறந்தது என்ன
நகைவர நாண் உட்கொண்டான்"

ஒரு கெட்ட பிறப்பினல் நல்லகுடி கெடுவதுண்டு. ஒரு நல்லவன் பிறந்தும் நல்லகுடி தீதடைகின்றதே யென்பான், 'நம்பி' யென்றனன் வாலி. நான் முன்னர் கேட்டு மதித்த

படி ராமன் நல்ல நம்பிதான், அவன் சேரவொண்ணு காருடன் சேர்ந்துவிட்டனன்; அப்படிக் கெடுக்க நின்றவன் என் தம்பி என்பான், 'எம்மனோர் பொருட்டால் தங்கள் வில்லறம் துறந்த வீரன்' என்றனன் வாலி. தான் மதித்த மாண்பன் மனைவியைப் பிரிந்ததற்கு இரக்கமுற்று "இல்லறந் துறந்த நம்பியென்றும், வெறுங்கையன்மேல் வாளியெய்த வில்லும் பழிபட்டது. பகையற்றவனைப் பகையாகக் கொண்டவன் மரபும் பழுதுபடுகிறதேயென வீரச் சிரிப்புற்று நாணும் வாலி வீரன் எனவும், தோன்றல் எனவும் உள்ளி உரைத்தனன்.

ஒப்பிலாதுயர்ந்தவன் இப்படி நடந்தால் தப்பொடு தாழ்ந்தவர் எப்படி யாவர்? ஒருக்காலும் முறைமாருத முதல்வன் என்பொருட்டுத் தன் முறைகெட முயன்றனனே யெனத் தனக்குள் சொல்லிச் சொல்லித் துன்புறுகின்றனன் வாலி. அப்போது அரசர்களை அறநெறி வழாமல் நிலைநிறுத்தத் தோன்றி அரசர்க்கரசனுன அவ்விராமன் வந்து தோன்றினுன். "தவறு செய்தவர்கள், அத் தவற்றினுல் துன்புறுகின்றவர்களைக் காண நேரும்பொழுது, அவர் முகத்தில் யான் எப்படி விழிப்பது" என வருந்துவது உலகியற்கை. தான் அவனது தம்பிக்குச் செய்யவந்த உதவி காரணமாய்த் தனது உயிரும் ஊசலாட, அக் கடுமைக்காளாகியும், ஆளாக்கிய தன்னையும் தனது குடியையும் எப்பொழுதும்போலச் சிறப்பித்து உள்ளத்தோடு உரையாடிக் கொண்டிருக்கும் வாலியின் முகத்தில் எப்படி நாம் விழிப்பது என்ற எண்ணமே சிறிதும் எழாமல், மிகப் பெருமிதத்தோடும் வந்து வெளிப்பட நிற்கின்றனனும் வேந்தன். கவியைப் பாருங்கள்,

"இறை திறம்பினனுல் என்னை
இழிந்துளோர் இயற்கை எண்ணின்
முறை திறம்பினனுல் என்று
மொழிகின்ற முகத்தான் முன்னர்
மறை திறம் பாத வாய்மை
மன்னவர்க்கு முன்னஞ் சொல்லும்
துறை திறம்பாமல் காக்கத்
தோன்றினுன் வந்து தோன்ற"

அரசர்கள் தமது குடிகள் முறை மாருதிருக்கும் வண்ணம் காக்கும் கடப்பாடுடையவர்கள். அவ்வரசருக்கெல்லாம் அரசன், அவ் வரசர்களையெல்லாம் அரசநீதி சொல்லும் முறைமாருதிருக்கக் கண்காணிக்க வேண்டியவன். அத் தலைமையிடத்தில் அத்தொழில் புரிய ஒருவன் வேண்டுமே யெனத் தசரதன் தவம்புரிந்து பெறத் தோன்றிய தோன்றல் இந்த இராமன். இதுவரை யெச்செயல் களிலும் உலகம் உவப்பப் பிற்படாது முற்பட்டொழுகி வந்த முதல்வன் தான். ஆனல், இப்பொழுது அடியோடு முறைமாருகவே நிற்கின்றது இராமன் செயல். முறை பிறழ்வுகள் யாவை என நினைக்கலாம். இப்பாடலில் 'வந்து' எனவருவதால், இதுவரை அருகுவரவில்லை நெடுந்தொலை வில் நின்றனன் என்பதும், தோன்ற என்பதனுல் மறைந்தே யிருந்தனன் என்பதும் தெரிகின்றன. ஆண்மையும் அறநெறி யும் உள்ளவர்கள் ஆற்றலோடிருக்கும் ஒரு வீரனை அணுக வேண்டும். அப்பொழுதெல்லாம் அயலகத்தே நின்றதும், வெளிப்பட நிற்கவேண்டிய நேரத்தில் மறைவுறவைகியதும், மாருன முறைகள்.

இராமன் தன்னைப் பல்லாற்ருலும் இகழும் இராவணனை நோக்கிப் போடவேண்டிய வீறு நடையைப், பலதுறையா லும் பலபொழுதும் புகழ்ந்தே நிற்கின்ற வாலிமுன் போட வந்ததும் பெருமுரண். அன்றியும், அல்லல்பட்டு அழுவான் முன், போனதுபோக இனி அமைதியாக இருவென அருளுங் கரத்தைக் காட்ட வேண்டிய நேரம், விற்படையை ஏந்தி வரவேண்டிய இயல்புதான் என்னே? என்ற சிந்தனைகளை யெல்லாம் முற்படுத்துகின்றன, இங்குக் காணும் முறை திறம்பல்கள்.

" கண்ணுற்ருன் வாலி நீலக்
 கார்முகில் கமலம்பூத்து
மண்ணுற்று வரி வில் ஏந்தி
 வருவதே போலும் மாலை
புண் உற்றது அனைய சோரிப்
 பொடியொடும் பொடிப்ப நோக்கி

எண் உற்றுய் என் செய்தாய் என்று
ஏசுவான் இயம்ப லுற்றுன்''

இராமன் மண்ணுலகத்தில் தாழ்ந்த கதியில் நின்று புண்ணிய வளர்ச்சிகளால் மேம்பட்டு உயர் நிலைக்கு வந்தவொரு மகனல்ல. மிகவுயர்ந்த நிலையில் நின்று அறத்தின் ஆறெலாம் இழைத்திழைத்துக் காட்ட "இரங்கிவந்த மால்'' வெறும் மாலல்ல, திருவொடு திகழும் மால், இத் திருமால் திருஷ்டிபட்ட இடங்களெல்லாம் திருவொடு பொலிய வேண்டும். இப் பெருமகன் கண்கள் பட்டன சற்று நேரத்திற்கு முன்னர்தான் வாலியின் வடிவத்தின்மேலே. எங்கே? போர்க்களத்திலே. வாலி தம்பியோடு போர் புரிகின்ற பொழுது. அப்பொழுது வாலியை ஒரு பேரழகனுகத் தான் கண்டனன், இராமன். வாலியின் அந்நிலைத் தோற்றத்தை வள்ளல் தனது தம்பிக்கும் வகுத்துரைத்து வியந்தனன்.

'' அவ்வேலை யிராமனும் அன்புடைத் தம்பிக்கு ஐய
செவ்வே செலநோக்குதி தானவர் தேவர் நிற்க
எவ்வேலை எம்மேகம் எக் காலோடு எக் காலவெம் தீ
வெவ்வேறு உலகத்து இவர் மேனியை மானும்?
என்றுன்'' (வா. வ. ப.—40).

உலகத்திற்கு ஒன்றுகத் தேடியெடுத்துக் கூட்டினுலும் ஒருங்கே ஒருலகத்திலே ஒரே வீட்டிலே காணநிற்கும் வாலி சுக்கிரீவர் மேனிகளுக்கு நிகராகும் கடல் மேகம் கால் தீ யாதிய ஒன்றிலும் ஒப்பில்லையாப். இவை யிராமன் காட்சியிற்கண்ட வாலியின் வனப்பு. இப்படித் திரண்டிருந்த வடிவத்தை உருண்டுவிழச் செய்துவிட்டு, அக் கருணையற்ற செயலுக்குத் தனக்குத் துணையாக நின்று தூண்டுதல் (கணையை) செய்த வில்லையும் வெளிப்படுத்திக்கொண்டு, அழுகை வீட்டிற்கு அலங்கார உடையுடன் வருபவர்களைப் போல, தாழக்கிடந்து தவிப்பவன் முன்னே வாழச்சிறந்த வனப்பெலாம் காட்டி வருகின்ற வள்ளலை வாலி காண்கின்றுன். அக்காட்சி வாலிக்குப் பெறுதுபெறும் பெருங்காட்சி தான். எப்படியிருந்தால்? உடன்பிறந்தார் ஒற்றுமையில் உலகத்தில் இணையில்லாத இந்தத் தலைவன், தனது காட்சியில்

படும் பேறுபெற்ற இருவரையும் வாயுரை வழங்கி ஒற்றுமை செய்து வாழ்வித்திருந்தால் ஐயன் காட்சி அருட்காட்சிதான், அவ்வாய்ப்பில்லையே. மாளாத் தொல்லை கொடுத்தபின் தோற்றமளித்தால் என்ன செய்வது? காணப்பெற்றுன் என்னுது "கண்ணுற்றுன்" என்றனர். கண்டனன் தனது அல்லலையெல்லாம் விண்டாகவேண்டுமே, வாலிக்குப் பொழுதில்லையே. உயிர்போகத் துடிக்கிறதே! கொதித்துப் பொங்கும் கோதில் கருத்தெலாம், எடுத்துப் பரப்பியெதிர் வைக்கலானுன் வாலி. "எண்ணுற்றுய்" என்றழைத்தான் முன்னே என்றும் எனது எண்ணத்திலிருப்பவனே. "எண் உற்றுய்" "தென்சொற்கடந்தாய்" "வடசொற்கடற்கு எல்லை தேர்ந்தாய்" "எண்ணும் எழுத்தும் கண் எனத்தகும் நிலையாய ஏந்தலே, நீ நாலுமிரண்டுந் தெரியாதனல்லவே? நான்கை ஒன்ருகவிருத்தும் உணர்வின் தலைவன் நீ. இரண்டை ஒன்ருக வைக்க உதவ வேண்டாமா? 'தம்பியரின்றி உயிர் தனக்கு வேறிலையென வாழும் நம்பி' எம்பியும் யானும் உற்று எதிர்ந்த போரிடை அம்பிடை தொடுப்பதோ? அருளாழியுடையவனே, எண்ணுற்றுய் என் செய்தாய்?" என ஏசத் தொடங்கினுன் வாலி. ஏசலென்பது பாசம் பதிந்த உள்ளத்தவர், கால மாறுதலால் கருத்து மாருமலே எதிர்த்துப் பேசும் பேச்சு. (மைத்துனக்கேண்மையர்வாசகம்)

" வாய்மையும் மரபும் காத்து
மன்னுயிர் துறந்த வள்ளல்
தூயவன் மைந்த னே! நீ
பரதன் முன் தோன்றி ஞயே!
தீமைதான் பிறரைக் காத்துத்
தான்செய்தால் தீங்கன் ருமோ?
தாய்மையும் அன்றி நட்பும்
தாமுடன் தழுவி நின்ருேய்"

அழகான ஓர் உருவத்தை வனையலாம். வடிவில் திருத்தமிருப்பினும் திருத்திப் பொருத்திச் செம்மை செய்துவிடலாம். இச்செயல் வல்லார்க்கெலாம் எளிய செயல்தான். ஆனுல், செயற்கையில் கண்ட சித்திரமனையவொரு புத்திரனைப் பெறுவதென்பது எளிதல்ல. ஆனுல் நீ, பெறப்

பெற்றும் சிறப்புற்றும் வைதகின்றனே. உலகத்திற்கு அரிய செயல் உங்கள் குடிக்கு எளிய செயலாக இருக்கின்றது. உன்னை யொத்தவொரு உருவத்தை வனைய யாவரும் ஒத்துக் கொள்ளமாட்டார்கள். ஏன்? எவருந்தான் முழுதுங்காண முடிவதில்லையே! "தோள்கண்டார் தோளே காண்பார், தாள் கண்டார் தாளேகாண்பார், முழுதுங்காணுதவொரு உருவத்தை யெவர்தான் எப்படி வனைவது?'' "ஓவியத்தெழுத வொண்ணு வுருவத்தாய்''. இப்படியழைக்கின்ருன் வாலி. எப்பொழுது வள்ளலிடத்தில் வரப்பிரசாதம் பெறும் பொழுதா?'' அல்ல வல்ல. கொலையுண்டு குப்புறக்கிடக்கும் பொழுது. என்னே அவனன்பு! என்னே அவன் வீரம்! ''படை குடி கூழ் அமைச்சு நட்பு அரண் எல்லாம் மற்றுள அரசர்கள் விரும்பும் உடைமைகள். உங்கள் மரபார், அன்புடைமை அருளுடைமை அடக்கமுடைமை பண்புடைமை யாதிய உடைமைகளுக்கே பாடுபடுகின்றவர்கள் அல்லவா? அப்படியிருக்க, அம் மரபிற்கு மணி விளக்காக வந்த நீ இப் படிச் செய்யாயே, செய்துவிட்டாய். காரணம் வேறிருக்குமெனவே கவல்கின்றேன். விளங்கிவிட்டது அது. தாய்க் குப்பின் தாரம் என்பர். அன்னம் ஊட்டும் அவ் வன்னம் இல்லை. அகப்பொருளுக்கெலாம் உரிய, அகப்பொருள் அகன்றது. அது ஆவியே அகன்றது போலாயிற்று. தன்னைத் தீண்டிய தறுதலையை, இந்திரன் மகனையும் மன்னிக்க வைத்த மான் விழியில்லை? இதங்கூறி அமைச் சியல் இயற்ற, என்செய்வாய்? உனது செயலெலாம் மயலாகி மாறின போலும்'' என வாலி, இராமன் பட்ட பிழைக்கு வழிவகுத்துவிட்டனன், அகலாத அன்புடைமையினுல். இக் கருத்தெலாம் காணும் கம்பர்,

" கோவியல் தருமம் உங்கள்
குலத்துதித் தோர்கட் கெல்லாம்
ஓவியத் தெழுத வொண்ணு
வுருவத்தாய்! உடைமையன்ரே?
ஆவியைச் சனகன் பெற்ற
அன்னத்தை அமுதின்வந்த

தேவியைப் பிரித்த பின்னைத்
திகைத்தனை போலும் செய்கை,

எனவொரு அழகிய படைப்பில் அளித்தனர்.

“ அரக்கர் ஓர் அழிவுசெய்து
கழிவரேல் அதற்குமாருய்க்
குரக்கினத்து அரசைக் கொல்ல
மனுநெறி கூறிற் றுண்டோ?
இரக்கம் எங்கு உகுத்தாய்? என்பால்
எப்பிழை கண்டாய் அப்பா?
பரக்கழி இது நீ பூண்டால்
புகழையார் பரிக்கற் பாலார்?

“ கூட்டொரு வரையும் வேண்டாக்
கொற்றவ! பெற்ற தாதை
பூட்டியசெல்வம் ஆங்கே
தம்பிக்குக் கொடுத்துப் போந்து
நாட்டொரு கருமஞ் செய்தாய்;
எம்பிக்கு இவ் வரசை நல்கிக்
காட்டொரு கருமஞ் செய்தாய்,
கருமம்மற் றிதன் மேலுண்டோ?''

“ இருவர்போர் எதிருங்காலை
இருவரும் நல்உற்ருரே
ஒருவர்மேல் கருணைதூண்டி
ஒருவர்மேல் ஒளித்துநின்று
வரிசிலை குழையவாங்கி
வாய் அம்பு மருமத்துஎய்தல்
தருமமோ? பிறிது ஒன்ருமோ?
தருகிலதென் உம்பக்கம்?''

“வீரம் அன்று, விதி அன்று, மெய்ம்மையின்-வாரம் அன்று, நின் மண்ணினுக்கு என் உடல்-பாரம் அன்று,. பகை அன்று, பண்பு ஒழித்து-ஈரம் அற்று,இது என் செய்தவாறு நீ?'' என்றனன். “உனது இல்லற இயலை எதிர்த்த பகைவனையழிக்க நீயொரு துணைவனைத் தேடத் துணிந்தனை. மதங்கொண்ட

மன்னவனை யழிக்க அவனை அதஞ்செய்யும் அரியையல்லவோ (அரி-சிங்கம்) தேடவேண்டும். அதைவிட்டு ஒரு யானையை யடக்க முயலையா தேடுவது" என்றனன். இப்படிப் பல பேசிய வாலி, 'வீரனே உனது செயல் நூல் வழிப்பட்டதுமல்ல, உங்கள் மரபு வழிப்பட்டது மல்ல. நீ வதைத்தது ஒரு வாலியையென்றெல்லாம் எண்ணி விடாதே. உங்களுக்கே சொந்தமான தருமத்தின் வேலியை நீ அழித்துவிட்டனை'. "வாலியைப் படுத்தாயலை மன் அறவேலியை படுத்தாய் விறல் வீரனே". உனது தாரத்தைப் பிரித்தான் ஒருவன். அவன் உற்றவனல்ல, மற்றவன். உனக்கே சொந்தமாக, நீயே அதற்கு உற்றவனுக இருந்தும், உனது அரும்பெரும் பொருளாகிய வில்லின் வீரத்தைப் பிரித்தனை நீயே. அவனும் ஒளிந்து வந்துதான் செய்தனன். நீயும் ஒளிந்து நின்றுதான் செய்தனை. ஆனால், அவன் ஒரு குலமுனிவர் பால் பயில வில்லை. அப்படி பயின்ற பெருமையன் நீயே. பயின்றது இதற்காகவோ? என்றனன். இவையெலாம் தரும்பாடல்கள்.

> தாரம்மற் றெருருவன் கொளத்தன் கையில்
> பார வெஞ்சிலை வீரன் பழிப்பதே?
> நேரும் அன்று மறைந்து நிராயுதன்
> மார்பில் எய்யவோ? வில்இகல் வல்லதே?

இப்படி யெல்லாம் முறைமையில் மாறுபடாமல், பொங்கி வரும் ஆத்திரத்தையும் அடக்க முடியாமல், வாலி பலப்பல பேச, அனைத்துங் கேட்டு நின்ற இராமன் பேச முற்பட்டனன்.

மேலே வாலி இராமனை வினவிய வினுக்கள், 15 பாடல்களால் தொகுக்கப் பெற்றவை. அவ் வினுக்களின் உட்பொருள்கள், இராமனை மிகுந்த பெருமையோடு அழைப்பதும், உயர் மொழிகளால் வினவுவனவுமாக அமைந்திருத்தலைக் கண்டுளோம். இக் கருத்தினைக் கம்பர் "அனையன கூறினுன்" என விளக்கினர். ஆயினும், வாலியின் மெய்ப்பாடு நேர் எதிர்மறையாக விளங்கினவாம். வாலி இக் கேள்விகளைக் கேட்ட நேரத்தில், அவனது பற்கள் நெறு நெறனக் கடிக்கப்பட்டனவாம். அவன் கண்களில் கனலெழுந்

தனவாம். அவனுக்கு உள்ளன்பு மாறவில்லை. ஆயினும் உடல் வலிமையும் ஆறவில்லை. என்ன செய்வான் அவன்? அப்படிக் கடுமையாகப் பேசிய வாலியை நோக்கி நின்ற இராமன் எளியவனல்லன். ஆயினும் வாலிக்கு விடையளிக்கத் தொடங்கும்பொழுது, இராமன் வெகுவாக நிலைமாறி நின்றனன். இராமன் பேசத் தொடங்கியது முதல், விடை யளித்து முடிக்கும்வரை, மிக அமைதியாகவே மறுமொழி யளித்தனன் என்று, இருவர் நிலைகளையும் ஒரு பாடலில் குறிக்கின்றனர் கம்பர்.

> "என்று தானும் எயிறு பொடிபடத்
> தின்று கான்று விழிவழித் தீயுக
> அன்று அவ்வாலி அனையன கூறினன்
> நின்ற வீரன் இனைய நிகழ்த்துவான்"
>
> (வா. வ. 99)

இராமனுக்கு வாலியை வதைக்கப் புறப்பட்டபோது இருந்த வெம்மை இப்போது இல்லை. சுக்கிரீவன் மனைவியை வாலி கவர்ந்தனன் என்ற சொல்லைக் கேட்டவுடனே இராம னுக்குபெருங் கோபம் பிறந்தது.

> "உலகம் ஏழினோடு ஏழும்வந்து அவன்உயிர்க்குதவி
> விலகும் என்னினும் வில்லுடை வாளியின் வீட்டித்
> தலைமை யோடுநின் தாரமும் உனக்கு இன்றுதருவன்
> புலமையோய் அவன் உறைவிடம் காட்டுஎனப் புகன்றான்"
>
> (மரா.113)

இங்கு கூறும் 'புகன்றான்' என்ற சொல் மிகுந்த காரசார மான இடங்களில் காணப்படுவது. "இராமனை இகழ்ந்து, இராவணன் மந்திரியொருவன் பேசுகின்றனனும். அவன் பெயர் புகைக் கண்ணனும். அச்செய்தியைப் "புகைநிறக் கண்ணனும் புகன்று பொங்கினன்" என்பர் கம்பர். அக் கம்பரே இராமன் வெகுளியை எடுத்துக்காட்ட "அவன் உறைவிடம் காட்டெனப் புகன்றான்" என்றனர் அப்படி ஆத்திரங் கொண்டெழுந்த இராமன், வீரவில்லுந் தாங்கி வெற்றியும் பெற்று நிற்கின்ற இப்பொழுது, வாலிக்கு

விடைகூறும் வகை "நிகழ்த்துவதாக" நிலவுகின்றது. அது முன் போல் புகன்றுவிடுவதாக இல்லை.

நிகழ்த்துதல் என்ற சொல், கம்பரால் மனமகிழ்ச்சியான இடத்தில் கையாளப்படுகின்றது. விபீடணனுக்கு அடைக்கலங் கொடுத்தாயிற்று. இலங்கைக்கு அரசனுக்கியும் ஆயிற்று. அவனை அழைத்துத் தனது அருகில் இருத்திக் கொண்டனன் இராமன். அவ்விபீடணனைப் பார்த்து, உங்கள் இலங்கையின் மதில்வளம் சேனைகளின் வளங்களை யெல்லாம் செப்புகவெனக் கேட்கின்றனன்-

"ஆர்கலி இலங்கையின் அரணும் அவ்வழி
வார்கெழு கனைகழல் அரக்கர் வன்மையும்
தார்கெழு தானையின் அளவும் தன்மையும்
நீர்கெழு தன்மையாய் நிகழ்த்துவாய்" என்றான்.

இது எவ்வளவு அமைதியான இடம். இச்செய்திகள் தான் எவ்வளவு ஆக்க வேலைக்குரியன? இதுபோன்ற இடங்களில் ஆளப்பெறும் நிகழ்த்துதல் என்ற சொல் மிகக் கடுமையாகப் பேசி முடித்த வாலிக்குச் சொல்ல வரும் விடைகளைக் குறித்து, "நின்ற வீரன் இனைய நிகழ்த்துவான்" எனத் தொடங்குகின்றனர். ஒட்பநுட்பமுறப் பேசும் கம்பரென்றால், நுணுகியறியத்தக்க காரணங்கள் உளவெனத் தோன்றுகின்றதல்லவா?

இராமன் இரக்கமுடையவனாவதற்குரிய ஏதுக்கள் :

இராமன் தனது உள்ளத்தில் இடங்கொண்டிருக்கும் இனியவர்களையெல்லாம், வாலியின் உள்ளத்திலும் இடம் பெற்றிருத்தலை, அவன் ஏசும் மொழிகளுக்கிடையே கண்டனன். தனது தந்தை இறந்ததைக் கேட்டனன் இராமன். அப்போது "அறத்தின் தாயே", "தயா நிலையே", "அந்தோ இனி வாய்மைக்கு யாரே உளராவார்" என அழுதனன். தனது அத்தந்தையை "வாய்மையும் மரபும் காத்து மன்னுயிர் துறந்த வள்ளல்" என்று வாலியின் வாயால் உரைக்கக் கேட்டனன் இராமன். தனது தம்பியாகிய பரதனை "சேண்உயர் தருமத்தின் தெய்வம்" என்று கூறி மகிழ்பவன். அப் பரதனை

ஓர் அடையும் கூற வேண்டாத உயர்வுடையோனெனக் கருதி, ''பரதன் முன் தோன்றினாய்'' எனச் சிறப்பித்துரைக் கின்றனன் வாலி. இராமன் தங்கள் குலப்பெரியோர் செய்த அறங்களையும், அவர்களின் ஆற்றலையும் மெச்சி உருகுகின் றனன். ''கருங்கடல் தொட்டனர், கங்கை தந்தனன், பொரும்புலி மாவோடு புனலும் ஊட்டினர் அருமை என் குலத்தவர்'' என அழுதுறைபவனும் ஆவன். வாலியும் "கோவியல் தருமம் உங்கள் குலத்து உதித்தவர்கட்கெல்லாம் ஆவியதன்றோ''வெனப் புகழ் பாடிக் கேட்கின்றனன். இராமன் மான் வேட்டையாடி வந்து தேவியைக் காணாது மாழ்கும்பொழுது,

> ''கைத்த சிந்தையன் கனங்குழை அணங்கினைக் காணான்
> உய்த்து வாழ்தர வேறொரு பொருளிலான் உதவ
> வைத்த மாநிதி மண்ணொடும் மறைதர வாங்கிப்
> பொய்த்துளார்கொள மயங்கி நின்றாரையும் போன்றான்''
>
> (சடாயு உயிர். 159)

அங்கு இராமனுக்கு வந்து நிலைத்த மயக்கத்தை அருகில் நின்று அறிந்தவன்போல வாலி, ''ஆவியை சனகன் பெற்ற அன்னத்தை அமுதின் வந்த தேவியைப் பிரிந்தபோதே திகைத்தனை போலும்'' என்கின்றனன்.

இராமன் எண்ணத்தால், இராமன் வாளியினால், துன்பத் தின் எல்லையைக் கண்டு நிற்கும் வாலி, இராமனை ''ஓவியத்து எழுதவொண்ணா உருவத்தாய்'' என அழைக்கின்றான். வாய்ப் பற்ற நேர்பாட்டால், தான் வருந்த வேண்டிய செயலுக்கு வாலி வருந்துகின்றான். இராமனுக்கு வந்த நாணத்திற்குத் தான் நாணித் தலையும் குனிகின்றான். வாலி கோட்டை வாயிலைவிட்டு வெளி வந்தது முதல், இமைகொட்டாது அவனைப் பார்த்துக் கொண்டேயிருக்கும் இராமன், மேற் சொன்ன நிகழ்ச்சிகள் அனைத்தையும், தனது கண்களாலும் பார்த்துக் காதுகளாலுங் கேட்டு, உள்ளத்தாலும் உணரு கின்றனனென்றால், கல்லையும் மரத்தையும் கனிவிக்கும் இந்த வாலியின், அன்பிற்கு ஆழங்காண முடியாத செயல்கள், ஒரு கருணாமூர்த்தியை உருக்காமலா போகும்? இராமன் தனது

ஏவினுல் இடர்ப்பட்ட, வாலியின் நெஞ்சத்தில், தனக்கு இனியவர்களெல்லாம் இருக்கின்ருர்களென்பதறிந்த பின், கலக்கமில்லாமலா இருக்கமுடியும்?, இத்தனை ஏதுக்களாலும் இராமபிரானின் நிலை மாறுதலுக்கிடமிருக்கின்றதல்லவா? அதனுலேயே வாலியின் வினுக்களைக் கேட்டு வெகுண்ட வீரனல்ல, "நின்ற வீரன் இனைய நிகழ்த்துவான்" எனக் கம்பர் இதமுற இசைந்தனர்.

வாலியின் முதல் வினுக்களுக்கு இராமன் விடையளித்தல் :

"அசுரனைத் தொடர்ந்தழிக்கப் பிலத்திற் புகுந்தனை. நெடுநாள் வரவில்லை. உனது பிரிவிற்கு வருந்தி உன்னைத் தொடர உனது தம்பி முற்பட்டனன். அவனை உனது குலப் பெரியவர்கள் தடுத்து நிறுத்திவிட்டனர். மனம் நைந்து உயிர்விடத் துணிந்தனன் உன் தம்பி. அதனையும் தடுத்து அரசனுகவும் செய்து விட்டார்கள் குலமுதியர். அவர்கள் வற்புறுத்தலை மறுக்க முடியாது முடிபுனைந்து அரசியற்றி உனது பிரிவிற்கு வருந்தி நின்ற அவன், உனது வருகைக்கு மகிழ்ந்து எதிர்கொண்டு வணங்கினுன். அவனது வணக்கத்தை ஏற்காது பிணக்கத்தைக் கொண்டனை. பின்னர் அவனைப் போருக்கழைத்துக் கொல்லவும் முற்பட்டனை. அவனைத் திசையனைத்துத் துரத்தினை. உனக்குச் சாபமுள்ள மலையில் ஒளித்ததனுலேயே அவன் உயிர் தப்பினன். இது தான் இரக்கமா? மேலும் உனது தம்பிக்கு உரியவளைக் கவர்ந்து கொண்டனை. இதுதான் அறமா? என்னை இரக்க மற்றவன் என்கிருய். அறம் மாறியவனென்கின்ருய். இப் பிழைகளாலும், அவன் எனக்கு உயிர்த்தோழனுகப் பெற்ற தனுலும், எல்லாந் தெரிந்துந் தீவினைக்கு அஞ்சாது உட் பட்டனையாதலாலும், உனக்குப் பெருந் தண்டனையளித் தேன். எனது நண்பனுக்கு நலஞ்செய்தேன். அடைந்தவரைக் காப்பதும், யாருமற்றவர்களுக்கு அருளலும் எங்கள் கொள்கை" என்றனன் இராமன்.

"ஈர மாவதும் இற்பிறப் பாவதும்
வீர மாவதும் கல்வியின் மெய்ந்நெறி

வார மாவதும் மற்ரொரு வன்புணர்
தார மாவதைத் தாங்குந் தருக்கதோ'' (வா. வ. 107)

''ஆதலானும் அவன் எனக் காருயிர்க்
காதலான்என லாலும்நிற் கட்டனன்
ஏதி லாரும் எளியரென் ருரையும்
தீது தீர்ப்பது என் சிந்தைக் கருத்தரோ'' (வா. வ. 110)

''பிழைத்த தன்மை யிதுவெனப் பேரருள்
தழைத்த வீரன் உரைசெயத் தக்கிலாது
இழைத்த வாலி இயல்பல இத்துணை
விழைத்திறத் தொழில் என்ன விளம்புவான்''
(வா. வ. 111)

வாலி, ''ஐயா உங்கள் குலமுறையை எங்கள் முறையாகக் கொண்டு இப்படிச் செய்யலாமா?'' என வருந்தினன். ''ஒருவனோடு நட்பு கொள்ளலாம்; இப்படி, நாமே அவன், அவனே நாம்; நம் இனமே அவன் இனம், அவன் இனமே நம் இனம் என்ற அளவிற்கு நட்புக் கொண்டால், அது தகைமைமிக்கவர்களுக்குப் பொருந்தாது'' என்றனன். ''இயல்பு அல இத்துணை விழைத்திறத் தொழில்'' என்று விளம்பினன். ''அவனிடத்தில் நீங்கள் கொண்ட அளவுகடந்த உகப்பினல்தான் நின்று நிதானித்தும் பார்க்காமல் என்னைக் காய்ந்து முடித்தீர்கள்'' என்பது வாலியின் வாதம்.

இராமன், ''அவன் எனக்கு ஆருயிர்க் காதலான் எனலானும் நிற் கட்டனன்'' எனக் கூறியதைச் சிந்திக்க வேண்டும். ''நாடாது நட்டலிற் கேடில்லை நட்டபின் வீடில்லை நட்பாள் பவர்க்கு''. உழவுத் தொழிலில் களையெடுத்தல் ஒரு பகுதி. ஒருவன் வரகை நாற்றுவிட்டு நட்டனன். அதில் முன்னர் அறுவடை செய்த நெல் விதைகள் உதிர்ந்திருந்து மிகுதியாக முளைத்தன. அவன் களை வெட்ட ஆட்களை விட்டனன். எதிரிலிருந்து வேலை வாங்குகின்றனர். ஒன்றுவிடாது அந்த நெற் பயிர்களைச் சீத்துத் தள்ளுங்கள் என. அறவே நெல்லைத் தொலைத்து வரகையே வாழ்விக்கின்றனன். அவனே அந்த நிலத்திலேயே மறுபடி நெல் நாற்று நடுகின்றனன். அப்பொழுது அதில் வரகு முளைக்கின்றது. முன்னர் நெல் முளை

யைத் தொலைத்ததைப்போல் இப்பொழுது வரகு முளைகளை மாய்த்தொழிக்கின்றனன். அப்போது, களை என்பது எது? பயிரென்பது எது? களையென்பது, தான் நட்டதெதுவோ அதற்கு எதிரிடையானது. அவ்வளவுதான் உலக வழக்கம்.

"நட்டதோர் குழுவினை நடாததோர்குழு
ஒட்டலர் போல நின்று ஒறுத்தல் உன்னியே
அட்டன ராம்என அடாத வான்களைக்
கட்டனர் வேற்றுமை உணருங் காட்சியார்"

மற்றொரு காவியங்காட்டும் உவமையிது. நட்டல்—நண்பு கொள்ளுதல். ஒரு நண்பர் குழு ஒரு தலப் பயணம் செல்லுகின்றது. செல்லும் வழியில் தங்குமிடம் ஒன்றில் தங்களைச் சார்ந்த ஒருவனுக்கும் அவ்விடத்திற்கு வந்த ஒருவனுக்கும் மோதலுண்டாகின்றது. ஒருங்கு சென்ற நண்பர்கள் நடந்தது என்னவென ஆய்ந்தறிய முற்படுவதேயில்லை, புதியவனைக் காய்ந்து அகற்றுவதிலேயே முற்படுகின்றார்கள். அவன் அகன்று மறைந்தான். இவன் வழக்கென்னவென்று விவாதித்தார்கள். புதியவன் மேல் பிழையில்லை. தம்மவன் செய்கையே தவறுதெனக் கண்டனர். தம்மவனை வெறுப்பார்கள், தாங்களே தங்களையும் வெறுத்துக்கொள்ளுவார்கள். இத்துணை நன்மை தீமைகள் ஒருவரோடு நாடாது நட்பு கொள்ளுவதனுல் வருகின்றன.

வாலி மேலும் கூறுகின்றனன்

"ஐயனே! எங்கள் குலத்தியல்பு முறைப்படி பெண், ஏனைய பொருள்களைப்போல, ஒருவன் வைத்து வாழ்ந்த பொருளை, மற்றொருவன் வைத்து வாழலாம்; அது குற்றமாகாது. உங்கள் குலத்து அரும்பெருங் கற்பு மாண்பு எங்கள் குலப் பெண்களின் பால் கொண்டொழுகும் வழக்காறில்லை. கைம் மாற்றுப் பொருளாகக் கருதிப் போன போக்கில் முறைபட்டு வரும் எங்கள் குலத்தியலைக் கருதாது, இப்படிச் செய்து வெற்றியும் பெற்றுவிட்டீர்கள். உங்களுக்கு யான் என்ன சொல்லுவது" என்றனன் வாலி.

வாலியை நோக்கி இராமன் உன்னைக் குரங்கெனக் கூறுவதா ? என்று சிறப்பித்தல் :

"பிறந்தது தேவர்க்கரசனுன இந்திரன் மகனுக; சிறிதும் ஐயமற அறங்களை அறிந்திருக்கின்றனை, உலகமறிந்த புகழாரம் பூண்ட சிறப்பினையுடையை, உன்னை நீ குரங்கெனக் கூறிக் கொள்ளுதல் பொருந்தவே பொருந்தாது.

தேவர், மக்கள், நரகரென்பது, உடம்பை பொறுத்ததல்ல உணர்வைப் பொறுத்ததே. கசேந்திரன் என்னும் யானையையும், சடாயுவென்னும் பட்சியையும், விலங்கென்றும் ஒரு பறவையென்றும் யாருங் கொள்ளுவதில்லை. நல்லது கெட்டது இன்னின்னதெனத் தெரியாததுதான் விலங்கு. உனக்குத் தெரியாத அற நூல்கள் ஒன்றுமேயிருக்க முடியாது இதனை உனது வினைக்களின் திறத்தினுலேயே உணரக்கிடக்கின்றது. தக்கது இது, இது தகாதது என ஆய்ந்தறியமுடியாதவர் மக்களுடம்பொடு நிற்றலால் மக்களாகிவிட மாட்டார்கள். இவ்வறிவையுடைய விலங்குடல்கொடு நிற்பினும் விலங்காகா. காலனைக் கடிந்த தேவனைத் திசையெட்டினும் சென்று வழிபடும் சிறப்புடையாய் நீ. அப்பத்திமையின் பயனுகப் பெருவலி படைத்த நிலநீர் தீ காற்றென்னும் நாற்பெரும் பூதங்களின் வன்மைக்கும் மேன்மைப்பட்ட வன்மையுடையை. குற்றம் புரிவது உலகத்தில் புதிதல்ல. அறங்கோணுத நல்லவர்களும், வினைவசத்தால் பிழைபட்டவர்களும், அரும்பெருந் தவசிகளும், சிறப்புடைய தேவர்களும், பிழைபடுவது உண்டு. ஆனல், தங்கள் குறை தெரிந்து தாங்களே தங்கள் குற்றங்களுக்கேற்ற கழுவாய் தேடித் திருந்தி விடுவார்கள். அறிந்திருந்தும் பிழைசெய்து ஒழுகுபவர் தங்கள் சிறப்பிற்கேற்ற தண்டனையாகப் பெருந் தண்டனைக்கு ஆளாகிவிடுவார்கள். எல்லாச் சிறப்பும், அறிவும், ஆற்றலும் முள்ள நீ குடிவாழ்க்கைக்கே தீங்கு செய்தனை. அதன் பயன் இதுவே. என்றனன்" மநுகுலச் செம்மலாகிய இராமன்.

"தக்க வின்ன தகாதன வின்னவென்று
ஒக்க உன்னல ராயின் உயர்ந்துள

மக்களும் விலங்கே மநுவின்நெறி
புக்கவேல் அவ்விலங்கும் புத் தேளிரே''

''காலன் ஆற்றல் கடிந்த கணிச்சியான்
பாலின் ஆற்றிய பத்தி பயத்தலால்
மாலி ஞற்றந வன்பெரும் பூதங்கள்
நாலின் ஆற்றலும் ஆற்றுழி நண்ணிஞய்''

''மேவரும் தருமத்துறை மேவிஞேர்
ஏவரும் பவத்தால் இழிந்தோர்களும்
தாவருந் தவரும்பல தன்மைசால்
தேவரும்உளர் தீமை திருந்திஞர்''

''இனைய தாதலின் எக்குலத்து யாவர்க்கும்
வினையி ஞல்வரும் மேன்மையும் கீழ்மையும்
அனைய தன்மை யறிந்தும் அழித்தனை
மனையின் மாட்சி யென்ருன்மநு நீதியான்''

(வாலி. வ. ப. 112–113–114–115)

இராமன் நிகழ்த்திய விடைகளை இருமுறையாகக் கேட்கக் கேட்க வாலிக்கு ஆத்திரங் குறைந்தது. அவன் மிக்க அமைதியுடையவஞகினன். இராமன் பெருமைகளைத் தான் உணர்ந்திருந்ததைப் போலவே தன்னைப்பற்றியும் தன்ஞல் மதிக்கப்பெற்ற பெருந்தலைவன் அறிந்திருந்தனன் என்பதை வாலியறிந்தனன். தன்னை மிகச் சிறந்தவஞகக் கருதியிருந்த இராமனுக்குத் தனது குற்றம் பெரிய குற்றமாகக் கருத நேர்ந்துவிடுதல் இயல்பு தானே என்றெண்ண, நாணமும் அமைதியுந் தாமே வருமல்லவா? அமைதியுற்றனன் வாலி.

அமைதியுற்ற வாலி அண்ணலை முன்னையினுஞ் சிறப்பான சொல்லிஞல், ''மாண்ட செவ்வியோய்'' என அழைத்தனன்.

வாலி குற்றத்தை ஒத்துக்கொண்டு தண்டித்த முறையை மறுத்தல் :

செம்மையால் சிறந்தோய், ''பெற்ற பட்டத்தைத் தம்பிக் களிக்கும் பெரியவன் நீ. என் தம்பிபால் நான்

கருத்து வேற்றுமை கொண்டது நினக்கொவ்வாதனே சனகன் பாவைக்கு "இந்த இப்பிறவிக் கிருமாதரைச் சிந்தையாலுந் தொடேனென" வாக்களித்ததைப் போல் ஒழுகிவரும் சீலச் செம்மல் நீ. ஒருத்தன் மனைவியை வவ்வினேன். தம்பியினிடத்திலேயே தவறு செய்தேனெனக் கேட்டால் வெகுண்டு வில்லெடுக்கத்தான் தோன்றும். (விளிந்தாரின் வேறல்லர் மன்ற தெளிந்தாரில் தீமை புரிந் தொழுகுவார்). உலகப் பழமொழியின்படி எனக்கு நேர்ந்த மரணத்தையும் யான் ஒத்துக்கொள்கிறேன். ஆனுல், தவறுகள் செய்த என்னைத் திருத்த வரும் தலைவன் நீ. என்பால்கண்ட இரண்டு குற்றங்களே நின்பாலும் நேரும் படியொரு தண்டனையா? நான் குரங்கிற்கு அரசன்; நீ குவலயத்திற்கெல்லாம் அரசன். அரசர்கள் தாம் வெல்லப் புகுவோர்க்கு முன்னதாகத் தமது வருகையைத் தெரிவிப்பார்கள். போரிடும் இடத்தை நியதி செய்வார்கள். போரில் பயன்படுத்தும் படைகளையும் தமது எதிரி காண எடுப்பார்கள். இப்படி விளக்கமாக வெல்லுவதையே வெற்றியாகக் கருதுவார்கள். மறைந்து நிற்பானேன்? ஒரு படையும் பற்றுத என்னைப் படை கொண்டு கொல்லுவானேன்? என வினவினுன் வாலி. இவ் வினுக்களுக்கு உடனடியாக விடை வந்தது. அது, இராமபிரான் வாக்காலல்ல, இலக்குவனுர் வாக்கால் வந்தது. வாலியின் இவ்விரு வினுக்களும், யாராக இருந்தாலும் நேராக விடையிறுக்க முடியாதவை. இவ் வினுக்களுக்கு இராமபிரான் கடைசி வரையில் விடையிறுக்கவில்லை. இது அப் பெருந்தகையின் மிக மேலான பண்பாட்டினை விளக்கி நிற்பது என்பது மறைமுகமான உண்மையாகும்.

அண்ணலுக்கு இடையூறு வருமென்று தோன்றுகின்ற பொழுதே, விரைந்து முந்திக்கொண்டு அதற்கான உண்மையை யெடுத்துக்காட்ட முன் வருவது இலக்குவனுர் இயல்பு. பஞ்சவடியில் மலர் பறிக்க வெளிவந்த சானகியார், ஒரு அழகிய மானைக் கண்டார்கள். சோலையின் உட்புகுந்து, அண்ணலிடம் வந்து "பாருங்களேன் பொன்மையான மான், வாலும் காலும் மாணிக்கம்" என்றனர் தேவியார்

சென்று காணலாம் என்றனன் தலைவன். உடனே இலக்குவனுர் கூறினுர் காயம் கனகம், மணி கால் செவி வால் எனலால் அது மாயம் என அண்ணலார் புறப்பாட்டிற் கொரு தவக்கத்தைக் குறித்தவரும் இவர்.

தேவியைக் காணுது திகைத்து நின்றனர் அண்ணலார். தேர் வந்துசென்ற அடிச்சுவடு தெரிகின்றது. தொடுவதற் கஞ்சினனென்பது, சாலையோடகழ்ந்திருத்தலால் தெரிகின்றது, தூரத்தில் செல்வதற்கு முன் சென்று பிடிக்கவேண்டாமா? வல்லமையற்றவர்களைப் போல வாடியிருப்பதா புறப்படுங்களண்ணுவெனப் புறப்படுத்தியதும், இந்த இலக்குவப் பெருந்தகையே. வருவதைத் தெரிந்து துணிந்து தெரிவித்துக்கொள்ளுவதும், அண்ணல் உடன்படாவிடினும் தொடர்ந்து சென்று துன்பம் வருமிடத்தில் தானே முந்தித் தலைகொடுப்பதும், இந்த இலக்குவனுர் செயலும், அவர் தாயிட்ட கட்டளையுமாகும் என்பதனை இந்த வழக்கில் மறந்துவிடக் கூடாது.

''அவ்வுரை அமையக் கேட்ட அரிகுலத்து அரசு மாண்ட
செவ்வியோய்! அனையது ஆகச் செருக்களத்து உருத்து எய்யதாது
வெவ்விய புளிஞர் என்ன விலங்கியே மறைந்து வில்லால்
எவ்வியது என்னை! யென்ருன் இலக்குவன் இயம்பலுற்ருன்'
(வா. வ. ப. 116)

இலக்குவர் கூறியதென்ன? ''வாலி உனது தம்பி முன்னதாக வந்து முறையிட்டுக் கொண்டபோது அவனுக்கு அடைக்கலமளித்து முறை தவறிய உன்னைக் கொன்று நீக்குவதாகக் கூறிவிட்டனன் அண்ணல். பின்னர் உன் எதிர்வரின் நீயும் அடைக்கலம் கோரினுல் என்ன செய்வது என்று தான் மறைந்து நின்று ஏவியது'' என்ற விடையே.

''முன்புநின் தம்பிவந்துசரண்புக முறையிலோயைத்
தென்புலத் துய்ப்பன் என்று செப்பினன் செருவில் நீயும்
அன்பினை யுயிருக் காகி அடைக்கலம் யானும் என்றி
யென்பது கருதி யண்ணல் மறைந்துநின் றெய்தது''
என்ருன்.

"பொய்ம்மையும் வாய்மையிடத்த புரை தீர்ந்த நன்மை பயக்குமெனின்" என்ற அறத்தாற்றைச் சிந்தித்தமைய வேண்டியவிடம் இதுவே. இதுவொரு புரை தீர்ந்த நன்மை பயக்குமா? பயந்து அத்தன்மை நிலைபெற்றும் நிற்கின்ற தென்பதை வரும் நிகழ்ச்சியே நிலை நாட்டும்.

வாலி வழக்கு ஒரு பக்கம் முடிவிற்கு வருகின்றது. இம் முடிவிற்கு முன்னின்ற பெருந்தகை இலக்குவனே. இதனை விளக்கிக்கூறும் பாடல், இப்படலத்தின் நூற்றுப் பதினெட் டாவது பாடல்.

"கவிகுலத் தரசும்;அன்ன
கட்டுரை கருத்திற் கொண்டான்;
அவியுறு மனத்தன் ஆகி
அறத்திறன் அழியச் செய்வான்;
புவியுடை அண்ணல் என்பது
எண்ணினன் பொருந்தி முன்னே
செவியுறு கேள்விச் செல்வன்
சென்னியின் இறைஞ்சிச் சொன்னான்"

இப்பாடலில், வாலியின் உள்ளத்தில் இராமபிரான் பெற்றிருந்த இடமும், கம்பர் கருத்தில் வாலிக்கு வகுத்திருந்த சிறப்பும், கண்கூடாகக் காணக் கிடைக்கும். இப்பாடல் வாலியின் கருத்தில் தோன்றிய எண்ணங்களைக் காட்டுகின்றது.

"தாய் என உயிர்க்கு நல்கித்
தருமமும் தகவும் சால்பும்
நீஎன நின்ற நம்பி
நெறியினின் நோக்கும் நேர்மை
நாய்என நின்ற எம்மால்
நவையற உணரல் ஆமே?
தீயன பொறுத்தி என்றான்
சிறியன சிந்தி யாதான்"

என அடுத்து வரும் பாடல், வாலி சிந்தித்த பின் வெளிப் படுத்திய விளக்கங்களைக் காட்டுகின்றது.

வாலி எளிய ஒருவன் அல்லன். அவன் தங்கள் வானர இனத்திற்கெல்லாம் அரசன். அவன் வெற்றுளாய் அரசாண் டவன் அல்லன். கற்றுச் சிறந்து அரசாண்டவன். வாலி கற்றவன் மட்டுமல்லன். கேட்பன கேட்பது மட்டுமல்ல கேட்டவற்றைச் சிந்தித்து தெளிந்து. அகலாமல் அகத்தில் இருத்திக் கொண்டவன். அவன் கேள்வி இன்பத்தில், இராம பிரான் வரலாறும் சிறந்த இடத்தைப் பெற்றிருந்தது. திரு மாலுக்கு ஒரு சிறப்புப் பெயர் உண்டு. அது இராமாவதாரம் ஒன்றிலேயே உற்ற பெயர். அது என்னவெனில் "புருஷோத்தமன்" என்ற திருப்பெயரே. இதன் பொருள் என்ன? இம் மண்ணுலகத்தில் மற்றுள்ள மக்களைப் போலவே ஒரு குடியில் தோன்றி வளர்ந்து, ஒக்கலொடு இருந்து உற வாடி, இன்ப துன்பங்களிலும் ஈடுபட்டிருந்து, எந்த இடருற்றபொழுதும் தனது அடிப்படைப் பண்புகள் கெடாமல் எல்லா வகைச் சிறப்புகளும் இயல்பாகவே அமையப்பெற்று இலங்கி, மனிதருக்குள் மேம்பாடுடைய பெருந்தகையோன் என்ற கருத்துகளையெல்லாம் உள் ளடக்கி நிற்பது, 'புருஷோத்தமன் என்னும் பெயர்.

இந்தப் புருஷோத்தமன் என்ற சப்தத்திற்கு, தமிழுரைத் தருள்கின்றார் நம் கம்பநாடர்- "புவியினுக்கு அண்ணல்", புவி என்பது உலகம். இங்கே மண்ணுலகம் என்பது பொருளல்ல. "மனித உலகம்" என்று பொருள். அண்ணல் என்றால் மிகச் சிறந்தவன். எனவே மனிதர்க்கெல்லாம் மேலானவன்; புருஷோத்தமன்.

வாலி, இராம அவதாரச் சிறப்பெல்லாங் கேட்டுக் கேட் டுத் தெளிந்து, அப்பெருந்தகைக்குத் தனது உள்ளத்தில் தக்க தோர் இடமளித்திருந்தனன். இவ்வளவு சிறப்பியல்பினனு கத் தன்னுள் மதிக்கப் பெற்றிருந்தவொரு தலைமகன், தனக் குச் செய்ததும் தலையாய கொடுமை என்றால், என்னதான் செய்வான் வாலி? மிகவுந் துடிதுடித்தான், ஏசினன், பேசி னன், எல்லாம் முடிந்தன. தனது ஏச்சு வினுக்களுக்கு, எதிர் விடை அளித்த இராமனின் பேச்சு, ஏச்சாகவில்லை. அது அமைதியாக, நேர்ந்த நிலைமையைக் குறிப்பதாக இருந்தது.

அப்பொழுதே, வாலிக்கு ஒருபடி அமைதி உண்டாகிவிட்டது. அங்கே "அவ்வுரை அமையக் கேட்ட அரிகுலத்தரசு" என்றனர் கம்பர். அப்படி அமைந்த அவன், தம்பியை எதிர்த்தது, அவன் மனைவியைக் கவர்ந்தது, அவனுக்காகத் தண்டித்தது சரி, மறைந்தடித்ததேன்? படையெடுத்ததேன்? என வினவினன்.

இவ்விரு வினுக்களுக்கும் மற்றவற்றிற்கெல்லாம், விரைவாகவும் விளக்கமாகவும் விடையிறுத்து வந்த வீரன், மறு பேச்சு ஒன்றுமின்றி வாளாவிருந்தனன். இதுகாறும் இருப்பது தெரியாமல் அருகிருந்த தம்பி இலக்குவன், அண்ணன் இராமனுக்காக, ஓர் அழகிய விடையை அளித்தனன். அவ் விடை கற்பனையானது. ஆனால் பொருள் ஆழமுள்ளது. அது மிகவும் பொறுப்பும் நிறைந்தது.

இலக்குவப் பெருந்தகை இயம்பியது என்ன? "வாலி! உன் தம்பி முன்னமே வந்து சரண்புந்தனன். அவன் என்ன வேண்டிச் சரண் அடைந்தனன்? பெரிய வல்லமையுள்ள என் அண்ணன் ஒருவன். அவன் என்னைக் கொல்லத் துரத்துகின்றான். நான் இந்த மலையில் ஒளிந்து உயிர் தப்பினேன். அவன் என்னைக் கொல்லுவது உறுதி. என்னைக் காக்கவேண்டும். அடைக்கலம் புகுந்தேன்" என்பது.

"முரணுடைத் தடக்கை ஓச்சி
முன்னவன், பின்வந் தேனை
இருள்நிலைப் புறத்தின் காறும்
உலகெங்கும் தொடர, இக்குன்று
அரண்உடைத் தாகி உய்ந்தேன்;
ஆருயிர் துறக்கல் ஆற்றேன்;
சரண்உனைப் புகுந்தேன் என்னைத்
தாங்குதல் தருமம் என்றான்" (மராமரப் 63)

ஒரு தம்பியை அண்ணன் கொல்லத் துரத்துகின்றான். அஞ்சி ஓடுகின்றனன் தம்பி. அவன் இராமன்பால் அடைக்கலம் என்கிறான். இராமனே தன் தம்பிக்காக உலகையெல்லாம் ஆளும் உரிமையை ஈந்த நல்ல அண்ணன். எப்படியிருக்கும்?

அந்நிலையில் இராமன் கூறிய மறுமொழி என்ன? உன்னைக் கொல்லத் துரத்துகின்ற அண்ணன் யார்? அவன் பெயர் என்ன? ஊர்தான் என்ன? ஒன்றுமே கேட்கவில்லை. "ஏ! அண்ணனால் துரத்தப்படுகின்ற தம்பி. இனி உனக்கு அண்ணன் நானே. அவன் வானவனேயாக, மற்றவனேயாக, உன்னைக் காப்பதற்காக அவனைஅழித்தொழிப்பேன்" எனமிக உறுதியாக அடைக்கலம் தந்துவிட்டான் இராமன். இங்கே அரசைக் கவர்ந்தான், மானைக் கவர்ந்தான், அவற்றை வாங்கித் தரவேண்டும் என்றெல்லாம் கேட்கவில்லை சுக்கிரீவன். இவ்வளவு இந்திர ஜாலமாக அடைக்கலம் கேட்கவகை செய்த வல்லுநன், மந்திரியாகிய அந்த மாருதியே யாகும். வாலியின் பெருமைகளையும், அவன் பரமன்பால் பெற்றிருக்கும் வரத்தின் ஆற்றலையும் சொல்லாவிடினும். தான் இழந்த அரசையும் தாரத்தையும் வாங்கித் தரவேண்டுமென வேண்டியிருந்திருப்பானாயினும், ஒரு பெருங்காவியத்தைக் கறைபடியச் செய்துள்ள இந்த குறைபாடே வந்திருக்காது.

[தனது தாரத்தைத் திட்டமிட்டுச் சதி செய்து கவர்ந்து போன கொடியவன் இராவணன். அக் களவினைக் கண்ணாரக் கண்ட சான்று சடாயு. அவ்வளவு கொடியவனுக்கும் தூது அனுப்பி, 'எனது தேவியைவிட்டு உனது ஆவியைக் காத்துக் கொள்ளுக' எனப் புத்தி சொல்லும் இராமன், நேருக்கு நேரே போர்க்களத்தில் ஒசையற்றுத் தலை கவிழ்ந்து நிலங் கிளர்ந்த நிற்கும் அக்கொடியவனுக்கு எனது தாரத்தைவிடு உனது தம்பிக்கு அரசைக்கொடு இன்னும் வெற்றியில் ஆசையா? இன்றுபோ நாளை வா, என்றெல்லாம் சொல்லும் பெருங்குணம் படைத்த ஒரு பெருந்தகை, தனது குலங்குறை உடனுள்ள தம்பி தவிக்க, யார் மேலோ வாளி விடுகின்றேமெனக் கருதித் தனது குலமும் குடிகொண்டிருக்கும், தஞ்சம் என்ற நெஞ்சைத் துளைத்தா நிற்பான்? நேமியை வைத்து வில்லேந்தி வந்த நீர்மையன். அவர்கள் வரம் வாங்கிக் கொண்ட வகையால் விளைந்தது இது].

இக் கருத்துகளை யெல்லாம் சுருக்கிச் சொல்லுகின்றது இளவல் இசைத்த விடை. "முன்பு நின் தம்பி வந்து சரண்

புக முறையிலோயை'' வாலியையல்ல; வாலி என்ற சொல்லே தான் அங்கு வரவேயில்லையே. மனைவியிழப்பு அரசிழப்பு ஒன்றுந்தான் தலைகாட்டவில்லையே! ஒரு தம்பியைக் கொல்லாநிற்கும் முறைகெட்ட முன்னவனை, "தென்புலத்து உய்ப்பன் என்று செப்பினன்'' அவ்வொப்பத்திற்கேற்றபடி செப்பமிட்டாயிற்று. ''செருவில் நீயும், அன்பினை உயிராகி அடைக்கலம் யானும் என்றி', என்பது கருதி, அண்ணல் மறைந்து நின்று எய்தது என்றான்.

இவ்விளவல் உரையில் ''முறையிலோயைத் தென்புலத் துய்ப்பனென்று செப்பினன்''. அது எப்போது? முன்பு பொருள். முதல் முதல் நடந்தது இது என்பதே. இவ் ஆழ்ந்த கருத்தெலாம் அறிந்த வாலி, தன் குறைகளை விரித் துக் கூறிக் கையடை பெற்றுவிட்டார்கள்; பின்னர் தனது வரலாறுகள் அனைத்தையும் விளக்கி நின்றார்கள். வரங் கொடுத்த வள்ளலுக்கு நேர்ந்த சூழ்நிலை இது, என்றவெல் லாம் அறிந்து கொண்டனன். பின்னர் மறைந்ததற்கு இளவல் கூறும் காரணம் நடந்ததுமல்ல; தனது தமையனோடு கலந்ததும் அல்ல. இடத்தையும் காலத்தையும் எண்ணி இளவலே புனைந்தது என்பதனையும் வாலி விளங்கிக் கொண் டான்.

''கவிகுலத்தரசு மன்னன் கட்டுரை (கொண்டானல்லன்) (கேட்டுக் கொண்டானல்லன்) மனத்தில் கொண்டான்.'' மன மார ஆராய்ந்து கொண்டான் என்பது கருத்து. கட்டுரை என்ற சொல்லுக்கு, இன்றைய கருத்து, உரைநடையாக எழுதும் நூல் என்பது ஒன்றே. முன்னர், கட்டுரை யென் றால், கற்பனை, கட்டிப் பேசுதல் எனப் பொருள் கொள்ளப் பட்டது. இவ் விராமாயணத்திலேயே மற்றொரு கட்டுரை யையும் காண்கின்றோம். இங்கு வருவது ஒரு மாணவன் கட் டுரை, அங்கு வருவது ஒரு கூனவள் கட்டுரை. அவள் கட்டு ரைத்தது, ஒற்றுமையாக வாழும் இருவரை வேற்றுமைப் படுத்துவதற்காக. இச்செம்மல் கூறுவது வேற்றுமையுற்றிருக் கும் ஒரு அன்பனையும் ஒரு அருளாளனையும் ஒற்றுமைப் படுத்துவதற்காக.

தசரத மன்னனுக்கு இளந்தேவி கைகேயி. அவள் அரச னுக்கு யாரினும்பிரியாள், போரினும் பிரியாள். அம்மடந்தை தனது பள்ளியறையில் பஞ்சணையில் கவலையற்றுக் கண்ணு றங்கினள். அவள் பாதத்தைத் தீண்டினுள் கூனி. கூனியும் அவளாக வரவில்லை. அவளை ஒரு கொடுவினை தூண்டிற்று. கற்புநெறி நின்ற கைகேயி விழித்தனள்; தூக்கமும் நன்ருகத் தெளியவில்லை. ஆயினும் அழுது தொழுது அவளுக்குச் சில சொல்லலாயினள் கூனி. ஆங்கவள் சொல்லப் புகுவன "கட்டுரை"யாம்.

> **"தீண்டலும் உணர்த்துவள் தெய்வக் கற்பினுள்**
> **மீண்டகண் அனந்தரும் நீங்கு நிற்றிகன்**
> **மூண்டெழு பெரும்பழி முடிக்கும் வெவ்வினை**
> **தூண்டிடக் கட்டுரை சொல்லல் மேயினுள்"**
>
> **(மந்தரை சூழ்ச்சி 44)**

அங்கே, கூனியுரைத்தது கட்டுரை எனத் தெரியாமல், மயங்கி அவள் வழிப்பட்டனள் கைகேயி. இங்கே, இலக்குவனுரைப் பது கட்டுரையெனத் தெரிந்து தெளிந்து, இலக்குவன் வழிப் படுகின்றனன் வாலி. இப்படி மாறுவதற்கு ஏதுவென் னெனில், இரு கற்பனைக்காரரின் நெஞ்சகத்தின் நிலைமையே யாகும். ஒன்று ஒளிநிறைந்த உள்ளம்; ஒன்று இருள் செறிந்த உள்ளம்.

வாலியும் அவன் தம்பியும் மற்போர் புரிந்தனர். அப் பொழுதே வள்ளலும் இளவலும், சோலைக்குள் சொற்போர் புரிந்தார்கள். அச் சொற் போரில் வள்ளல் சுக்ரீவன் பக்கம் வாதமிட, இளவல் வாலி பக்கமாக வாதிட்டனன். இங்கு வள்ளலுக்கும் வாலிக்கும் நடக்கும் சொற்போரில், அந்த வாலிக்கு எதிராக இராமன் பக்கமிருந்து விடையிறுக்கின் றனன் இலக்குவன். இப்படி மாறுபட்ட இளவலின் இரண்டு உரைகளில் இது கற்பனையா? அது கற்பனையா? இதுவே கட்டுரை. ஏன்? அங்கு பன்னுள் பழகிய அண்ணனுந் தம்பி யுமே இருந்தார்கள். அயலவர் ஒருவருமிலர். ஆதலால், அங்குக் கற்பனைக்கு இடமில்லை. இங்கு அயலவனுக வாலி

நிற்கின்றனன். இவனுக்கு உரைக்கும் இதுவே கட்டுரையாக இருக்க வழியுண்டு.

வாய்மையைப் பற்றிக் கூறவந்த வள்ளுவர். "வாய்மை எனப்படுவது யாதெனில்?" என ஒரு வினவை எழுப்பினர். நடந்தவற்றைக் கூறுவது வாய்மை. நடவாதவற்றைக் கூறுவது பொய்மை. எனவே எல்லோருங் கொண்டிருப்பது தெரியாமல் அல்ல அவர் வினு. இப்படிக் கொள்வதில் ஒரு சிறந்த திருத்தத்தைத் தெரிவிக்கவே அப்படித் தாமே வினவித் தாமே விடையும் இறுக்கின்றுர். அப்படி வினவிய வள்ளுவர், எதனை வாய்மை என்கின்றுர்? "யாது ஒன்றும் தீமையே இலாதவற்றைச் சொல்லுவதை அப்பொழுது, நடந்தது ஒன்றை வெளியிட்டு, அதனுல் ஒருவருக்குத் தீமை வருமானுல், அது வாய்மையல்ல என்று ஆயிற்று. இனி நடவாத ஒன்றையும் சொல்லலாம். அது, அந்த நேரத்தில், அந்த இடத்தில் நேர்ந்துள, அல்லது நேரவிருக்கின்ற துன் பத்தை நீக்கி இன்பத்தைச் செய்யவல்லதானுல், இப்படிக் கூறும் "பொய்மையும் வாய்மையேயாம்! பொய்மையும் வாய்மை இடத்த புரைநீர்த்த நன்மை மயக்கும் எனில்." இங்குவரும், இடத்த என்றது காலத்தையும் இடத்தையும் குறிக்கும். அப்படியானுல் உலக மக்களெல்லாம் ஒரு பொய் சொல்லப் புகுங்கால், ஒரு பயனும் கருதாமல் யாரும் சொல்லுவதில்லை. அப்பயன் துன்ப நீக்கமும் இன்ப ஆக்கமு மாகத்தான் இருக்கும். அப்பொழுது பொய்யெல்லாம் இத் திருக்குறளின்படி மெய்யாகி விடுமானுல், பின்னர் பொய் யென்பதும், மெய்யென்ப தொன்றுமே மிஞ்சாதே என்ன செய்வது?

இந்தத் துன்பநீக்கமும் இன்ப ஆக்கமும் சொல்லுகின்ற ஒருவன், தனக்கே பயன்படல் கருதிச் சொல்லுவானுனல் அது பொய்யே யாகும். பிறர்க்கு வரும் துன்பத்தை நீக்கு தல் கருதிச் சொல்லுகின்றபொழுதுதான், இந்தத் திருக் குறள் குறுக்கிட்டு அந்தப் பொய்யை மெய்யாக்கத் துணை செய்யும் என்பதனை உன்னியுணரவேண்டும். இங்கே இராம பிரான், சுக்ரீவனுக்கு அடைக்கலங் கொடுத்துவிட்டேன்.

உன்னெதிர் வந்தால் நீயும் அடைக்கலமென்பாய், ஒருக்கால் அப்படி நேர்ந்தால் முன் கொடுத்த வாக்கு என்னுவது என்று தான் மறைந்து நின்றது எனக் கூறியிருந்தால், அது உறுதி யான பொய்யேயாகும். மற்றவனுன இலக்குவன் இசைப் பதனுல் மிக உறுதியான மெய்யாகி விடுகின்றது அது.

ஒரு கணவனும் மனேவியும், ஒரு குருவும் சீடனும், ஒரு அண்ணனும் தம்பியும், உள்ளத்தால் பிரிக்கமுடியாத ஒரு வரேயாயினும், உருவத்தால் சேர்க்க முடியாத இருவரே யாவர். இது ஒன்றல்லாத ஒன்று, இரண்டல்லாத இரண்டு. "அத்துவைதம்". "பிறந்து மொழி பயின்ற பின்னெல்லாம்" அண்ணனேவிட்டு நீங்காத தம்பி. இந்த இலக்குவப் பெருந் தகையே. மற்ற இரு தம்பியருக்கும் அப்படியிருக்கவே ஆசை. ஆனுல், அவர்களுக்கு அவ்வித வாய்ப்பு ஏற்பட வில்லே. இராமற்கு நேர் இளவலான பரதனே "நான் என்றும் குறைவிலாத துன்பத்திற்கு ஏதுவானேன்; அவன் அது துடைக்க நின்ருன்" என இலக்குவற்குற்ற வாய்ப்பினே எடுத்துக் கூறினன். பின்னர் வந்த மகாகவி வில்லியாரும் "இலக்குவன் ஒரு வாய்த்த திருத்தம்பி" என விளக்கஞ் செய்துளார்.

இந்த இளவல் என்றுமே அண்ணலுக்குத் துன்பநீக்கமும் இன்ப ஆக்கமும் செய்துவரும் உலகத்திற்கொருவனுன தம்பி. இப்படியுள்ள இளவல், இந்த அரும்பெரும் அண்ணனுக்கு ஒருபுடை அறத்தை நோக்கிச் செய்த செயலே, ஒருபுடை மறமாகி மாசுபடுத்த வந்த நேரத்தில், தலேகொடுக்காம லிருக்க எங்ஙனம் முடியும்? வாலியின் வினுக்களுக்கு விறு விறுப்பாக விடையிறுத்து வந்ததொரு வில்வீரன், ஒருசொல் வீரன் எதிர்நின்று சோர்வுறுகின்ற பொழுது, எப்படித்தான் வாளாவிருக்க இயலும். தனக்குத் தெரிந்த வழியெல்லாம் கொண்டேனும். அண்ணலேத் தாங்கவேண்டாவா. "அறி வினுல் ஆவது உண்டோ பிறிதின்நோய் தந்நோய் போல் போற்றுக்கடை." அறிவு நிறைந்த இலக்குவன் ஆய்ந்து பார்த்து, நாம் சொல்லப்புகும் சொல் யாதாயினும் அது "அங்கணத்துளுக்க அமிழ்தாகாது, "வாலி நம் கணத்தன் அல்லானல்லன். அவன் நம்கணத்தன். அண்ணனும் வாலி

யின் உள்ளக்கிடக்கை அறிய வாய்ப்பில்லாது வந்துவிட்ட வம்பு இது. இங்கொன்றைச் சொல்லுவது இவ்விடத்துப் 'புரை தீர்ந்த நன்மை பயக்கும்' என்பது எனக்குத்தோன்றும் உறுதியெனக் சொண்டே இக்கட்டுரையைப் யயன்படுத் தினன் இளவல் என்பதை வாலி நன்குணர்ந்தனன். அவன் "மனத்திற் கொண்டனன். எதனை? மன்னன் கட்டுரையை" அப்படி அவன் கொண்டதின் பயன் என்ன? அவன் "அவியுறு மனத்தனுனன்". எப்படிப்பட்ட நேரம் இது ? இரு பெரிய வர்களுக்கு உயிர் சோரும் நேரம். வாலிக்கு உடம்பில் உள்ள உயிர் இராமனுக்கு உள்ளத்திலுள்ள உயிர் (மானம்) நிலை கலங்கி நிற்கின்ற நேரம். உடம்பைவிட்டு ஓடிக்கொண்டிருக் கும் உயிரைத் தனது உள்ளத்தின் உறுதியால் பற்றிக் கொண்டு, இராமன் வாளியைக் கரத்தால் பற்றிக்கொண்டே பேசிக்கொண்டிருந்த பெருவீரன். வாலி, இராமன் பேச்சற் றிருந்த பெருமையையும், இளவல் ஈடுகொடுத்திசைக்கும் கற்பனையையும் வெறுக்கவில்லை. மிகவும் அவன் விரும்பினன் உயிரோயுமிடத்தில் தக்கவரைச் சார்ந்தோம் என்பது அவனது உள்ளக்கிடக்கை ஆயிற்று. அவன் மன மடங்கி நின்றனன். மனமடங்கல் ஆசையறுதல். "ஆராவியற்கை யவா" நீங்கினன் வாலி. பேரா இயற்கை பெற நிற்கின் றனன் அவன்.

இளவலின் கட்டுரை தன்னை எதிர்த்துத் தமையனை ஆதரித்துப் பேசுவதாக மட்டுமில்லை. வாலியின் உருக்க முள்ள, ஆனல் ஆத்திரப் போர்வையைக் கொண்ட வினக் களை எல்லாம் உற்று நோக்கிக் கொண்டிருந்த இளவல் வாலி. "இவ்வளவு அன்பு நிறைந்த நினக்கு அண்ணல் அடைந்த சூழ்நிலைகள் தெரியாதா ? கடைசி நேரத்தில் உள்ளத்தில் ஒருமையுள்ள நீ, வள்ளலோடு உலகமறிய, வெளியிலும் ஒருமைப்பாடு காட்டலாகாதா?" என வினவுவதாகவும் இருந் தது. அதனல்தான் மாயைக்கிடமான மனத்தையே அவித் துக் கொண்டனன் வாலி. வாலி இந்த ஐம்புலன் அவித்தா னல்லன். ஐம்புலங்களுக்கும் அரசாகிய மனத்தையே அவித்த பெருந் துறவியாயினன்.

மனமடங்கக் கற்ற வாலி, அவன் அண்ணன்பால்பட்ட குணங்களை எல்லாம் நாடி, சார்ந்தவரால் நேர்ந்த ஒரு சிறு குறையையும் நாடி, அவற்றுள் மிகைப்பட குண நலமே முன்னிற்க, தான் முன்னமே கண்ட தலைமகன். தலைமகனே எனத் தனது உள்ளம் பகைமையின்றி மிகவும் பொருந்தின வனுயினன். ஒரு ஒப்பற்ற தலைவனையறிவது எது? அறிவு தான். அவ்வறிவு தங்கும் இடம் எது? தலைதான், அத்தலை தன்னையும் தலைவனையும் நன்கு அறியும்பொழுதுதானே வணங்கும் அல்லவா?

வாலியின் தலை இராமனைக் கண்ணிற் காணுத பொழு தெல்லாம் இராமன் இயல்புகளை எண்ணி எண்ணி வணங்கிக் கொண்டிருந்தது. எதிர் வந்தபொழுது வணங்கவில்லை. அதற்குக் காரணம் வாலியுமல்ல இராமனுமல்ல. "சிற்றினங் குரங்கின் செய்கை"யால் நேர்ந்த இடையீடு. இளவலுரை யால் அவ் இடையீடு அகன்றது. வாலியின் சென்னி பழைய படி வணங்கத் தலைப்பட்டது. தனது கருத்திற் குடிகொண்ட இராமனைக் கண்களில் கண்ட பிறகு, வாலி வணங்கும் முதல் வணக்கம் இதுவே. வணங்கிய வாலி, தனது உள்ளக் கிடக் கையை வெளிப்பட உரைக்கவுந் தலைப்பட்டனன்.

வாலி, முன்னரும் பலமுறை இராமனை அழைத்தழைத் துப் பேசினன். அவ்வழைப்புகளில் நிறைந்த பொருள் களிருந்தன. ஆனுல், ஓசையின்பம் இல்லை. ஏன்? அவை நிறைந்த ஆத்திரமடைந்த நேரம். இப்பொழுது அழைக்கும் அழைப்புகள் ஒலியாலும் சிறந்தவை; பொருளாலும் பொலி வுடையவை.

"நம்பீ! நீ உலகத்துள உயிர்களுக்கெல்லாம் அவ்வவற்றை ஈன்று காக்கும் தாயாரை ஒத்தவன். நீ தருமத்திலும் தகுதி யிலும் சான்ருண்மையிலும் ஒப்பவரில்லாத ஒருவன். நல் வழியே நினது தொல்வழி. உன்னுல் அணைக்கப்பட்டவனும் அழிக்கப்பட்டவனுமாகிய எனது தம்பியும், நானும் எப்படி யிருக்கின்ருேம் தெரியுமா? நாய் என நிற்கின்ருேம். தாய்க் குணம் வேற்றுமையறியாது யாரையும் தழுவி வளர்க்கின்ற குணம். நாய்க்குணம் உடன்பிறந்த ஒன்றையும் இனத்தி

ளுள்ள எல்லாவற்றையும் எதிர்த்துச் சீறிக் கடித்துத் துரத்தும் கீழ்மைக்குணம். உனது உயர்ந்த வழியில் எங்கள் இழிந்த வழியெப்படிப் பொருந்தும். ஒரு சிறிதும் பொருந்தாதாதலால் தீயவை பல செய்துவிட்டேன். எனது சிறப்பை மறந்து பிறப்பின் பேதைமையால் செய்த செயல்களை யெல்லாம் பொறுத்துக்கொள்ள வேண்டுகிறேன் என வேண்டிக் கொண்டன் வாலி. வாலியை முன்னே ''கேள்விச் செல்வன், என்றனர். "பிறர் பழிக்கும் நாணும் பெருங்குணத்தன்" என்றனர். இப்போது ''சிறியன சிந்தியாதான்'' எனக்கூறிச் சிறப்பிக்கின்றார் கம்பர்.

வாலி கடைசியாகக் கேட்ட, மறைந்து நின்றது, படை கொண்டடர்த்தது ஏனென்ற இரு குற்றச்சாட்டுகளில், மறைந்து நின்றதற்கு ஒருவாறு இளவல் விடையிறுத்தனன். ஆனால், வெறுங்கையன்மேல் வில்லெடுத்ததற்கு, ஒருவரும் ஒருவிடை தரவில்லை. அக் குற்றச்சாட்டிற்குத் தானே விடையிறுத்துக்கொண்டு, அதனை விட்டு விட்டனன் வாலி. வாலி பொறுத்து விட்டுவிட்டால் விடட்டும், அரங்கத்திற்கு வந்த வழக்கில், அப்படி எந்த விடையை வாலி தானே வகுத்துக் கொண்டனன் என்பதை அவன் வழக்கில் கண்ணோட்டமுற்று வரும் உலகவருக்கும் உணர்த்தவேண்டாமா? வேண்டும். அது ''நாயெனத் தக்கவெம்பால்''? என்ற சொல்லுக்குள் உளது. நாய் மனிதனைக் கடிக்கும், மனிதன் நாயைக் கடிக்க முடியாது. ஏன் அதைவிட உயர்வுள்ள ஒருவன் அச்சிறு தொழிலைச் செய்யானென்பதற்காகவோ, ஆம். அன்றியும், நாய்க்குள்ள கூர்த்த பற்கள் மனிதனுக்கு இல்லை. அதனால் அவன் தனது பெருமிதத்தை விட்டுக் கடிக்கப் புகுந்தாலும் அது முடியும் செயலல்ல. அதனால்தான் ''கூர்த்து நாய் கவ்விக் கொளக் கண்டும் தம்வாயால் பேர்த்து நாய் கவ்வினார் ஈண்டில்லை'' எனக் கூறினர். பின்னை நாயை அடக்குவது எப்படி? நாய்க்குப் பல்லுண்டு, மனிதனுக்குக் கல்லுண்டு என்பதுதான் உலகியல். குரங்கிற்கு வாலுண்டு, மனிதன் அதை ஆட்டவேண்டுமானால் அது மதியாது. இவன் அதன் வாலைப் போல ஒரு கோலைத் தேடிக்கொண்டால் தான் குரங்கினிடத்தில் சேவகம் செய்யமுடியும். "கோலாடியபடி

குரங்காடும்''. இந் நியாயம் உலகத்து மற்ற குரங்குகளுக்கு எல்லாம் சரிதான். ஏன், அவை பேசத்தெரியாத குரங்குகள், வாலி அப்படியா? வாலிக்கு வாலும் உண்டு, கற்று வல்ல நூலும் உண்டு. வாலியின் வால் அவனது உடலோடு ஒத்தது எனினும், அதைவிடப் படையொன்றுங் கிடையாது. அது இருபது கைக்காரன் படைகளை எல்லாம் அதிரவைத் தடிக்கும் படை. ஆனாலும், உனக்கும் வாற்படையுளதே யென இராமபிரானே இலக்குவப்பெருந்தகையோ, இசைப்ப தற்குரியதல்ல; அந்த இயற்கையில் அமைந்த படை. இப் பெரும் படையாளியான வாலி, சொல்லமுடியாமல் உள்ள முழலும் தனக்கு நெடுங்கால உறவினர்களாகிய இருவருக்கு மாக "குற்றமொன்றும் பாராட்டித் திரியாமல்" விட்டுக் கொடுத்து விட்டனன். இதனால்தான் "சிறியன சிந்தியா தான்" என்ற பெரும் பட்டம் தமிழகத்துப் பல்கலைக்கழகத் தலைவராக முக்காலத்திற்கும் இலங்கும் கம்பரால் பெற்றனன்.

" தாயென உயிர்க்கு நல்கித்
தருமமும் தகவும் சால்பும்
நீயென நின்ற நம்பி
நெறியினில் நோக்கும் நேர்மை
நாயென நின்ற வெம்மால்
நவையற வுணர லாமே ?
தீயன பொறுத்தி யென்றான்
சிறியன சிந்தி யாதான் *(வா. வ. 119)*.

ஒரு பெரியவரைப் பார்த்து, ஒரு சிறியவன், தன்னை "என் பால்'' எனக் கூறுவனேயன்றி, "நாயெனத் தக்க எம்பால்'' எனப் பன்மையாகக் கூறுனதலால், இங்கு வாலி தன்னையும் தம்பியையும் சேர்த்துக்கொண்டு, நாய்களைப் போல நாங்கள் ஒருவனையொருவன் வஞ்சித்து வாதிட்டுக்கொண்டு, உயர்ந்த பெருந்தகையான உனக்கு மாசளித்து விட்டோம். ஆதலின் என்னையே அன்றி நின்னை இக் குறைபாட்டிற்கு ஆளாக்கிய எனது பின்னவன் தன்னையும் பொறுத்துக்கொள்ள வேண்டு மென வேண்டினன் வாலி என்பது, தெற்றென விளங்குதலைக் காணவேண்டும். இவ்விடத்தில், தனது தமையனைத் தாங்கிப்

பேசிய இளவலின் முன்னே தன்னைக் கொல்லுவித்த தம்பியைத் தாங்கிப் பேசுகின்றனன் வாலி என்றால், வாலியின் மேதக்க மேன்மையும் அவனுக்குக் கம்பர் தரும் ஊழி காணும் ஒல்காச் சிறப்பினையும் உளங்கொளல் வேண்டும். வாலி வழக்கு ஒரு பகுதி முடிவுறுகின்றது எனத் தொடங்கினுமல்லவா? "ஒருவன் பொறை யிருவர் நட்பு" என்பது பழமொழியாதலால்; வாலி பொறுத்துக்கொண்டதும் அன்றிப் பொறுத்துக் கொள்ளுங்கள் எனவும் கேட்டுக் கொண்டான் வழக்கு முடிந்தே விட்டதெனக் கொள்ளன் மின். வாலியின் வாதங்கள் முடிந்துவிட்டன. வாலியின் வேண்டுகோள்கள் பின்னுந் தொடருகின்றன. மற்றொரு பக்கத்து முதல்வனுன இராமபிரான் நேர்பட ஒரு கருத்தும் வெளியிடவில்லை. ஆகலான், வழக்கு இன்னொரு பகுதி முடிவு பெறுமலே நிற்கின்றது. மேலும் நிகழ்ச்சிகளைக் காண்போம்.

இராமபிரானை முன்னர்த் தாயே என அழைத்த வாலி இப்பொழுது தந்தையே என அழைக்கின்றனன். தாய் உடம்பிற்கு உறுதி செய்பவள், தந்தை உயிருக்கு உறுதி செய்பவன். அதன் மேலும் பிறவியாகிய பெரும் பிணிக்கு மருந்தே எனவும் அழைத்தனர். வேண்டுவார் வேண்டியதெல்லாம் தரும் அருளாளன் எனவும் அழைத்தனன். இப்படி அழைத்தவாலி "எளியனேன் இன்னது, இனியது தெரியாத புன் பிறப்பினேன் என்பதைக் கொண்டு யான் கூறியவற்றுள் வந்த குற்றங்களை எல்லாம் பொறுத்துக் கொள்ள வேண்டுகின்றேன். இன்னும் வேண்டுவது உளது எனப் பின்னும் பேசுகின்றனன்.

"இரந்தனன் பின்னும் எந்தை
யாவதும் அறிகல் தேற்றாக்
குரங்குஎனக் கருதி நாயேன்
கூறிய மனததுக் கொள்ளேல்
அரந்தைவெம் பிறவி நோய்க்கும்
அருமருந்து அனைய ஐயா
வரந்தரு வள்ளல் ஒன்று
கேள்என மறித்தும் சொல்வான்" (வா. வ. 120)

மேலே வந்த பாடலில் மறித்துச் சொல்வானென வந்த சொற்பொருள்களுக்குத் தொடர்புடைய பாடல் 126-ம் பாடலாக இருக்கின்றது. இடையில் வரும் 'ஏவுகூர்வாளி' புரமெல்லாம் எரிசெய்த, மாவலிச்சூலியார், யாவரும் எவையும், உண்டெனுந் தருமமே என்ற தலைப்புகளையுடைய ஓர் ஐந்து பாடல்களும் துதிப்பாடல்களாகவே வருகின்றன. மேலும் அவற்றில் இடைப் பாடலாகவுள்ள மாவலிச் சூலியார் என்ற பாடல் சில பிரதிகளில் காணப்படவில்லை. அன்றியும், மேல்வரப் போகும் 132, 133-வது பாடல்களிலுள்ளதைவிட. இப் பாடல்கலால் திருமாலுக்கு மிகுந்த சிறப்புகள் ஒன்றும் காண படவுமில்லை. மற்றும், முன்னர்க் கம்பர் இராமபிரான் வாக்காக வாலிக்கு விடையிறுத்தற் பொருட்டுக் கூறும் காலனுற்றல் என்ற பாடலுக்கு நேர் எதிர்மறையான பொருள்களைக் கூறுவனவாகவும் இருக்கின்றன. ஆதலின், அவ் வைந்தனையும் சிந்தனைக்குரியன என்று வைத்து மேலே 726-வது, பொருள் தொடர்புள்ள பாடலில் புகுவோமாக.

வாலி, இராமபிரானை நோக்கி, "ஏ தேவர்களினும் தேவனே' எனது தம்பி, மிகச் சிறுவர்களாகிய எங்கள் இனத்துள்ளார் சிலருடன் கூடி. என்னைக் கொல்ல என்று நின்னை அழைத்து வந்து. மிகச் சிறந்த உதவியை எனக்குச் செய்துவிட்டனன். நீ தேவருக்கு தேவன்! அரசர்க்கும் அரசன். உன்னிடம் இவ் வுலக இன்பமும் அவ்வுலக இன்பமும் தரும் ஆற்றல்கள் உள்ளதால், அற்பமான இவ்வுலகத்து அரசை அவன் பெற்றுக் கொண்டு, மேலான வீட்டின்பத்தை எனக்கு அளிக்கச் செய்துவிட்டனன். இப்படி அவன் எனக்குச் செய்த உதவி பேருதவியாகும்" என்றனன்.

"மற்றினி யுதவி யுண்டோ?
வானினும் உயர்ந்த மானக்
கொற்றவ, நின்னை என்னைக்
கொல்லிய கொணர்ந்து தொல்லைச்
சிற்றினக் குரங்கி னோடுந்
தெரிவுறச் செய்த செய்கை

வெற்றர செய்தி யெம்பி
வீட்டரசு எனக்கு விட்டான்'' (வா. வ. 133)

வாலி மேலும் ஒன்று வேண்டுகின்ருன். "ஏ அழகனே! எனது தம்பி மதுவுண்டு மயக்கங் கொண்டு தவறுகள் ஏதே னும் இயற்றலாம். அப்படித் தவறி நடந்துவிடுவனேனும் என்மேல் எய்த வாளியென்னும் எமனே அவன்மேல் விடா திருக்க வேண்டுகின்றேன், என்றனன்.

" ஓவிய வுருவ நாயேன்
உளதொன்று பெறுவ துன்பால்
பூவியல் நறவம் மாந்தி
புத்திவேறு உற்ற போது
தீவினை யியற்று மேனும்
எம்பிமேல் சீறி யென்மேல்
ஏவிய வாளி யென்னும்
கூற்றினை யேவல் என்ருன்'' (வா. வ. 134)

வாலி, மேலும் "உன் தம்பிமார்கள், எனது தம்பியை இவன் தனது தமையனைக் கொன்ற தம்பியென ஏசுவார்கள். அப்படிச் செய்யாதிருக்கும்படி அவர்களுக்குச் சொல்ல வேண்டுகின்றேன்'', என்றனன். வாலி, இலக்குவன் கருத்தை உடனிருந்து அறிந்தவன் போல இப்படி இசைத்தனன். அவன் தனது இடத்திற்கு வந்த இராமபிரானுக்குத் தன்னல் ஒரு உதவியும் செய்ய முடியவில்லையே என வருந்தி ஞன். வாலி, இராமனை நோக்கி "அரசரேறே நான் உங்களுக்கு ஒரு உதவியும் செய்ய முடியாதெனினும் சற்று முன்னே உங்களோடு சந்திக்க நேர்ந்திருந்தால், எனது வாலால் அந்த இராவணனை இங்கு இழுத்துவரச் செய்திருப்பேன். பிறகு அவனே தேவியைப் பணிவோடும் கொண்டு வந்து கொடுக்க வும் செய்திருப்பேன். காலங் கடந்துவிட்டதே என்ன செய் வேன், இனி இங்குச் சற்று வல்லவனுகவுள்ளவன் இந்த அனுமன்தான். அவன் மிக நல்லவன். அவனை உங்கள் கரத்திலுள்ள கோதண்டம்போலப் பயன்படுத்தலாம். எனது தம்பியை உங்கள் தம்பியாகவே எண்ணுங்கள். பணி செய்யத் தக்கவர்களில் இவர்களுக்கு ஒப்பானவர்கள் வேறு

யாருமிலர். இவர்களால் அந்தத் தேவியைத் தேடி நாடி அடையுங்கள்'' என்றெல்லாம், தனக்கு இடர் செய்வித்தவர் என எண்ணுமல், மிகப் பெருமிதத்துடன் அனுமனுதியரை ஐயனுக்கு அறிமுகம் செய்து வைத்தனன் வாலி.

'' மற்றிலேன் எனினும் மாய
அரக்கனை வாலில் பற்றிக்
கொற்றவ நின்கண் தந்து
குரங்கினத் தொழிலுங் காட்டப்
பெற்றிலேன், கடந்த சொல்லிற்
பயனில பிறிதொன் றேனும்
உற்றது செய்கென் ருலும்
உரியனிவ் வனுமன் என்ருன்'' *(வா. வ. ப. 136)*

'' அனுமன் என்பவனை ஆழி
ஐயநின் ஆழிச் செங்கைத்
தனுவென நினைதி மற்றென்
தம்பிநின் தம்பி யாக
நினைதியோர் துணைவ ரின்னோர்
அனையவர் இல்லை ஈண்டவ்
வனிதையை நாடிக் கோடி
வானிலும் உயர்ந்த தோளாய்'' *(வா. வ. 137)*

இத்தனையும் இராமபிரானை நோக்கி வேண்டிக்கொண்ட வாலி, கரத்தை நீட்டித் தனது தம்பியை வருக என்று அழைத்துத் தழுவிக் கொண்டனன். சுக்கிரீவன் வாலியின் மார்பகத்தில் பெரிகிய இரத்த வெள்ளத்தைக் கண்டவுடன் சோர்ந்து விழுந்து அழுதுக் கொண்டிருந்தனன். ஆதலால் வாலி அழாதே எனத் தம்பியை ஆற்றினுன். ஆற்றி அவனுக்குச் சிறந்த அறிவுரைகளைக் கூறலாயினன்.

வாலி, தம்பியை மைந்தா என அழைத்தனன். எந்த நேரத்தில்? யாவர் முன்னர்? வாலியைக் கொல்லுவதற்கு ஒரு புதிய நமனைக் கண்டுபிடித்துவிட்டேன் எனக் கூத்தாடிய அனுமன் முன்னர். அவர்கள் வழிநின்று உயிரொழிய வாளி ஏவிய இராமன் முன்பு, ஆவி அகத்ததோ புறத்ததோ என ஐயுற நிற்கும் நேரத்திலே. என்னே வாலியின் ஒப்புரவு!

அப்படி அழைத்த வாலி, அவர்களால் அழைத்து வரப்பெற்ற இராமபிரான் சிறப்புகளை அவனுக்கே உணர்த்துகின்றனன்.

“தம்பி வேதங்கள் எதனை நாடுகின்றனவோ, தேவர்கள் எதனை நாடுகின்றனர்களோ, முனிவர்கள் எதனை நாடுகின்றனர்களோ, உலகெலாம் படைத்த பிரம்மதேவன் எதனை நாடுகின்றனனோ, அந்தப் பெரும் பொருளே, வில்லேந்தி, வாளிப்புட்டில் கட்டிக்கொண்டு, மனித உருவம் எடுத்து, இராமன் எனப் பெயர் கொண்டு நமது முன்னே வந்து நிற்கின்றது. ஏன் வந்தது தெரியுமா? உலகத்தில் தரும வழியை மக்களுக்கெல்லாம் கற்பித்து வற்புறுத்தவே வந்தது. நான் கூறும் இக் கருத்துகளில் ஒரு சிறிதும் சந்தேகப்படாதே, என்றனன் :

“மறைகளும் முனிவர் யாரும்
மலர்மிசை அயனும் மற்றைத்
துறைகளின் முடிவும் சொல்லும்
துணிபொருள் துணிவில் தூக்கி
அறைகழல் இராம னாகி
அறநெறி நிறுதத வந்தது
இறையொரு சங்கை யின்றி
யெண்ணுதி யெண்ணம் மிக்கோய்” (வா.வ. 139)

“தம்பி, நாள்தோறும் வஞ்சனையைச் செய்து வாழ்ந்து வந்த கொடியவர்களும், இவ் வீரன் வில்லடியுண்டபொழுதே, உருவம் மாறித் தெய்வ உருவும் எடுத்து மேம்படுகின்றார்கள் என்றால், இப் பெருந்தகைக்கு ஏவல் செய்யும் வாய்ப்புப் பெற்றவர் நற்கதி பெறுவதில் ஐயமேது?” என்றனன்.

இப்படிப் பலவற்றைத் தம்பி சுக்கிரீவனுக்கு உணர்த்தினன் வாலி. உணர்த்தியபின் எதிர்நிற்கும் பேரழகனாகிய இராமபிரானை நோககி, அரசருக்கெல்லாம் அரசனான பேரரசன் திருக்குமாரனே, என அழைத்தனன். அபபடி அழைத்துத் தமபி சுக்கிரீவனை இராமன் பக்கமாக அசைத்து விடுத்து, “அரசே. இவனை எங்கள் சுற்றத்தோடும் உனக்கு அடைக்கலமாகத் தருகிறேன், காத்தருள வேண்டும்” எனக்

கூறி, தனது உயர்ந்த கரங்களைத் தனது தலைமேல் குவித்து வணங்கினன். வாலியின் கரங்கள் தனது வாழ்க்கைக்காக எப்பொருளையும் யாரிடத்தும் வாங்காத கரங்கள், தன்னை வேண்டிய அமரருக்கும் ஆழியைக் கடைந்து அமுதத்தை அளித்த கரங்கள், பண்பாலும் உயர்ந்த கரமாயிற்று. "உயர் கரம் உச்சி வைத்தான்". இவ் வணக்கம் வாலி இராம பிரானை நோக்கி வணங்கும் இரண்டாவது வணக்கம். ஏந்தல் என்னை இக்கதிக்கு ஆளாக்கினன். எனினும் எனது கேள்விகளுக்கு விடையிறுக்கும் அல்லலை அண்ணலுக்குக் கொடுத்ததும் எனது தம்பியே, எங்கள் கூட்டமே எனின், பிழையெல்லாம் எங்களுடையதே எனச் சித்திரித்து உளம் ஒருமித்தபொழுது, முதல் முறை வணக்கஞ் செய்தனன் வாலி என்பதனையும் மறக்கக் கூடாது.

சுக்கிரீவனை அடைக்கலந் தந்து இராமபிரானை வணங்கிய வாலி, மறுபடியும் தனது தம்பியை நோக்கி, 'தம்பி! உனது மகனை அழை'' என்றனன். அவன் அண்ணன் மகனாகிய அங்கதனை அழைப்பித்தனன். தந்தைக்கு உற்ற பெருந் தொல்லையைக் கேட்ட அங்கதன், பெருஞ் செல்வத்தில் வளர்ந்த செம்மல். அவனுக்கு அதுவரை துன்பமென்பதே தெரியாமல் செழித்து வளர்ந்தவன். அவன் ஓடி வந்து அழுது துடித்துத் தந்தைமீது விழுந்தனன்.

அங்கதன், "எந்தையே எண்ணத்தாலோ செய்கையாலோ உலகத்தாரொருவருக்கும் ஒரு துயரும் செய்தறியாதோய், இப்படியாயினையே, உனது எதிரே கூற்றமும் வரத் துணிந் ததே'' என்று அழுதனன். மேலும் பார்வதிதேவியின் கணவனாகிய சிவபெருமானைத் தவிர வணங்கி அறியாத சிறப்பாளனே, உனது உதவியைப் பெற்ற அமரர்கள் யாவரும் நரை திரையின்றி வாழுகின்றனரே, அவர்களுக்கு அமுதத்தை அளித்த நீயிந்நிலை யாயினையே! உன்னியுணரும்பொழுது உன்னைவிடப் பெருங்கொடைஞர் ஒருவரும் உளரோ?" எனவுங் கூறி வருந்தினன்.

வாலி அங்கதனை வாரித் தழுவினன். "அழாதே; சிறுபிள்ளைத்தனத்தை விடு. நீயெனது அறிவுரைகளைக் கேட்பா

யல்லவா? நீ பிழையறியாத தந்தையே என்கின்றுய். அமர ருக்கு அமுதளித்த ஐயனே என்கின்றுயல்லவா? இப்படியான் செய்த நல்லறங்களாலே நான் இப்பொழுது வீடுபேறு அடை கின்றேன். எனக்கு இந்த விடுதலையைத் தந்துதவும் பெருந் தகை இந்த இராமனே'' என்றனன் வாலி.

"அங்கதா, உலகத்தில் தோன்றிய பொழுதே மறைவதற் காகிய திட்டமும் இடப்பட்டுள்ளது. எனது தவப்பயனுல் இந்த நல்ல முடிவு கிடைத்தது. எனது இறுதிக்கு நீ வருந் தாதே. உனது உயிர்க்கு உறுதியைத் தேடு. நீயும், இப் பெருந்தகைக்கு ஏவல் செய்து வாழுக. போருற்றுல், துணை நின்று போர் செய்'' என்பனவெல்லாம் இசைத்தனன் வாலி.

"தோன்றலும் இறத்தல் தானும்
துகளறத் துணிந்து நோக்கின்
மூன்றுல கத்தி ஞேர்க்கும்
மூலத்தே முடிந்த வன்றே?
யான்தவ முடைமை யால்இவ்
விறுதிவந் திசைந்தது யார்க்கும்
சான்றுஎன நின்ற வீரன்
தான்வந்து வீடு தந்தான்'' (வா.வ.ப. 154)

"பாலமை தவர்தி யென்சொல்
பற்றுதி யென்னின் ஐய
மேலொரு பொருளு மில்லா
மெய்ப்பொருள் வில்லுந் தாங்கிக்
கால்தரை தோய நின்று
கட்புலக் குற்ற தம்மா,
மால்தரும் பிறவி நோய்க்கு
மருந்தென வணங்கு மைந்த'' (வா.வ.ப. 155)

இப்படிப் பற்பல அறிவுரை அளித்த வாலி, தனது மகனை மறுபடியும் கட்டி அணைத்துக்கொண்டு, அரசருக்கு அரசனான அழகனை நோக்கி, "மெய்ப்பொருள் அறியார்க்கு விளங்காத மேன்மையனே, இவன் எனது மகன் அங்கதன். இவன் அரக்கரென்னும் பஞ்சைச் சுட்டொழிக்கும் நெருப் பனைய தோள்களை உடையவன். ஆற்றலே அன்றித் தொழி

விலும் சிந்தையிலும் தூய்மையானவன். இவனை உன்பால் கையடையாகக் கொள்ள வேண்டுகின்றன்'', என்று கூறி' அங்கதனை இராமபிரானுக்குக் காட்டினுன் வாலி. இங்குக் காணும் சொற்களை நுணுகி நோக்க வேண்டும். முன்னே தம்பியை அடைக்கலமாக்கினுன் வாலி. அப்பொழுது சுக்ரீவனை இராமன் எதிரே உந்தினுன் என வருகின்றது. ''உன் னடைக்கலம் என்று உந்தி உயர்கரம் உச்சி வைத்தான்' (வாலி வதை 138). இப்பொழுது ''கையடையாகு மென்றவ் விராமற்குக் காட்டுங் காலை'' என வருகின்றது. பாடல் முழுவதும் காண்போம்.

''நெய்யடை நெடுவேல் தானை
நீல்நிற நிருத ரென்னும்
துய்யடைக் கனலி யன்ன
தோற்றத்தன் தொழிலும் தூயன்
பொய்யுடை யுள்ளத் தோர்க்குப்
புலப்படாப் புலவ! மற்றுன்
கையடை யாகு மென்றவ்
விராமற்குக் காட்டுங் காலை''

வாலி தனது மார்பில் மகனை அணைத்தபடியே, இராம பிரானை நோக்கித் தனது மகனின் ஆற்றலையும் அன்புடைமையையும் தெரிவித்து, அணைத்தபடி உள்ள அங்கதனைச் சுட்டி, இவன் உனது அடைக்கலம் என்று கூறிக் காட்டினுன், என வருதலை எண்ணிப் பார்க்க வேண்டும். முன்னே தம்பியை இராமன் முன் நகர்த்தினன். ''உந்தி இப்பொழுது அங்கதனை அப்படி நகர்த்தினன்'' என வரவில்லை. காட்டினுன் என்றே கருகின்றது. இங்கே அங்கதனை இராமன்முன் உந்தினுன் வாலி எனப் பாட்டில் காட்டாத ஒரு பொருளைத் தாமாகக் கொண்டு, வாலி அடைக்கலம் என்று உந்திய வுடனே அங்கதன் சென்று இராமன் அடிகளை வணங்கினுன் என, ''தன்னடி தாழ்தலோடும்'' என அடுத்த பாட்டில் வரும் சொல்லுக்கு, அங்கதனைக் குறித்து, வாலி கையடை கொடுத்தான். அங்கதன் இராமன் அடிகளில் விழுந்தான். பெருமாள் கருணமூர்த்தியல்லவோ! அவர் அங்கதனை ஆளாகக் கொண்டதற்கு அடையாளமாகத் தமது உடைவாளை

அங்கதனுக்குக் கொடுத்து, இதைப் "பொறுத்துக் கொள்" என்று அனுக்கிரகம் செய்துவிட்டார். வாலிக்தும் மோட்சத்தைக் கொடுத்துவிட்டார். முடிந்தது வாலி மோட்சம் என்று சொல்மாரியாகப் பொழிந்து விடுகின்றார்கள். வாலி, மோட்சம் போனால் போகட்டும், இராமன் நிலை என்ன? ஏணி தன்னை அடைந்தவர்களையெல்லாம் மாடிக்கு ஏற்றிக் கொண்டு, தான் இருந்த இடத்தைவிட்டு அகலாது இருப்பது போல, இராமபிரான் கிட்கிந்தையிலேயே, அரண்மனையில் அல்ல, களத்திலேயே நிற்கின்றனன் என்பதா பொருள்?

"தன்னடி தாழ்த லோடும்
தாமரைச் செங்க ணானும்
பொன்உடை வாளை நீட்டி
நீயிது பொறுத்தி யென்றான்
என்னலும் உலகம் ஏழும்
ஏத்தின! இறந்து வாலி,
அந்நிலை துறந்து வானுக்
கப்புறத் துலக ணான்." (வா. வ. ப. 152)

"பொன்னுடை வாளையீந்து நீயிது பொறுத்தியென்றான்" என்றிருந்தால், இராமன் அங்கதனுக்கு வாள் அளித்தான் என்று பொருள் கொள்ளலாம். அப்படியில்லை 'வாளை நீட்டி' என்றுதான் உள்ளது.

"அரியணை யனுமன் தாங்க
அங்கதன் உடைவா ளேந்தப்
பரதன் வெண்குடை கவிக்க
இருவரும் கவரி வீச
விரைசெறி குழலி யோங்க
வெண்ணெயூர்ச் சடையன் தங்கள்
மரபுளோர் கொடுக்க வாங்கி
வசிட்டனே புனைந்தான் மௌலி. (திருமுடி 38)

இத் திருமுடி புனைந்த பாடலில் வரும் "அங்கதன் உடைவாளேந்த" என்ற குறிப்பை வைத்துக்கொண்டு இந்த 'பொன்னுடை வாளை நீட்டி" என வரும் செய்தியையும் ஒன்றுபடுத்தி, மற்று இச் செய்யுளில் வரும் சொற்பொருள்

கள் யாதொன்றையும் சிறிதும் சிந்திக்காமல், தாங்கள் இராமபிரானுக்குக் கம்பரைவிடச் சிறப்புச் செய்ய வல்லவர்கள் என ஒரு நினைவையுங் கொண்டு, இப்படிப் பொருள் செய்து விடுவது பொருத்தமல்ல.

இப்பொழுது கொடுத்த வாளை அப்பொழுது அங்கதன் ஏந்தினன் என்றால், பரதனுக்குக் குடை எப்பொழுது கொடுத்தது. இலக்குவ சத்துருக்கர்களுக்குச் சாமரம் எப்பொழுது கொடுத்தது, அனுமனுக்கு அவன் தாங்கும் அரியணையைத் தாங்கும் அதிகாரம் எப்பொழுது தந்தது என்ற வினக்களுக்கு எல்லாம் வரலாறுகள் தேட வந்து விடும். சிறப்புக் காலங்களில் அரசாங்க சாலைகளிலுள்ள கருவிகளை ஒவ்வொரு தொண்டர்கள் கைப்பற்றிக் கொண்டு ஒவ்வொரு தொண்டில் ஈடுபடுகின்றார்கள். இதற்கு ஓர் ஏது வேண்டுமா?

உடை வாள் என்பது, வீரர்களிடம் எக்காலத்திலும் அகலாதிருக்கும் படை. அது உடையை வரித்துக் கட்டும் கச்சையில் செருகிக்கொள்வது. உடையில் தரித்துக் கொள்ள அளவாக இருக்க வேண்டுமாதலால் அதற்கு உடைவாள் என்பதனுடன் அதன் வடிவத்தையுங் குறிக்கத் தக்க ஒரு பெயருண்டு. அது, குற்றுடைவாள் என்பதே. மகளிருக்கு மங்கல நாண் எப்படியோ, அப்படியுள்ள சிறப்பினைப் பெறுவது அரசரிடத்து அவ் வாட்படை. வணங்கா முடிசேகரன், என்று துரியோதனனைச் சொல்லுவார்கள். அவன் வீடுமனாதிய பெரியவர்களை வணங்கவில்லையாயினும், அவனது மாமனாகிய சகுனியை அல்லும் பகலும் வணங்கிக்கொண்டுதான் இருந்தனன். உள்ளபடி வணங்காமுடிசேகரன், இரணியன் ஒருவனே. இரணியன்முன் அவன் அறைந்த தூணிடத்தே நரசிங்கம் தோன்றிவிட்டது. அதனையும் அவன் எதிர்த்துப் போரிட முனைந்தனன். அப்பொழுது பிரகலாதன், தனது தந்தையாகிய இரணியனை நோக்கி, "எதிர்க்காதே, வணங்கி வழிபடு, இத் தெய்வம் உன்னை மன்னித்துவிடும். இன்னும் நீடு வாழ்ந்திருக்கலாம்"எனப் புத்தி புகட்டினன். இரணியன், நான் தலை வணங்குவது என்பது எக்காலத்திலும் எவ்விடத்

திலும் இல்லை இந்த நரசிங்கத்தை வெட்டி வீழ்த்தியபின் என் வாளை வணங்குவேன். நானு என் பகைவனை வணங்கு வேன்'' எனக் கூறினன்.

> ''கேளிது நீயுங் காணக்
> கிளர்ந்தகோ ளரியின் கேழில்
> தோளொடு தாளும் நீக்கி
> நின்னையுந் துணித்துப் பின்னென்
> வாளினைத் தொழுவ தல்லால்
> வணங்குதல் மகளி ரூடல்
> நாளினு முளதோ வென்ன
> அண்டங்கள் வெடிக்க நக்கான்'' (இ. வ. ப 146)

இந்த வணக்கமறியாத இரணியனும் வணக்கத்திற்குரிய தன் சென்னியினுஞ் சிறந்ததொரு சிறப்பு வாட்படைக்கு உண்டெனக் கூறினன் என்றால், மன்னவர் வாளை எவ்வளவு சிறப்புடையதாகக் கருதினுர்கள் என்பது விளங்கும்.

இராம இலக்குமர் காலத்தில் தங்கிநின்ற காலத்தில் தத்தம் உடைவாளொடு வைகினர் என்பதனுக்குச் சான்று கள் உள. சூர்ப்பனகையை இளவல் ஒருத்தது அந்த வாளி னுல்தான். கவந்தன் இருதோள்களையும் தனித்தனியாக இராம இலக்குவரிருவரும் தத்தமது இரு வாள்களைக் கொண்டு துணிந்தனர் என்பதனுல்,இராமபிரானிடத்து ஒரு வாளிருந்தது என்பது தெரிகின்றது. இந்த வாள் இராவண னைப் பொருத காலத்திலும் இராமபிரானிடத்திலேயே இருந்த தென்பது, இராவணன்மேல் செல்ல இராமன் போர்க்கோலங் கொண்டபெழுது குறிக்கப்படுகின்றது. கடை நாட் போருக்குப் பெரும் ஆற்றலோடு தேரேறி வருகின்முன் இராவணன் எனத் தேவரும் வானரரும் பயந்தார்கள் அவர்கள் பயந் தீர்க்க இராமன் புறப்படுகின்றனன். அப் புறப் பாட்டிற்காகச் செய்த போர்க் கோலத்தில், உடை வாள் விசிக்கின்றனன் இராமன். இராமபிரான் திருக் கரங்கள் யானையின் துதிக்கை யனையவாம். அவன் இடையில் கட்டும் வாட் படையின் பற்கள் எமனுடைய பற்களையனை யனவாம். சானகியார் துன்பத்திற்கும் தேவர்களை அலைக்

கும் அசுரர் அழிம்பிற்கும் முடிவு கட்டுவதுபோலிருந்தது இராமன் வாட்படையை இடையில் கட்டியது.

"கடக்களிறு எனத்தகைய
கையனெரு காலன்
விடக்குஎயிறு எனப்பிறழும்
வாள்வலன் விசித்தான்
மடக்கொடி துயர்க்கும்
நெடுவானில் உயர்வோர்தம்
இடர்க்கடலினுக்கும் முடிவு
இன்றென விசித்தான்"

— யுத்த காண்டம். தேரேறு. 36

இப்படி இராமபிரானிடத்து வாள் நீங்காமல் இராமபிரானிடத்திலேயே உள்ளதென்ருல் அண்ணல் அங்கதனுக்கு அளித்த வாள் எந்த வாள்? புட்டிலில் பற்பல கணைகள் இருப்பது போல, இடுப்பிலும் பற்பல வாட்படைகளை வைத்திருக்கின்றனர் மன்னர்கள்; அதில் ஒன்றை அன்றளித்தனன் எனக் கொள்ளுவதா?

வழக்காடும் இடம் மன்றம். மன்றம் என்பது பழைய காலத்தில் படர்ந்து விரிந்த மரத்தடி என்பது பொருள். "வாய்மை வெளிவாசம் பொதுவும் மன்றம்" என்பது பிங்கல நிகண்டு. "மன்றம் வெளியும் பொதுவும் வாய்மையும்" என்பது பொதிகை நிகண்டு. இப்பொருள்களால் வெட்ட வெளியான இடம், மன்றம் என்பது விளங்கும். அவ்வெளியிடத்தில் ஒரு சமயத்தவர், ஒரு சாதியினர், ஒரு நாட்டவர், ஒரு வீட்டவர் மாத்திரம் இருந்து பேசி அக் குறிப்பிட்ட கூட்டம் ஒத்துக்கொண்டால் போதாது. உலகமனைத்திலும் உள்ள மக்களில் அறிவுடையவர்கள் அனைவரும் ஒப்ப முடியும் முடிவுகளே மன்றங்களால் ஒப்புக்கொள்ளமுடியும்; அதனுல் ஒருவரை மகிழ்விக்க முடிவு காணுதல் என்றென்றும் நீங்கா வழக்காகவே நிகழும். இவற்றையெல்லாம் உட்கொண்டு நிகழ்ந்தன வற்றைத் திரும்பிப் பார்ப்போம்.

பாரத நாட்டில், பாற்கடல் கடைந்த கதை மிகவும் தொன்மையானது. அக் கதையோடு தொடர்பு படுத்தும்

வாலியும் மிகப் பழைமை யானவன் என்பது தெளிவு. இராவணன் தவஞ்செய்து வரம் பெற்றுத் திக்கு விஜயம் செய்த பொழுது, வாலியின் வாலாற் சிக்குண்டனன் என்பதனால், இராவணன் வாழ்க்கைத் தொடக்கத்திலேயே சிறப்புற்றிருந்தவன் வாலி என்பதும் தெரிகின்றது. அவ்வளவு அளப்பரும் ஆண்டுகள் வாழ்ந்த அவன், தனக்கு நெடுங் காலம் இளமையினனாகிய இராமபிரானிடத்தில் அளப்பரும் பற்றுடையவனாக இருந்தல், அவனது வாழ்நாட்களில் இராமனையனைய பண்புடையவர் இல்லை என்பதனால்தான் என்பதனையும் அறிகின்றோம். இராமசரிதத்தைக் கேட்டு அவ்வளவு பற்றுடையனாயினன் வாலி. அவனால் மதிக்கப் பெறும் இராமபிரான் நேராக வாலியினுடைய பெருங் குணங்களை மிகச் சிறு நேரத்தில் எதிருக்கெதிராக நின்று கண்கூடாகக் கண்டுணர்ந்தனன். பல்லாயிரம் யோசனை தூரத்தில் வாழும் ஒருவனை, அவனை நன்கறிந்த மற்றொருவன் ஒரு நேரத்தில் தீயவன் என்று எண்ணுவானாயின், அதே நேரத்தில் இவனை அவனுந் தீயவனென்று மதிப்பன். அப்படியே இவன் அவனை மிக நல்லவன் என்று மதிப்பனென்றால் அவனும் இவனை அப்படியே நல்லவனாகமதிப்பன். இது மனத்திற்குள்ளவன்மை எனப் பெரியவர்கள் உரைப்பர். இக் கருத்து திருக்குறளாலும் வலியுறுத்தப்படுகின்றது. "புணர்ச்சி பழகுதல்வேண்டா வுணர்ச்சிதான் நட்பாங் கிழமை தரும்" இந்த உலகியல்உண்மைகள் இராமபிரானுக்கு மாத்திரம் புறம்பானதா? என எண்ணிப் பார்க்கவேண்டும்.

வாலிமேல் கணை தொடுக்கச் செய்தான் அவன் தம்பி. அந்தத் தம்பியே அண்ணன் அடிபட்டு வீழ்ந்தவுடன் மனந் தாளாமல் தானும் வீழ்ந்து அழுகின்றான். அந்த வாலி இராமனைச் சுடச்சுடக் கேட்கும்பொழுதெல்லாம் சுக்கிரீவன் உணர்வோடு இருந்தனனா? அல்லது பழைய அண்ணன் மடிவதற்காக மயங்கிப் புதிய அண்ணன் படும் துன்பம் ஒன்றும் தோன்றாது நின்றானா? என்பதும் தெரியவில்லை இராவணன் வதைக்கு இப்பொழுது தோதில்லை. வாலி வதைதான் முன்னதாக ஆக வேண்டுமென வடித்தெடுத்துக் காரணங் காட்டிய அனுமன்தான் என்ன செய்கின்றான்

என்பதும் தெரியவில்லை. தன்னைக் சொல்லச் செய்த தம்பியை என்ன பிழைசெய்தாலும் கொல்லாதிருக்க வேண்டுமென்று வரங் கேட்கின்றனன் மரணவாயில் தவிக்கின்ற வாலி. இதை நாம் இராமாயணக் காதையில் படிக்கின்றோம். இத்தகைய ஒரு பெருந்தகையை நமது வாழநாளிலேயே உலகத்தோடு சேர்ந்து கண்டிக்கின்றோம். அவர் யாரென்று யாரும் கேட்கமாட்டார்கள். அண்மையில் பிறந்து வளர்ந்த இளஞ்செல்வங்கள் கேட்டால் அவர்களுக்காகத் தெரிவிக்கின்றேன். பாரத நாட்டில் பண்டைய பெரியவர்கள் இயல்பைப் புதுப்பிக்க வந்த மாஞானி காந்தியடிகளார்தான், தன்னைச் சுட்டுக் கொன்றவனையும் கொல்ல நினைக்காத குணப்பெருங்குன்றம். நாம் இப்படியின்று கண்ணாரக் கண்ட இப் பெருந்தகையனையவன் வாலியென அறிகின்றோம். தன்னை வதைக்கச் செய்தவனை வாழ்விக்க வேண்டிய வாலியை அவன் தம்பிக்குத் துணைசெய்யத் தனி வில்லேந்திய தயாபரன் நேரிற்கண்டும் நெஞ்சுருகாது நின்றிருக்க எப்படி முடியும்? அன்பர்கள் பாவனை செய்து வழிபட வைத்திருக்கும் ஒரு கற்சிலையில் முன்னே ஒரு இராமபிரான் உருவத்தைத் தீட்டிய ஓவியத்தின் முன்னே, வாலி நின்று இப்படிப் பேசியுருதவனுயின், அந்தப் படத்திலுள்ள இராமன் கல்லிலுள்ள இராமன் வடிவமும் வாலியோடு ஒக்கக் கண்ணீர் விட்டு அழுமென்றால், வள்ளல் இராமபிரான் உயிரோடு அவன் முன்னே நின்று அவன் வேதனையை விளைவு செய்தான், அவன் வேதனைக்கு வித்திட்ட அவன் தம்பியும் தன்னை விட்டு அவன் அண்ணனொடு கூடியழும்பொழுதும் எப்படித்தான் அழாமலிருந்திருப்பான்?

இவற்றையெல்லாம் ஒருசிறிதும் எண்ணாமல், தங்கள் மனங்களையும் கரையாக் கருங்கற்களாக்கிக் கொண்டு, இராமபிரான் உள்ளத்தை அரத்திறந்தேயா ஒரு வைரக் குன்றமாக்கிவிட்டு வாலி மகனை அடைக்கலம் என்று தள்ளினன். அவன் சென்று அண்ணலைப் பணிந்தான். அந்த இராமபிரான் வாலி சொல்லிக்கொண்ட பற்பல வேண்டு-கோள்களில் ஒன்றிற்கும் ஒரு சலுகைச் சொல்லுஞ் சொல்லாமல், வாலியின் கடைசி வினவிற்கு மூடிக்கொண்ட தமது

வாயை இப்பொழுது திறந்தார். யாரோடு பேச? உயிர் விடப் போகின்ற வாலியொடு ஒரு வார்த்தை சொல்லஅல்ல. அவன் மகனேடு பேச வாயைத் திறந்து தன் வாளை நீட்டி, நீ இதனைப் பொறுத்துக்கொள் என்று கூறி அவனை அடிமை கொள்ள ஒத்துக்கொண்ட தமது பெருமிதத்தை வெளிப் படுத்தி அருளினர். இவர் அருள்முகத்தைக் கண்டுகளித்து மகிழ்ந்து விண்ணுலகம் நண்ணினன் வாலி, என எப்படித் தான் இயம்பி முடிக்கின்றனரோ தெரியவில்லை.

இம் முடிவு காணும் கடைசிப் பாடலில், ''என்றலும் உலக மெல்லாம் ஏத்தின'' என வருகின்றது. ''ஈதலும்'' அல்ல, என்றலும், இந்த என்றலென்ற சொல் ஈதலென்று எவ்விதமாக மாறுமோ தெரியவில்லை. அப்படி மாறுபட ஒரு புதிய இலக்கணங் கண்டார்களேனும் இந்தச் செயலுக்கு உலகமெல்லாம் ஏத்தத்தக்க சிறப்பென்ன இருக்கின்றது? அப்பனைக் காணமல் கேட்காமல் கொன்று குவித்துவிட்டு, அவன் மகனை ஆளடிமையாகத் தர, அந்த அடிமைத்தனத்தை ஏற்றுக்கொண்ட வள்ளன்மைக்காக இராமபிரானை மகிழ்ந்து உலகமெல்லாம் கொண்டாடினவா? அல்லது தன்னைக் கொன்று குவித்த இராமனுக்குத் தனது மகனை அடிமை யாகக் கொடுத்த வாலியின் வள்ளன்மையைப் புகழ்ந்து உலகமெல்லாம் போற்றினவா?

தனது கடைசி வினுவிற்கு ஒரு விடையுங் கூருதிருக்கவும், இளவல் இசைத்த விடையும் ஒரு பகுதிக்காகி ஒரு பகுதி விடையின்றி நிற்கவும், எதிரவர் குற்றம் இருந்து போகட்டும் என்று தனது குற்றத்தைப் பொறுத்துக்கொள்ள வேண்டு மென்று வேண்டிய வாலி ஒரு முறை தலை வணங்கினன். முன்னமே இராமனிடத்தில் தானே அடைக்கலம் புகுந்து விட்டு, இராமனேடு ஏகபோகமாக உறவாடிக்கொண்டிருக் கும் தனது தம்பி சுக்கிரீவனைப் பின்னுமொருதரம் தான் அடைக்கலமாகத் தருபவனுகி, ''உன் கையில் பிள்ளை உனக்கே அடைக்கலம்'' என்பது போல அடைக்கலங் கோரிய பொழுது, ஒருமுறை தலை வணங்கினன் வாலி. இந்த இரு முறை வேண்டுகோள்களும் வாலியின் பெருமிதமான வேண்டுகோள்களே. வாலிக்கு உலக மக்களும் ஒத்துக்

கொள்ளத்தக்கதொரு வேண்டுகோள், தனது மகனாகிய அங்கதனை இராமனுக்கு அடைக்கலமாக்குவதே யாகும். அதற்கெல்லாம் அடிவணங்கிக் கேட்டுக்கொண்ட வாலி, இந்த இன்றியமையா வேண்டுகோளுக்கு அடி வணங்காம லிருப்பானா? அன்றியும் இராமபிரானை மும்மூர்த்திகளுள் ஒன்றான ஒருவன் எனத் தம்பிக்கும், தனது மகனுக்கும் அறிமுகம் செய்யும் வாலி, அம் மூர்த்தி எதிரே வந்து நிற்கின்றபொழுது, தனது உயிரை நீத்து உம்பர் உலகம் புகும் ஒருவன், வணக்கம் செய்யாமல் போவானா? அங்கதன் வணங்கினான்; அவன் பின்னே மரம் போலே நின்ற வண்ணம் இருந்தான் வாலியெனப் பொருள் கண்டுவிட்டு, இராமபிரானது பெருந்தன்மையான முடிவைத் தங்கள் பேதைமைத் தனத்தில் மூழ்கடித்து விடுவதா?

இத்தனை ஐயப்பாடுகளையும் உள்ளத்தில் கொண்டு, உசாவுகின்ற பொழுது, இந்த இராமபிரான் செய்த செயல், ஏதோ ஒரு பெருஞ் செயலாக இருக்க வேண்டும். அச்செயல் உலகமெல்லாம் மதிக்குஞ் செயல் எனத் தோன்றுகின்ற தல்லவா ? அச் செயல் யாதெனக் காண்போம்.

வாலியின் வதையைக் குறித்து இராமபிரான், நிகழ்ச்சிக் குப் பின்னர் பெரிதும் கவலையுற்றிருந்தனன். அச் செம்மல் வாலியின் குணங்களை என்றும் மறந்துவிடவில்லை. வாலியின் மகனுக்கு மிகுதியான உரிமையை வழங்கி வந்தனன். அங்க தனும், அவன் தாயும் இராமபிரானைத் தங்கள் குடிக்குத் தீங்கு செய்ததாக எண்ணியதே கிடையாது. மற்றவர்களின் தூண்டுதலால் பெருந்தகை தேவியைப் பறிகொடுத்திருந்த துன்பச் சூழலால், விதி வசத்தால், தங்கள் தலைவனிடத்து ஐயப்படவிருந்த ஒரே ஒரு குற்றச் சாட்டினால், வாலிக்குப் பெருந்துன்பம் வந்தது என நினைத்தனரே யன்றி, இராமன் செய்தனனென அவர்கள் நினைத்ததே இல்லை. இவற்றிற் குள்ள வரலாற்றிடங்களையும் அவற்றில் கல்லுருகக் கம்பர் வழங்கியிருக்கும் உருக்கமிக்க பாக்களையும் பார்த்துவிட்டு, "தன்னடி தாழ்தலோடும்" என்ற இடத்திற்கு வருவோம்.

இராமன் சுக்கிரீவனுக்குப் புத்திமதி புகட்டும் பொழுது "மாந்தருக்குப் பெண்களாலேதான் மரணமும் பழியும் வருவது, பெண்பொருட்டால் மரணம் வந்தது என்பதனை உனது அண்ணனாகிய வாலிக்கு வந்த துன்பத்தால் அறிவாயாக. பழி வரும் என்பதனையும், அவர்களால் அல்லல் வரும் என்பதனையும், எங்களுக்கு வந்த அல்லலாலும் பழியாலும் தெரிந்து கொள்ளுக" எனக் கூறினன். தமக்கு வந்த அல்லல் தேவியைத் தேடுவது; பழி அத்தேடலுக்கு இடையிலே வாலியைக் கொன்றதனால் நேர்ந்தது.

"மங்கையர் பொருட்டால் எய்தும்
மாந்தர்க் கு மரணம் என்றல்
சங்கையின் றுணர் தி வாலி
செய்கையாற் சாலு இன்னும்
அங்கவர் திறத்தி னாலே
அல்லலும் பழியு மாதல்
எங்களிற் காண்டி யன்றே
யிதற்குவேறுஏயாதோ —அரசியல். ப. 35

அங்கதன் இராமபிரான் அடிகளில் விழுந்து வணங்குகின்றான், எப்போது? சுக்ரீவன் பட்டந்தரித்து இராமனை வணங்கியவுடன், இராமபிரான் அவனை வாழ்த்தி 'நீ மிகவும் சீலமுடையவன், மேலும் உன் பண்புகள் உயரும், உனது தந்தை வாலி சொல்லியபடி, இச் சிறிய தந்தையை உனது தந்தை எனக் கொண்டு வாழுதி' என வாழ்த்தினன்.

"வாலி காதலனும் ஆண்டு
மலரடி வணங் கினானை
நீலமா மேகமன்ன
நெடியவன் அருளின் நோக்கி
சீலம்நீ யுடையை யாதல்
இவன் சிறு தாதை யென்னு
மூலமே தந்த நுந்தை
யாமென முறையில் நிற்றி —அரசியல். ப. 26.

அனுமன் தேவியை நாடி வருவதற்காக அனுப்பப்பட்ட தூதனாளன். அனுமனுக்குத் தேவிக்குச் சொல்ல வேண்டிய

சொற்களையும் அடையாளங்களையுமே அண்ணல் சொல்லி யனுப்பினன். இராவணனைக் கண்டதும் பேசியதும் அனும னுகச் செய்த செயல்கள். இராமபிரான் தூதுவன் என்று அனுப்பும் பெருமையை அங்கதனுக்கே அளித்தனன், அனு மன் எவ்வளவு வல்லவனுயினும் நல்லவனுயினும், வானர அரசியலில் சுக்ரீவன் பேரரசன். அங்கதன் இளவரசன், அனு மன் அமைச்சன் என்ற வரிசையிலேயே அங்கதனுக்கு உரிமை யளித்து வைகினன் வள்ளல். "பொது நோக்கான் மன்னன் வரிசையால் நோக்கின் அதுநோக்கி வாழ்வார் பலர்" என்ற அரசவொழுக்கும் அங்கதனுக்கு அளிக்கப்பட்டிருந்தது.

அங்கதன், தூதுக் காலத்தில், இத்தூது வேண்டுமா வேண்டாமா என ஒரு விவாதம் நடந்தது. இளவல் பல காரணங்களைக் கூறி வேண்டவே வேண்டாம் எனக் கூறினன். அப்பொழுது அண்ணல் புன்முறுவல் செய்து இராவணன் செய்தவை பல தீங்குகளாலுலும் அரசநீதியில் நாம் தவறலாமா ?

"அயிர்த் திலென் முடிவும:ஃதே யாயினும் அறிஞர் ஆய்ந்த
நயத்துறை நூலின் நீதிதாம் துறந்து அமைதல் நன்றோ"

—8 அ. தூது படலம்

என முறைசொல்லி, இலக்குவன் தடையை நீக்கி, அங்க தனைத் தூது செல்லப் பணிக்கின்றனன் அண்ணல் கட்டளை கேட்டுப் பணிந்தனன் அங்கதன். இராமன், 'நீ இராவணனை அணுகி அவன் வஞ்சித்த தேவியை விட்டு உயிர்பெற்று வாழு கின்றனனு, அல்லது போரில் கலந்து தலை பத்தும் சிதறப் போகின்றனனு' எனக் கேட்டு வருக என்றனன்.

"என்னவற் குரைப்ப தென்ன
ஏந்திழை யாளை விட்டுத்
தன்னுயிர் பெறுதல் நன்றோ
அன்றெனின் தலைகள் பத்தும்
சின்னபின் னங்க ளாகச்
செருக்களஞ் சேர்தல் நன்றோ
சொன்னவை யிரண்டி னொன்றே
துணிகெனச் சொல்லி டென்றான்"

—அங்கதன் தூது, 11.

இராவணனிடத்தில் இவ்வளவு இரக்கங்காட்டி, அரசநெறி யெனத் தம்பி கருத்தையும் மறுத்துரைக்கும் ஏந்தல் யார்? ஒரு சாரார் வழக்கைக் கேட்டு, மறுதலையானை யழைத்து நீ என்ன சொல்லுகின்றனை என்று கேளாமலே அவனை அழித்த ஆண்மையன். தூது போகின்றவன் யார்? அண்ணல் இந்த இரக்கத்தைக் காட்டாமையினுல் தந்தையை இழந்த தனை யனுகிய அங்கதன்.

இங்கே, அன்று அப்படிச் செய்தார், இன்று இப்படிச் செய் கின்றனரே என அங்கதனுள்ளத்திலும் அருவருப்பு இல்லை. இவன் தந்தைக்கு இரக்கங் காட்டாத யான் இவனையே ஏவி மற்ருெருவருக்கு மன்னிப்பு அளிக்கவேண்டுமா எனக் கேள்வி கேட்கின்ருேமே, இவன் ஓர் இளங்குழந்தையல்ல, பேதையு மல்லன். அப்படியிருக்க இவன் நம்மை என்னதான் எண்ணு வன் என இராமபிரானுக்கும் உள்ளம் சுடவில்லை. "தன் னெஞ்சறிவது பொய்யற்க பொய்த்தபின் தன்னெஞ்சே தன்னைச் சுடும்" காரணம் என்ன? வாலிக்கு, முன்னே இரக் கங் காட்ட முடியாத சூழ்நிலை வந்ததென்பது அனைவரும் அறிந்த செய்தி. ஆனுல் வள்ளல் பின்னர் அந்தக் குறை தீரத் தக்க ஒன்றைச் செய்து முடித்திருக்கவேண்டும். அத் தகுதியுள்ள செயலினுல் குறை தீர்த்து தங்களுக்குள் மனக் குறை நீங்கி மன மகிழ்ச்சியுண்டாகியிருத்தல் வேண்டும் என்பது எளிதாக விளங்குகின்றதல்லவா? அவனைத் தேடு வோம்.

தனது உள்ளத்தில் ஒரு களங்கமும் இன்றி வள்ளல்தான் அங்கதனைத் தூதுவிட்டனனே. அந்த அங்கதன்தான் எப் படிப் பேசுகின்றனன்? மன்னவர் பெருமானைப்பற்றி அவன் பேசுவது ஒரு மாசற்ற பேச்சல்லவா? அங்கதன் அச்சம் இன்றி இராவணனை அணுகினுன். அவன் நீ யாரென் றனன்.

"பூத நாயகன் நீர்சூழ்ந்த
புவிக்கு நாயகன் இப்பூமேல்
சீதை நாயகன் வேறுள்ள
தெய்வ நாயகன் நீசெப்பும்

வேத நாயகன் மேல்நின்ற
விதிக்கு நாயகன் தான்விட்ட
தூதன் யான்; பணித்த மாற்றம்
சொல்லிய வந்தேன் என்ருன்''

—அங்கதன் தூது. 21

இராமபிரான் அங்கதனை நீ என்னைத் தலையெடுக்கச் செய்தனையெனப் பாராட்டினுன் :

இலக்குவன், நெடும்போர் செய்து இந்திரஜித்தினை வென்றனன். இளவல் வாளியால் அவன் தலை வெட்டுண்டு விழுந்தது. அப்பொழுது இளவலைத் தோளின்மேல் தாங்கி நின்ற அங்கதன் இந்திரஜித்தின் சிரத்தைக் கையில் ஏந்தி வந்து இராமபிரான் அடிகளின்பால் வைத்தனன். அச்செயலை மெச்சி அங்கதனை அரசக் கோமான் 'ஈசன் நீ' என அழைத்தனன். யாருக்கு ஈசன் ? வானரங்களுக்கு. வானரங்களுக்கு—ஈசன், வான—ரேசன். அண்ணல் அப்படியழைத்து ''அப்பா நீ அரக்கன் தலையை எடுத்த தன்னிமித்தத்தினுல் இனி நான் தலையெடுத்து விட்டேன். ஆளுகைக்குள்ள குடையும் எடுப்பேன்'' எனக் கூறிக் குதூகலித்தனன்.

''தென்றலை யாழிசூழ்ந்த
திண்மதில் இலங்கை காக்கும்
புன்தலைக் கள்வன் பெற்ற
புதல்வனை யிளவல் வீழ்த்த
வன்தலை யெடுத்து நீமுன்
வருதலால் வான ரேசா
என்தலை யெடிக்க லாலேன்
இனிக்குடை யெடுப்பன் என்ருன்''

—இந். வதை. 62.

இராமன் வாலியை வதைத்ததற்கு அழுதனன் :

மேகநாதன் பிரமாத்திரத்தால் குரங்கினத் தலைவர்களையும், குரங்கினம் முற்றும் இளவல் தன்னையும் ஈடழித்து விட்டனன். இராமபிரான் பாசறையிலிருந்து படுகளம்

புகுந்து அக்கொடுமையைக் கண்ணுற்றுக் கலங்கினன். ஆற்ருது அழுகின்றனன். "நான் ஒரு குடியின் முன்னவனைக் கொன்றேன். பின்னவனை அரசனுக்கினேன். அப் பெருங் குறையால் அவர்கள் இனத்தையே இன்று அழித்துவிட்டேன். எனது கையால் வில்லும் பிடித்துக்கொண்டு உதவிக்கு வந்த ஒருவருமின்றி, அனைவரையும் பிணமாகக் காண்கின்றேன். நான் எனது பயனற்ற உடலைச் சுமந்து கிடக்கின்றேன் என வருந்தினன்.

"தமையனைக் கொன்று
தம்பிக்கு வானரத் தலைமை
அமைய நல்கினேன் அனைத்தையும்
கொல்வதற்கமைந்தேன்
கமை பிடித்துளேன் உங்களை
யித்துணை கட்டேன்
சுமை உடற் பொறை
சுமக்க வந்தேன்எனச் சொன்னுன்"

இராமபிரான் எதிரியின் பிரமாத்திரத்தால் அழிந்த பிணக் குவியல்களுக்கு இடையில் சென்று அங்கதன் உடலத்தைக் கண்டனன். அவனது கண்கள் உயிரின்றியும் தீப்பறக்கும் வீர நிலையிலிருந்தன. அந்நிலை கண்டு அண்ணல் ஆற்ருெணுத் துயரம் அடைந்தனன். நான் ஒரு சுமையாளாயினேன்; வில்லை நான் தக்கமுறையில் பயன்படுத்தவில்லை; அன்பர்களை அழிக்கவும், வன்பர்கள் எதிரில் வாளாவிருக்கவும் பயன்படுத்துகின்றேன். ஆதலால், நான் வில் சுமக்கும் சுமையாளாகத் திரிகின்றேன். படையற்ற வாலியைப் படைகொண்டு ஒழித்தழித்துப் பழியும் சுமக்கின்றேன். வழி முறை விட்டுப் பழிச்சுமை சுமக்கும் என்னைப் பார்த்திருந்தும், ஆதியில் என்பால் கொண்ட அன்புமாருதவனுயினன் வாலி. அவன் தனது மகனை யிந்த வீர திலகனை எனக்குக் கையடையாக்கினன்; நான் கையடைப் பொருளை இவ்வளவு அழகாகக் காத்துவிட்டேன் என விம்மி விம்மி அழுதனன்.

"விடைக்குலங்களின் நடுவணேர்
விடை கிடைந் தென்னக்

கடைக்கண் தீயுக அங்கதக்
களிற் றினேக் கண்டான்
படைக் கலங்களைச் சுமக்கின்ற
பதகனேன் பழி பார்த்து
அடைக் கலப்பொருள் காத்தவா
அழகி தென்று அழுதான்'' —பிர. 196

இராமபிரான் எனது இல்லறமும் கெட்டது வில்லறமும் கெட்டது, இத் தீமைகள் தீரத் தவம்புரிவேன் என்றனன்:

வாலி செயல் முடிந்து சுக்கிரீவனுக்கு இளவலால் பட்டங் கட்டுவித்து, அவன் வந்து அடியில் விழ ஆசி கூறிய பின்னர், அவன் தனது நகரத்திற்கு வரவேண்டுமென இராமபிரானை வேண்டினன். அதற்கு வள்ளல் நான்கு பதினுன்கு வருடங் களில் எந்த நகரத்திலும் இருத்தல் முறையல்ல, அன்றியும் நான் இருவித குறையாடுகளை உடையவனுயினேன். மனேவி யைப் பிரிந்தேன்; துயருறச் செய்தேன். என்னுல் எனது வீர லில்லும் நாசமடைந்து விட்டது. இந்த இரண்டு குறை களையும் போக்கிக்கொள்ள வேண்டியவனுக இருக்கின்றேன்.

தவம் புரிய உகந்த இடம் இந்த மதங்காச்சிரமமே. கார் காலங் கழித்து நீ படைகளொடும் வருக. அது வரை நான் இங்கு வைகுகின்றேன் எனச் சுக்கிரீவனுக்குச் சொல்லி யனுப்பினுன்.

''இல்லறந் துறந்தி லாதோர்
இயற்கையை யிழந்து போரில்
வில்லறம் துறந்து வாழ்வேற்கு
இன்னன மேன்மை யில்லாச்
சில்லறம் புரிந்து நின்ற
தீமைகள் தீரு மாறு
நல்லறம் புரிந்து நோன்பில்
நவையற நோற்பல் என்றுன்'' —அரசியல். 43

வாலி வள்ளலொடு ஒரு மனப்பட்டவன், அவன் அப்படி உண்டவுடன் இராமபிரான்பால் இரக்கங்கொண்டு எண்ணிய

எண்ணம் இது. அது அப்படியே அல்லல் ஒருவாறு நீங்கி அமைந்திருந்த நேரத்தில், இராமபிரான் உள்ளத்திலும் உதித்தது எனக் கொள்ளக் கிடக்கின்றது.

"இல்லறந் துறந்த நம்பி
யெம்மனோர் பொருட்டால் தங்கள்
வில்ல றந்துறந்த வீரன்
தோன்றலால் வேத நன்னூல்
சொல்லறம் துறந்திலத
சூரிய மரபு தங்கள்
நல்லறந் துறந்தது என்ன
நகைவர நாண் உட்கொண்டேன்" —வா. வ, 80

வாலி வழக்கின் மாட்சிமிக்க முடிவு :

இராமபிரானுக்கு வாலியை வதைத்த பிறகு தோன்றிய எண்ணங்களையும், அண்ணல்பால் வாலியின் மனைவி தாரையும், மகன் அங்கதனுங் கொண்டு வைகிய அளவற்ற பற்றுதலையும் கண்டோம். ஒருவருக்கொருவர் இவ்வளவு சிறந்த அன்புடையவர்கள், இடையில் வாலியின் பெரும் பிரிவு நேரத்தில் எப்படி நடந்து கொண்டிருக்க முடியும் என்பதனை உன்னிப் பார்க்க வேண்டுமல்லவா?

இது வரையில் நாம் ஆராய்ந்து வந்தவற்றால், இவ் வழக்கில் மறைந்திருந்து வேலை செய்த பெருந்தலைவன் அனுமன் என்பது தெளிவு. வாலியை அனுமனுக்குப் பிடிக்காமல் போனதற்குக் காரணம் உண்டு. அனுமன் வாழ்நாள் முழுதும் மாணவ நோன்புள்ளவன். விளக்கமென்ன? பிரம சரிய விரதன். இதற்கு நேர் மாறானவன் வாலி எனத் தெரிகின்றது. ஓர் இனத்தில் எத்தனையோ குறைபாடுள்ளவர்கள் இருப்பார்கள். ஒரு நல்லவன் கருத்திற்கு அவையெல்லாம் வரலாமா எனக் கேட்கலாம். வரக் கூடாது. அனுமனுக்கும் வராது. ஆனால் வாலி ஒரு மூலை முடுக்கில் உள்ளவனல்லன். குல முதல்வன், பேராற்றலன், பெருமையில் ஒப்புயர்வு இல்லாதவன். அவனை "எனைத் துணையராயினும் என்னாம் தினைத் துணையும் தேரான் பிறனில்புகல்" என எண்ணி விட்டனன் அனுமன். அனுமன் எண்ணம் வாலி தங்கள் இனத்திற்குத்

தேவையற்றவன் என்ற முடிவிற்கு வந்துவிட்டது. வந்து என்ன செய்வது? தங்கள் இனத்தவர் பலமும் தனது முழு பலமும் கொண்டு அடர்ந்தாலும் அனுமனுல் வாலியை அழிக்கமுடியாது: அதற்காகக் "காலங் கருதியிருப்பர் கலங் காது ஞாலங் கருதுபவர்" எனப் பொறுத்திருந்தனன் அனுமன். அவன் காற்று உள்ளபொழுது தூற்றிக்கொள்வ தில் முனைந்துவிட்டனன்.

இராமபிரானுக்குத் தேவி நீங்கிய பிறகு சிந்தனை மெலிந்துவிட்டது. அத்தேவியை அடைய யாரார் என் னென்ன வழிகளைச் சொல்லினுர்களோ அவையெல்லாம் பிடித்தமுள்ள வழிகளாகவே தெரிந்துவந்தன. அவற்றை ஆய்வதில் கருத்துச் செல்லவில்லை. இடைவழியில் இராம பிரானை மறத்தினுல் அணுகிய கவந்தனும் அறத்தினுல் அணு கிய சபரியும் சுக்கிரீபனைத் துணைகொள்ளுவது தேவியை அடைவதற்கு மிக்க உதவியாக இருக்குமென வழிகாட்டி விட்டார்கள். அவர்கள் காட்டிய வழியில் இராமபிரான் முழு மனதும் வைத்து நடக்க முற்பட்டு விட்டனன். அவ் விருவரும் வகுத்த அடிப்படையே சுக்கிரீவனுக்கு இராம பிரான் அளித்த வேண்டாத வாக்குறுதிகள்.

சுக்கிரீவனை அணுகியபொழுதே அண்ணல் தான் அவனை ஆட்கொள்ளும் திறத்தில் பேசவில்லை. அவனைத் தனக்கு ஈடாகவும் இன்னும் கொஞ்சம் தன்னைவிட அதிகனுகவுங்கூட எண்ணினன், பெசினன், ஏந்தலெனத் திடம்படக் கூறலாம். முதலில் இராமபிரான் ஈடற்ற சுக்கிரீவனை ;ஐயா' என அழைத்தனன். அப்படி அழைத்துக் 'குற்றமற்ற சபரி உன் இருப்பினை எங்களுக்கு உரைத்தனள். நாங்கள் ஒரு பொரு ளைக் கைநழுவ விட்டுளோம். அதனுல் பெருந்துன்பம் நேர்ந் துள்ளது. அத்துயரத்தை உனது உதவியினுல் நீக்கிக்கொள்ள நம்பி வந்துள்ளோம். துணை வரவேண்டும்' எனவேண்டிக் கொண்டனன்.

இங்கு இராமபிரான் வெள்ளை மனமாகச் சுக்கிரீவனிடத் தில் ஒழுகினுன். எங்கள் துயரம் உன்னுல் தீரும் என்கின்ற னன் இராமன். அவன் வாலி வதை இவ் வண்ணலால்

ஆகுமா? எனக் கருதி மராமரத்தைத் துளைக்க வைத்துப் பார்க்கின்றனன். இங்கு ஏந்தல் தனது மரியாதையையும் வல்லமையையும் அவனுக்கு வாரிக்கொடுத்து விட்டனன். வள்ளலின் உளப்பாங்கு, தான் அவனுக்குச் செய்யப்போகின்றது சிறியதாகவும், அவன் தனக்குச் செய்யப்போகின்றது பெரியதாகவும் எண்ண நின்றது. அதனுல்தான் 'உனக்கு உற்றவர் எல்லாம் எனக்கு உற்றவர், உனக்குப் பகைவர் எல்லாம் எனக்குப் பகைவர்' என வாக்களிக்க நேர்ந்தது. இந்தத் தாராள வாக்குறுதி வாலியை நின்று நிதானித்துப் பார்க்க இடங் கொடுக்காமல் புறக்கணித்து விட்டது.

இராமபிரான் சுக்கிரீவனைத் தனக்கு உதவியாளனுகக் கருதுகின்றனன். அவனும் ஒருவருக்கொருவர் கைம்மாற்று செய்துகொள்ளக் கூடிய ஈடானவர்களாகக் கருதினுன். வாலியோ தனது கேள்வியால் இராமபிரானுக்கு எத்தனையோபடி தான் கீழ்மையானவன் எனத் தன்னை மதிக்கின்றனன். அவ் வாலியின் ஆற்றலை இவனுக்கு வாக்களித்த பின் அறிந்தனன் வள்ளல். அவன் அன்பின் வெள்ளத்தை, அவனது உயிரை ஒய்வித்தபின் அறிந்தனன் பெருந்தகை. என்ன தான் செய்வது ஏந்தல்? "நிலத்திற் கிடந்தமைகால்காட்டும், காட்டும் குலத்திற் பிறந்தார் வாய்ச்சொல்" என்றபடி வாலியினது வாய்ச்சொற்கள்வளர வளர, 'ஓ! நான் இவ்வளவு அன்பனையா அடர்ந்தேன்' எனத் தளரத் தலைப்பட்டனன் தலைவன். வாலி இராமபிரானை முதல் தடவை வினவிய வினுக்களின் சுருக்கம், நான் எவ்வகையிலும் பகைவனல்லனே என்னை ஏன் அடர்த்தனை என்பதே. இராமபிரான் நீ எனக்குப் பகைவன் அல்லன்.உனது தம்பி எனக்கு நண்பன். அவனுக்கு நீ தீங்கிழைத்தனை. அதனுல் தண்டித்தனன் என்றனன். அடுத்த தடவை தம்பிக்கு யான் செய்த தவறு எங்கள் குல தர்மப்படி குற்றமாகாது என்றனன் வாலி. வள்ளல் நீ பெரிய சிவபக்தன், கற்றவன், அறமெல்லாம் விளங்கினவன், பெரியவன் செய்த பிழை பெரிய தண்டனைக்கு இடமாயிற்று என்றனன். 'ஓ என்னை உயர்ந்தவனுக மதித்தனையாதலால் ஒரு உயர்ந்த குற்றவாளி ஆக்கினை.

நல்லது, இப்படி தண்டித்தது சரி, அதற்கு 'மறைந்து நின்ற தேன்?' எனக் கேட்டுவிட்டான் வாலி.

அந்த வாலியின் சொல், "பிறிதோர் சொல் தன் சொல்லை வெல்லுஞ்சொல் இல்ல" தாயிற்று. மாண்பிற் சிறந்த மன்னவன் "தீய வழுக்கியும்" சொல்ல இசையதாயிற்று. ஒரு பெருந்தலைவன் இடருறும் நேரத்தில் தனக்கு இசைந்த ஒன்றைச் செய்யவேண்டிய இளவல் ஒரு கட்டுரையைக் கூறினன். அது கட்டுரை எனத் தெரிந்ததும், தனது குற்றம் குற்றமே அதற்கு தீர்வு தனது மனம் மதித்ததொரு தலைமகனால் நேர்ந்ததும் ஒரு நற்செயலே என்ற மனப்பாங்குடன் தனக்கு விடையை நாடாமல் விடுதலையில் விருப்பமாகி உள்ளம் ஒருப்பட்டு உயர்ந்தனன் வாலி.

இராமபிரான் மீது தான் சுமத்திய குற்றங்களை அடியோடு விட்டுவிட்டுத் தனது குற்றங்களை அடியோடு விட்டு விட்டுத் தனது குற்றங்களுக்கு மன்னிப்பும் கேட்டுக் கொண்டனன் வாலி. இச்செயல் சான்றாண்மையின் பாற்பட்டது. இராமபிரானிடத்தில் தோல்வியைக் கொள்ளுவதில் அவன் முந்திக்கொண்டவனாகி விட்டனன். "சால்பிற்குக் கட்டளை யாதெனில் தோல்வி துலையல்லார் கண்ணுங் கொளல்." பிறகு வாலி பேசிய அனைத்தும் மனிதத் தன்மையுள்ள எவரையும் உணர்ச்சி வசப்படுத்துவனவாகும். பாரதக் கதையில் ஒரு இடம் உண்டு. துரியோதனன், தருமனைச் சீரழிக்க எத்தனையோ வழிகளைக் கண்டனன். அவற்றுள் கடைசியாகக் கண்டது ஒன்று. அது ஒரு நல்லவனையே கொண்டு அந்த நல்லவனைத் தொலைப்பது. அதற்கு அவன் தேடிப் பிடித்தது துர்வாச முனிவனை. அம் முனிவனுக்குப் பெரும் பூசனை செய்து விருந்திட்டனன் ஒருநாள். முனிவன் மகிழ்ந்து உனக்கு வேண்டிய வரத்தைக் கேள் என்றனன். துரியன் 'நாளை இப்பகல் நேரத்தில் வனத்தில் வைகும் தருமனிடத்தில் சென்று உங்கள் திருக்கூட்டத்துடன் உணவு கொள்ள வேண்டும். இதுதான் எனது வேண்டுகோள்' என்றனன்; அப்படியே முனிவன் சென்றனன். வரவேற்ற தருமன் குளித்து வருக என்றனன். முனிவன் வருவதற்குள் கண்ணனை வேண்ட அவ்வண்ணல் வந்து ஒரு பருக்கையைத்தான்

உண்டு, மாதவர் பசியை ஆற்றினன். நாடறிந்த கதை இது. இதில் தருமன் செயலுக்கு மகிழ்ந்த மாதவன், 'நேற்று துரியனுக்கு வரம் கொடுத்தேன். உனக்கு வேண்டுவதுளதேல் கேள்' என்றனன். தருமன், 'முனிவர் பெரும! அத் துரியன் அயலானல்லன். அவன் எனது தம்பி. உங்கள் பெருமை நினையாது பிழை செய்து விட்டனன். அவன் என்னைப் பகைத்தாலும் நான் அவனைப் பகைத்தல் எப்படி? அவன் சிறியவன். நான் அவனுக்கு மூத்தவன். ஆதலால் அவன் உங்களைக் கேட்டுக்கொண்ட கெட்ட கருத்துள்ள வரத்தை எண்ணி அவன்மேல் பெரு வல்லமையுள்ள உங்கள் கோபம் வராதிருக்க வேண்டும், எனக்காக அவனுக்குச் சாபம் ஒன்றும் இடாதிருக்க வேண்டும்' எனக் கேட்டுக் கொண்டானும். "பகைத்தோர் மாற்றங்கள் கருதி ஒன்றும் செய்யாதி யென்முன் வளையாச் செங்கோலான்". அற நுணுக்கத்தில் ஆழங்காற்பட்ட இடங்கள் இவைகளெல்லாம். அதுபோல வாலியும் தனது குற்றத்தை மன்னிக்க வேண்டுகின்றவன் தன்னைப் பற்றி ஒழுங்காகத் தெரிவித்து, அண்ணல், பேச்சில் தீர்த்துவிடக் கூடிய ஒன்றிற்குப் பெரும் படையெடுக்கச் செய்துவிட்ட சுக்கிரீவன் குற்றத்திற்கும் தான் மன்னிப்பு வேண்டினுன் என்ற இடம் எவ்வளவு வாலியின் அதி நுட்பமான அறநெறியைக் காட்டுகின்றது? மகிழத்தக்க தல்லவா? "நாயெனநின்ற எம்பால் (என்பாலல்ல) தீயன பொறுத்தி யென்முன்"

பின்னும் வாலி, தம்பியை அணைத்து அழுது அண்ணலுக்கு அறிமுகஞ் செய்து வைக்கின்றனன். எப்படி? தன்னைக் கொல்லக் கூட்டி வந்தவனுக்கு கொன்று முன்னிற்கும் பெருந்தகையைக் கொல்லுண்டு துடிப்பவன் அறிமுகஞ் செய்து வைக்கின்றனன். எந்தக் காவியத்தில் இப்படிக் காண முடியும்? பிறகு தன் மகனைத் தருகின்றனன். அடைக்கலப் பொருளாக. இது வாலியின் மூன்ருவது முறை விளக்கங்கள். இவற்றுள் இரண்டாவது முறையோடு இராமபிரான் பேச்சு நின்றது. மூன்ருவதான வாலி பொறுமை கோரல், தன்னுல் உதவ முடியாமைக்கு வருந்துதல், கையடைகள் தருதல், அனுமனை வேறே அறிமுகஞ் செய்வித்தல்,

அத்தனைக்கும் இராமபிரான் என்ன செய்திருப்பன் ''மூளாத்தீப் போல் உள்ளே கனன்று'' தான் வருந்தியிருப்பன், அல்லவா?

வாலி, மகன் அங்கதனைக் காட்டி இவன் உனது அடைக்கலம் என்று சொல்லி இராமன் அடிகளில் வணங்கினன். இது வாலியின் மூன்றுவது வணக்கம். முதல் வணக்கம் மன்னிப்புக் கேட்டபொழுது. இரண்டாவது வணக்கம் தம்பி சுக்கிரீவனை வள்ளலுக்குஞ் சுற்றத்தோடும் அடைக்கலம் தந்த அப்பொழுது, மூன்றுவது, மகனை அடைக்கலம் தரும் இப்பொழுது.

அண்ணலுக்குள்ள பொறுப்புகள் இங்குப் பல, வாலி வேண்டுகோளைத் தான் வெளியிட வேண்டும். வாலி மேல் வந்த தனது கோபம் மாறிற்று இன்னும் இல்லையா என்பதும் தெளிவாக வேண்டும். அவன் தனது செயலுக்கு வருந்தி மன்னிக்க வேண்டினன். வள்ளல், தான் செய்தது முற்றிலும் சரிதானென்று சாதிக்கின்றனு, இது தவருக முடிந்தது எனத் தனது செயலில் நின்று பேதிக்கின்றனு என்பதும் வெளியாக வேண்டும். மேலும் இத்தனை வேண்டுகோளும் விடுத்த வாலிக்குப் பொறுத்துச் சொல்லுவோமென எண்ண இடமேயில்லாத நேரம் இது. வாலிக்கு நிற்க நேரமில்லை. உடலில் உயிர் ஒட்டிக் கொண்டிருக்கின்றது. பிரிந்து பறக்க வள்ளலின் வாய்ச் சொல்லை எதிர்பார்க்கின்றது. "தன்னடி தாழ்தலோடும் தாமரைச் செங்கணுனும் பொன்னனுடை வாளை நீட்டி நீ யிது பொறுக்கி என்ருன்''. இராமபிரான் தாள்களில் வீழ்ந்து வணங்குகின்றனன், ஒப்புரவில் உலகத்திற்கே ஒருவன் எனச் சொல்லத்தக்க வாலி. எதிர் நிற்பவன் யார்? தாமரைச் செங்கணுன். (கண்ணிற்கணிகலம் கண்ணோட்டம் அஃதின்றேல் புண்ணென்றுணரப்படும்'') கருணைக் கண்ணனுன அண்ணலுக்கு இங்கு இருவித வேலைகள். வணங்குபவனைக் கைகொடுத்து எடுக்கவேண்டும். எடுத்தபின் அவனை வாயார வாழ்த்த வேண்டும். சமத்துவமுள்ள அல்லது ஒருவரையொருவர் உற்றறியாத இருவர்

கூடுகின்றபொழுது ஒருவன் வணங்கியவுடனே எதிர்வந்த வரும் ஈட்டுற்கீடாக வணங்குவதுதான் உலக இயல்பு. ஆனால், எல்லா இடத்திலும் இது முறையாகாது. ஓர் ஆச்சாரியன் எதிர்வரும் சற்சீடன் வணங்குகின்றபொழுது அவனை ஆச்சாரியனும் சமமாகக் கருதி வணங்கிவிடலாகாது. ஒருக்கால் அப்படி ஆச்சாரியன் வணங்கினால் அதற்காகச் சீடன் மகிழ மாட்டான். அச் சீடன் குருவிற்கு வேண்டா வெறுப்பன் என்றுதான் பொருள்படும். இங்கே இராம பிரானை உலக உத்தமனாக தேவ தேவனாக மதிக்கும் வாலி வணங்குகின்றான். இராமனும் அப்படியே வணங்கினால் அவ் வணக்கங் கண்டு வாலி மகிழ்ந்து விடமாட்டான் அவன் மேலும் துடிதுடிப்பான். இராமபிரான், அரசர்களுக்கு அவர்களது சிரத்திலும் சிறந்ததாகக் கருதப்பெறும் உடைவாளை, வாலிக்கு எதிராக நீட்டினன். வாலியை வெட்டு முகத்தாலல்ல, வாலியின் தோள்களைத் தொட்டுத் தூக்கி விடும் பாவனையாக.

வாலியை அவன் வினைக்களை வேண்டுகோள்களை ஏற்றுக் கொண்டாயிற்று என்று விளங்கிற்று. இனி வாழ்த்த வேண்டும். வாலி, இராமபிரான் வாழ்த்துகளை எதிர்பார்க்கின்றனன். ஆனால் உள்ளத்திற்குள் ஒரு குறைபாடு வந்து விட்டால், அதனைத் தீர்த்துக்கொள்ளும்வரை உயர்ந்த உள்ளங்களுக்கு அமைதியுண்டாகாது. பரம பக்தன் நெஞ்சில் தனது கணை பாய்ந்ததே என்ற வருத்தத்தில் நிற்கும் வள்ளல் வாழ்த்துவது எங்கே? அவ் வருத்தத்தை மாற்றிக் கொண்டால் வாழ்த்தியது போலத்தான். உள்ளத்துள்ள குறைபாடுகள் எப்படி மாறும்? வாய் வழியாகத்தான் மாறும். வாளாவிருந்த வள்ளல் வாய் திறந்தனன். அவன் வாய் திறந்து பேசியது என்ன? வாலி முன்பு பேசியதையே தான் இப்பொழுது பேசினன். வாலி என்ன பேசினன்? "தீயன பொறுத்தி" என்றான். வள்ளல் வாளை நீட்டி என்ன பேசினன்? "நீ யிது பொறுத்தி" என்றான்.

"தாயென வுயிர்க்கு நல்கித்
தருமமும் தகவும் சால்பும்

நீயென நின்ற நம்பி
நெறியினில் நோக்கும் நேர்மை
நாய்என நின்ற எம்மால்
நவையற வுணர லாமே
தீயன பொறுத்தி யென்றான்
சிறியன சிந்தி யாதான்'' *(வாலி வதை 119)*

"தன்னடி தாழ்தலோடும் தாமரைச் செங்கணானும் பொன்னுடை வாளை நீட்டி நீயிது பொறுத்தி" என்றான். "செங்கணானும்" என்ற உம்மை எண்ணும்மை. அது முன்னே வாலியும் இராமனைப் பொறுக்கும்படி வேண்டிக் கொண்டனன். இப்போது வள்ளலும் வாலியை நடந்துவிட்டதை 'இது' என்ற குறிப்புச் சொல்லினால் விளக்கி, பொறுத்தி என்றான். வாலி முன்னமே பொறுத்துக்கொள் என்று கேட்டுக்கொள்ள இராமபிரான் இவ்வளவு காலங்கழித்து அப்படி வேண்டியதேன்? இராமபிரான் நிலைகளை அவன் முன்னமே கேட்டறிந்தவன். ஆதலால் இராமன் பண்புகள் ஊறிக்கிடந்த வாலியின் உள்ளம் விரைவாக முடிவிற்கு வந்துவிட்டது. உண்மையைச் சொல்லுவாரின்றி வாலியின் பண்புகளை நேரில் அவனது செயலைக் கண்டும் சொற்களைக் கேட்டுமே இராமபிரான் உணர்ந்து கொண்டே வரவேண்டியிருந்ததனால், காலங்கழித்து ஒரு முடிவில் ஊன்ற வேண்டி வந்தது இராமபிரானுக்கு. வாலியின் செயல்களில் இவ்வளவுங்கண்டு தனது மகனை அடைக்கலந் தரும் நிலை மிக உயர்ந்த இடத்தைப் பெற்றுவிட்டது.

"கற்பிளவோ டொப்பர் கயவர்; கடுஞ்சினத்தில்
பொற்பிளவோ டொப்பாரும் போல்வரே விற்பிடித்து
நீர்கிழிய எய்த வடுப்போல மாறுமே
சீர்ஒழுகும் சான்றோர் சினம்"

என்றபடி, ஒன்றுபட்ட இரு பெரு மக்களில் வாலி, "தீயன பொறுத்தி" என்றனனே. அப்பொழுதே அவனது உள்ளக் கிடக்கையை உலகம் அறிந்து கொண்டது. இராமன் பண்பு வாலிக்கு உயர்ந்ததா—தாழ்ந்ததா எனப் பட்டிமண்டபமா அமைக்க வேண்டும்? அவ் வாலியேதான் ஆயிர முகத்தால்

உயர்ந்தது உயர்ந்தது என ஓயாது உரைத்து வருகின்ற னனே, உரைத்து வருகின்முன். அவனுரைத்ததைக் கொண்டு ஒத்துக் கொள்ளுவது எப்படி? அவன் உரையி னளவு அண்ணலின் உள்ளமும் வெளிப்படத் தோன்ருத பொழுது உலகம் எப்படி ஒத்துக்கொள்ளும்? இமை கொட்டும் நேரமாகவும், அண்ணலின் சொல்லே எதிர்பார்த்துக் கொண்டிருந்தன ஏழுலகங்களும். அவன் "நீயிது பொறுத்தி' என்றனன்; என்னலும் உலகமேழும் ஏத்தின.

இராமபிரான் உலகத்தை ஆண்டனன். பெருமையுற வாழ்ந்தனன். என்னென்ன சிறப்புகளோ பெற்றனன். ஆனுல், இராமபிரானே உலகமெலாம் ஏத்தியது இரண்டு முறைதான். இராவண யுத்தம் முடிந்துவிட்டது. தேவி மீண்டும் வந்தாயிற்று. வானவர் பூமாரி பொழிந்து அங்குற்றனர். அண்ணலைப் பெற்ற பெருமகனும் அகமகிழ்ந்து அங்குற்றனன். பெருந்தகை தசரதன் அடிகளில் தாழ்ந்தனன் தலைமகன். அவனே வாரியணைத்தனன் தசரதன். அணைத்து உனக்கு வேண்டிய வரங்களைக் கேள் என்றனன் பேரரசன். இராமபிரான், 'தந்தையே என் பொருட்டாக நீங்கள் இருவரை முன்னே கொடியவர் எனக் கொண்டு விலக்கி விட்டீர்கள். அவரிருவரும் எனக்குரியார், எனது முதல் தெய்வம் (கைகேயி) ஒன்று; எனது தம்பி மற்றவன். இருவரையும் முறையே எனக்குத் தாயாகவும் தம்பியாகவும் தருதல் வேண்டும். இப்பெரு வரத்தினும் யான் பெறத் தகுந்த பேறு ஒன்றுமில்லை' என வேண்டிக் கொண்டனன். அரசன் அவர்களைச் சேர்த்துக் கொள்ளா விடின் தனக்குத் தாயாகவும் தம்பியாகவும் ஆதல் உலகம் ஒப்பும் முடிவாகாதாதலால் உள்ளத்தின் பேராழத்தில் கைகேயிக்கும் இடமிருந்தது என் அறிந்த பெருமகிழ்ச்சி உலகத்தையே உருக்கிவிட்டது. அப்பொழுது உலகெலாம் இராமபிரானே வாழ்த்தி அவன் திறத்தில் ஆழ்ந்துவிட்டன. அது போலவே—

வாலியின் அன்பின் பெருக்கை ஒத்துக்கொண்டு, பரமனுகிய இராமபிரான் பக்தனிடத்தில் படும் தனது

தோல்வியை வரவேற்று அவன் "பொன்னுடை வாளை நீட்டி நீயிது பொறுத்தி யென்றான் என்னலும் உலகம் ஏழும் ஏத்தின ;

தசரதன்பால் அண்ணல் கேட்ட வரம் :

" ஆயினும் உனக்கமைந்ததொன் றுரையென அழகன்
தீயர் என்றுநீ துறந்தஎன் தெய்வமும் மகனும்
தாயும் தம்பியும் ஆம்வரம் தருகெனத் தாழ்ந்தான்
வாய்திறந்தெழுந் தார்த்தன வுலகெலாம் வழுத்தி"

—*மீட்சி படலம், 128.*

பொறுத்துக்கொள்கவென வாலியை வேண்டியதற்கு இராமபிரானை உலகம் ஏந்தியது :

" தன்னடி தாழ்தலோடும் தாமரைச் செங்கணானும்
பொன்னுடை வாளைநீட்டி நீயிது பொறுத்தியென்றான்
என்னலும் உலகம் ஏழும்ஏத்தின இறந்துவாலி
அந்நிலை துறந்துவானின் அப்புறத் துலகன் ஆனான்"

—*வாலி வதை, 159.*

இங்கு இராமபிரான் உள்ளத்தால் பொய்யாது ஒழுகினன். அதனால் உலகத்தார் உள்ளத்துள் எல்லாம் உளனாகினன் அல்லவா ?

" உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன்."